"பஞ்சாமிர்தம்" பிரசுரங்கள்—2.

# தட்சிண சரித்திர வீரர்

தளவாய் அரியநாத முதலியார்



மதுரைக் கோயிலில் அவர் கட்டிய ஆயிரக் கால் மண்டபத்திலுள்ள அசுவாரூடச் சிலை யுருவம்.

# தட்சிண

# சரித்திர வீரர்

அ. மாதவையர்

எழுதியது

பதினொரு படங்கள்

“பஞ்சாமிர்தம்” ஆபீஸ்

மயிலாப்பூர் - சென்னை

பக்கணை] 1925 [காபிரைட்

*All Rights Reserved.*

# பொருள் அடக்கம்

சிறப்புப் பாயிரம் ... vii

முன்னுரை ... 1

I. தளவாய் அரியநாத முதலியார்:—

1. பிறப்பு வளர்ப்பு ... 4
2. இராஜ சேவை ... 10
3. மதுரை நாயகர் வம்மிச ஸ்தாபனம் ... 23
4. தலைக்கோட்டைச் சண்டை ... 39
5. "சுற்றந்தழால்"—வாழ் நாள் மாலை ... 58

II. மைசூர் ஹைதர் அலி ... 68

III. கான் சாயபு கம்மந்தான்:—

1. பிறப்பு வளர்ப்பு முதலியன ... 86
2. தெற்குச் சீமையை வாழ்வித்தல் ... 100
3. சென்னை முற்றிக்கை—கலியாணம் கவர்னர் ... 110
4. கடை மூவாண்டுகள் ... 121

இலக்கணக் குறிப்பு—பிழைதிருத்தம் ... 138

# சித்திரப் படங்களின் விவரம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவாய் அரியநாத முதலியார் | ... | முகப்பு |
| 2. | விஜய நகரம்—ஒரு கோட்டை வாசல் | ... | 13 |
| 2. | ஷை — ஆஸ்தான மண்டபம் | ... | 19 |
| 4-5. | மதுரை—பழைய கோட்டையின் பாகங்கள் | | 35 |
| 6. | விஜயநகரம்—யானைக் கொட்டகை | ... | 55 |
| 7. | மதுரை—கிழக் கோபுரம் | ... | 61 |
| 8. | ஷை — புதுமண்டபம் | ... | 65 |
| 9. | மைசூர் ஹைதர் அலி | ... | 70 |
| 10. | ஷ்வார்ட்ஸ் பாதிரியார் | ... | 77 |
| 11. | கான்சாயபு பள்ளி வாசல் | ... | 136 |

# சிறப்புப் பாயிரம்

(இந் நூலைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்)

மகாமகோபாத்யாய பண்டிதர் உ. வே. சாமிநாதையர்:—

"ஆடு கோடாகி யதரிடை நின்றதூஉங், காழ் கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும், வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான், றாழ்வின்றித் தன்னைச் செயின்" என்னும் ஆன்றோர் திருவாக்கிற்கு இலக்கியமாக விளங்கும் தளவாய் அரியநாத முதலியார் முதலியவர்களுடைய உண்மை இயல்புகளை விளக்கும் 'தக்ஷிண சரித்திர வீரர்' என்னும் புத்தகத்தைப் படித்து இன்புற்றேன். அவர்களுடைய வரலாறுகள் மகா-ள-ள-ஸ்ரீ அ. மாதவையரவர்களால் மிகவும் செவ்வையாக இதில் எழுதப் பெற்றுள்ளன. இதனைப் படிப்பவர்களுக்கு அறிவின் வளர்ச்சியும் ஊக்க முதலியனவும் உண்டாகுமென்பது திண்ணம். இன்னும் இவை போன்ற அரிய பெருமக்களுடைய அற்புத சரித்திரங்களை எழுதி வெளியிடும்படி தமிழ் நாட்டார் ஸ்ரீ மாதவையரவர்களுக்கு ஊக்க மளிப்பார்களென்று நம்புகிறேன்."

*Mr. S. Anavarata Vinayakam Pillay,* M.A.L.T.—

The three lives are indeed interesting and I should say well-written. Historical information presented in this manner is readily absorbed and is bound to greatly benefit our boys and girls. The book will form a fitting reader for students in our schools and colleges. I hope you will follow this up with accounts of some more heroes whose lives are equally inspiring. * * "

*Pandit C R. Namasivaya Mudaliar, Lecturer, Queen Mary's College for Women, and Chairman, Tamil Board of Studies, Madras University* :—

" 'தென்னிந்திய சரித்திர வீரர்கள்' என்னும் நூலைச் சிற்சில இடங்களிற் படித்துப் பார்த்தேன்; வசன நடை ஆற்றொழுக்காகச் செல்கின்றது. இயற்கை நவிற்சியான சரித்திர நூல்கள் இக்காலத்தே பெரிதும் பயன்படுவனவாம். இவ் வகையில நண்பர் மாதவையர் மேற்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கதாம்."

*Rao Bahadur Principal K. V. Rangaswamy Aiyangar,* M. A., F. R. H. S. etc.

" * * I have read it with very real pleasure. I found the lives of Aryanatha and Yusufkhan particularly enjoyable The facts and illustrations have been well chosen, and the stories are peculiarly fitted for study in our schools. It would be presumption in me to offer any opinion on the literary merits of any work of yours.. But I might be permitted to express my admiration for the care taken to ensure historical accuracy and at the same time to make the stories attractive and instructive. I hope that this little book and other historical stories of the same kind which you might find it possible to write, will be widely read. * *

# தக்ஷிண சரித்திர வீரர்

## பைந்தமிழ் நாட்டுச் சரித்திரம் பகர்பல
## விருதைகள் வீரச் செயல்கள் மிளிர்கதை

# முன்னுரை

இந்தியா சரித்திரவுணர்ச்சி இல்லாதவர் என்று, மேல் நாட்டார் கூறுவர். இராசதரங்கிணி, பௌராணிய வரலாறுகள், மகாவம்சம், கருநாதர் அச்சுதராஜ்ய சரித்திரம் போன்ற பழைய நூல்கள் சில, நமது சரித்திர உணர்ச்சி ஓரளவு உண்மையைக் காட்டும், எனினும், மிகப் பல அரசர்கள் ஒரே காலத்தில் ஆட்சிபுரிந்து தழைத்தோங்கிய பாரதகண்டத்தின் பெருமையையும் இலக்கிய நூல்களின் அருமையையும் தூக்கி நோக்கின், அவ்வசை முற்றிலுமே நமக்குப் பொருந்தாதென்று மறுக்க ஒண்ணாது. தலபுராணங்களில் பெரும்பான்மை சரித்திர நிருமாணத்துக்குப் பயன்படுவன அல்ல; கோயிலொழுகு திருப்பணிமாலை போன்ற நூல்கள் அறக் குறுகிய நோக்கத்தோடு வரையப்பட்டன; கல்வெட்டுக்கள் செப்புப் பட்டயங்கள் ஆகிய

வோ, சரித்திர வுணர்ச்சியால் தூண்டப்பட்டாகு, தம் புகழ்ச்சி நிமித்தமாகவும் சொத்துரிமை ஸ்தொடை உரிமைகளை நிலைநாட்ட நிமித்தமாகவும் பொறிக்கப் பட்டன வாம். இக் குறையினால், நம நாட்டிலே பல துறைகளில் புகழுற்று விளங்கிய பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை இக்காலத்தில் எழுதப் புகுவோா, தினசரி நடவடிக்கை களின் விவரங்கள் கிடக்க, அன்னார் பிறந்த மணந்த இறந்த இடம் காலம், பெற்றோர் உற்றாரின் பெயர்கள், முக்கிய முக்கிய விஷயங்களையுமே, சிற்றிலை பேரோலை களுக்குள் ஒருவாறு பொருத்தி, ஊக அனுமானங்களைக் கொண்டே அறிந்து கொள்ள வேண்டியவரா யிருக்கின்ற னர். ஆகையால், மலையிலக்கான கால தேச வர்த்தமானங்க ளோடும் சரித்திர நிகழ்ச்சிகளோடும் மாறுபடாது தந்தை மகற்குரைக்கத் தலைமுறை தலைமுறையாக வரும் கதைகளையும் ஐதிஹ்யத்தையும் மரபையும் துணைக்கொண்டு தான், இத்தகைய வரலாறுகளை ஒருவாறு உருப்படுத்தி எழுதலாகும்.

இவ் வண்ணம் சரித்திரம் வரைவதில், நாம் நன்கறி யாத பழக்க வழக்கங்கள் நடைபெறும் வேறுப் பிர தேசங்களில் விளங்கினோரைப் பாத்திரங்களாகக் கொள் வதினும், நமது நேர் முன்னோர் எனத் தகும் தெற்கு நாட்டினரையே கொள்வது மிகப் பயனளித்து, படிப்பவர் மனத்தில் பழத்தில் ஊசி போல இறங்கி வேரூன்றி, சரித் திர வுணர்ச்சியையும் நமது தொன்னிலையைப் பற்றிய அறி வையும் வளர்க்குமென்று கருதி, தென்னிந்திய சரித்திர வீரர் சிலர் வரலாறுகளை எழுதலானேன். பள்ளிப் பாடங் களாகும் சரித்திர நூல்களில் பரக்கக் காண்பனவற்றை

# முன்னுரை

மீண்டும் நான் எடுத்தோதுவது மிகையாகுமென்றெண்ணி, அவசிய விவரங்களை நீக்கி, சாமானிய சரித்திரங்களில் காணக் கூடாதனவற்றையே பெரிதும் கையாண்டிருக்கின்றேன் ஓர் சரிதைக் கதையும் உரைத்தற்குள்ளது: இக்கதைகளை, கேவலப் பொய்ச் சரித்திரக் கூற்றுக்களாகக் கொண்டுவிடக் கூடாதென்பது, ஆதியில் கூறிய ஏதுக்களால் தேறும்; ஆயின், இவை, "பொய்யோடு இடை மிடைந்தன"வும் அல்ல; சரித்திர உண்மைகளும், அவற்றோடு முரணாத மெய்ப்போக்கான கட்டுரைகளும் விரவியனவேயாம்.



# 1. தளவாய் அரியநாத முதலியார்

## 1. பிறப்பு வளர்ப்பு

"பொன் எயிற் காஞ்சி" என்றும்,

"தேவர் கோமான் காவல் மாநகர்
மண்மிசைக் கிடந்தென, வளம் தலை மயங்கிய
பொன்நகர்"

என்றும், மணிமேகலையில் வருணித்த திருப்பதி, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சோழ ராஜதானிகளில் ஒன்றாகக் காஞ்சிமாநகரம் பலவளம் செறிந்து விளங்கினமைக்குச் சான்றாகும். பண்டைக் காலத்திற் போலவே பிற்காலத்திலும், தொண்டைமான்களுக்கும் பல்லவ ராஜர்களுக்கும் அது தலைநகராயிலங்கிற்று. இத்தகைய சீர் புகழ் வாய்ந்த காஞ்சிபுரத்தின் அருகே, மெய்ப்பேடு என்னும் ஊரிலே, ஏறத்தாழ இற்றைக்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர், நம் கதா நாயகரான அரியநாயக முதலியார். இவர் பெயரை அரியநாத முதலியார் என்றும் கூறுவர். இவர் தொண்டைமண்டலச் சைவவேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவரது தாய் தந்தையர் பெயர்கள் தெரிந்தில. இவர் மகன் பெயரைக் கொண்டு, இவர் தந்தையின் பெயர், ஒருகால் காளத்தியப்பர் என்று ஊகிக்கலாம். சுதேச மன்னர்களின் ஆட்சியிலே அமைச்சராயும் தளகர்த்தராயும் பணியாற்றி

கோட்டை கொத்தளத் தலைமையும் இராச மரியாதை விருதுகளும் பெற்று, தொண்டமண்டல வேளாளர்களில் இருபத்து நான்கு குடும்பத்தார்கள் வாழ்ந்து வந்தன வென்றும், அந்தக் குடும்பங்களில் ஒன்றே இவர் பிறந்த தென்றும், கூறுவர் சிலர். அது எங்ஙனமாயினும், இவர் பிறக்கும் போது, இவர் குடும்பத்தினர் ஏழைகள் என்பது திண்ணம்; என்றாயினும் இவர் முன்னோர் அடைந்திருக்கக் கூடிய புகழைவிட, இவர் படைத்துக் கொண்ட சீரும் சீர்த்தியும் மிகச் சிறந்தன என்பதும் உறுதியே.

இவர் பிறந்த இறந்த ஆண்டுகள் நிச்சயமாக அறியோம். கி. பி. 1495-க்கு முன்பு பிறந்து, 1595-க்குப் பிறகே இறந்தனர் என்னும் சரித்திர அனுமானக் கோட்பாடு, அசாத்திய மானது அன்றெனினும், அதிசய மாகவே தோன்றும். சிறு குழந்தையா யிருக்கும் பொழுது, ஒரு நாள், இவரைப் பாயில் கிடத்திவிட்டு, இவர் அன்னையார் நீர் கொணரப் போயினர். அவர் நீர் மொண்டுகொண்டு திரும்பி வருங்கால், ஒரு பெரிய நாகம் இவரைச் சூழ்ந்து வளைந்து படமெடுத்து நின்றது. அதைக் கண்டு திகிலுற்ற தாயார் கூச்சலிட, ஒன்றும் செய்யாது பாம்பு அகன்று நீங்கிற்று. இந்தச் செய்தியைக் கேட்ட முதியோர், உலக வாழ்க்கையிலே அக் குழந்தை பெருஞ் சிறப்புற்று விளங்குவான் என்று கூறினாராம். பாம்பினால் நிகழ்ந்த அற்புதத்தையும், பெரியோர் அதன் குறிப்பு இன்னதென்று கூறிய பெருமதக் கவினையும் நினைந்து, அரிய நாயகரின் தாய் தந்தையர், தம்மால் இயன்றமட்டும் அல்ல, தம் தகுதிக்கு மிஞ்சியே, தம் அருமை மகனைக் கல்வியிற் பயிற்றுவித்தனர். சிறு பருவம் தொட்டே, கணித

சாஸ்திரத்தில் அரிய பெரிய திறமையை இவர் காட்டி வந்தார். இவரது கணிதச் சூழ்ச்சியும் நுண்ணறிவும், பூர்வ ஜன்ம வாசனை என்னும்படி, படித்து மறந்ததை மீண்டும் நினைப்புறல் போல, யாவர்க்கும் வியப்பைத் தந்தன. இஃதன்றி, ஒத்த பருவத்துப் பிள்ளைகளுடன் கூடி விளையாடுவதிலும், மற்போர் விற்போர்கள் செய்வதிலும், மிக்க உற்சாகத்தையும் திறமையையும் இவர் கொண்டிருந்தார்; தம்மிலும் வயது மிக்க வாலிபரையும், எளிதிற் புறங்காட்டி வென்றுவிடுவர். மற்றெல்லோரினும் மிக்க வலிமையும் பயிற்சியும் உற்றிருந்ததுடன், உடல் வலிமையாலும் ஆயுதப் பயிற்சியாலும் முடித்தற்குரிய வீர சாகசச் செயல்களிலும், தன் கூரிய மதியையும் அரிய சூழ்ச்சியையும் இவர் பிரயோகப் படுத்தினதால், இவ்வண்ணம் பிறர் திகைப்புறும் படியான வீரச் செயல்களைச் செய்தல் இவர்க்கு எளிதாகவே யிருந்தது.

ஊர்ப் புறம்பே யுள்ள மைதானத்திலே, ஒரு நாள் மாலை, தன் தோழர்களுடன் இவர் விளையாடிக்கொண்டிருக்கையில், சோதிடம் ஆரூடம் இரேகைசாஸ்திரம் முதலிய வித்தைகளில் தேர்ந்த பிராமணர் ஒருவர், அவ்வழியே காஞ்சிபுரம் செல்பவர், இவரது சிலம்பப் பயிற்சியைக் கண்டு வியந்து, சிறுபொழுது பார்த்துக்கொண்டு நின்றனர். பிறகு, தாம கண்ட காட்சியால் அகமகிழ்ந்தவராய், அவ் வாலிபர் குழுவை அணுகி, இவரை அழைத்து: "சிலம்பத்தில் உன் கைவண்ணம் கண்டேன்; உன் கை ரேகைவண்ணத்தையும் சிறிது பார்ப்போம், காட்டு" என்று கேட்டார்.

தன்னினும் முதியோர் யாவரிடத்தும் ஒடுக்க வணக்க

மும், விப்பிரர்களிடத்து விசேஷ மதிப்பும் எப்பொழுதும் கொண்டொழுகும் அரியநாயகர், பெரியவரை வணங்கி, முதலிற் சிறிது வெள்கி, பிறகு தன் கையைக் காட்டினர். இரேகைசாஸ்திர நிபுணர், நொடிக்கு நொடி வளர்ந்தோங்கும ஆச்சரியத்துடன் அவர் கையை ஆராய்ந்து பார்த்து விட்டு, முடிவில், அவரைப் பார்த்து: "நான் ஒன்று சொல்கிறேன், கேள்: நீ இங்கு நிற்கும் உன் தோழர்களைப் போல் ஒருவ னல்லை; மகோன்னதமான ராஜயோகம் உனக்கு இருக்கிறது; இந்தக் குக்கிராமத்தில் நீ ஏழையாய் வாழ்ந்து கழிப்பது சரி யன்று; கூடிய சீக்கிரத்தில் இவ் வூரைவிட்டு நீங்கி, மகா ராஜாதிராஜ பரமேசுவரரான ராயலுவின் ஸம்ஸ்தானத்தைப் போய்ச் சேர். உன்போல் வார்க்கு அதுதான் தகுந்த இடம். அப்பால், நான் சொன்னேனே பார்: ராஜாதிராஜனாக நீ சோபிப்பாய். அந்தக் காலத்தில, நானாவது, என் மக்களில் யாராவது, உன்னிடம் வந்து, இப்பொழுது நான் சொலவதை ஞாபக மூட்டிக் கேட்டால, உன் சம்பத்தில நாலில ஒரு பாகமாவது கொடுப்பாயா? ஏழைப் பிராமணன் சொன்னனே, பிராமண வாக்குப் பலித்ததே என்ற நன்றி யிருக்குமா?" என்று கேட்டார்.

அரிய:—தாங்கள் சொல்வதுபோல நடந்தால், ஒரு நாளும் நான் தங்களை மறக்கமாட்டேன். நானோ ஏழை,—

பிராமணர்:—எனக்கு அது தெரியும்; தற்சமயம், என்னையும்விட ஏழையே நீ என்பதை, நான் அறிவேன். ஆனல், என் சொற்படி ராயலுவாரு ஸமஸ்தானததை நீ அடைந்தால், கொஞ்ச காலத்துக்குப பின், சுக்கிரன் வந்து ஏற்கும் போது, நீ ராஜபதவியை அடைவா யென்பதையும்,

கான நிச்சயமாய் அறிவேன். ஆனால் அப்பொழுது ஏழைப் பிராமணன் ஞாபக மிருக்குமோ என்பதுதான் சந்தேகம்.

அரிய:—ஸ்வாமி! தாங்கள் சந்தேகிப்பது கிரமந் தான்.

“அறன் நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல் அருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்”

என்று, கவிச் சக்கரவர்த்தி கூறி யிருக்கிறார். பெரியோர் சுபாவமே அப்படி யிருக்க, என்னைப் போன்ற ஒரு சாமானிய சிறுவனைப்பற்றித் தாங்கள் சமுசயிப்பது தவறாகாது. எனினும், இதோ பிறரும் இவ்வளவு பேர் முன்பாக, நான் தங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன். என் தாய் தந்தையரின் அனுமதி பெற்று, தாங்கள் கூறிய வண்ணமே நான் விஜயநகரம் போகிறேன். அப்பால், தங்கள் ஆசீர்வாதத்தினாலும் என் அதிர்ஷ்டத்தினாலும் என் வறுமை நீங்கி, நான் செல்வனானால், என் ஐசுவரியத்தில் கால்வாசி தங்களுக்குக் கொடுப்பது உறுதி.

பிரா:—செல்வனா? ராஜயோகம் என்கிறேனே! சரி; இந்த வீண் வாய்ப்பேச்சு செல்லாது வேண்டாம்; உன் கைப்பட எழுதிக் கொடு.

அரிய:—அப்படியே ஆகட்டும்; தடையில்லை.

இதைக் கேட்ட பிராமணர், எழுத்தாணியோடு கூடிய ஒரு சூரிக்கத்தியைத் தன் இடுப்பி லிருந்து எடுத்து, பக்கத்தில் கீழே காய்ந்து கிடந்த ஒரு பனையோலையை அதனால் சீவித் துண்டித்து, ஓலைநறுக்கையும் எழுத்தாணியையும் அவர் கையில் கொடுத்து, எழுதச் சொன்னார். பிரா

மனர் சொல்லிக்கொண்டுபோக, அப்படியே, அவர், அன்றைய தினத்தையும் நடந்த விருத்தாந்தத்தையும் குறிப்பிட்டு, அந்த ஓலைச் சீட்டைப் பின்னால் எப்பொழுது தன்னிடம் யார் கொண்டுவந்து காட்டினாலும், காட்டுபவருக்கு, அக்காலத்தில் தனக்குள்ள சம்பத்தில் காலவாசி கொடுப்பதாக எழுதி, தன் கைச்சாத்து மிட்டுக் கொடுத்தார்.

அரிய:—சுவாமி! தாங்களும் சொன்னீர்கள், நானும் எழுதித் தந்தேனே: தங்கள் ஊர் பேர் ஒன்றும் குறிப்பிட வில்லையே?

பிரா:—அதனால் உனக்கென்ன? நான் யாரானால் என்ன? இந்தச் சீட்டைக் கொண்டுவந்து காட்டுபவருக்கு, நீ கொடுக்க வேண்டியது; அவ்வளவு தானே.

நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற வாலிபர்களில் குறும்பன் ஒருவன்: "ஒருவேளை இன்று சொன்ன குறி பொய்யாய்ப் போனால், எல்லாரும் கேலி பண்ணுவார்களென்று சுவாமிகளுக்குப் பயம் போலிருக்கிறது. அதுதான் ஊர் பேர் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்" என்று, பரிகாசம் செய்தான்.

பிரா:—அந்தச் சங்கதி பின்னால் பார்க்கலாமே.

வாலிபன்:—அதிருக்கட்டும், சுவாமிகளே; குறி பலியா விட்டால், அரியநாயகத்துக்குத் தாங்கள் என்ன கொடுப்பீர்கள்?

பிரா:—நான் கொடுக்கிறதா! என் சரித்திரத்தில் காலவாசி யன்று, பாதி வேண்டுமானாலும், முழுதையுமே வேண்டினாலும் கொடுத்து விடுகிறேன். வேறு நான் என்ன கொடுக்கக் கூடும்? இந்த விவாதமும் சங்கையும்

வீணை: குறி பலிக்கவே செய்யும். நான் போய்வருகிறேன். வாக்கைமட்டும் மறந்துவிடாதே" என்று சொல்லி, ஓலைச்சீட்டைப் பத்திரமாய் இடுப்பு வேஷ்டியில் மூன்று தரம் சுருட்டித் தெறித்துக்கொண்டு, போய்விட்டார்.

அவர் சென்றபின்பு, அரியநாயகரின் தோழர்கள், அவரை "ராஜாதிராஜன்!" என்றும், அவர் சக்கராதிபத்தியத்தில் தங்களுள் ஒவ்வொருவருக்கும் என்ன என்ன உத்தியோகம் வேண்டுமென்றும் கூறி, பரிகாசம் செய்யலாயினர்.

## 2. இராஜ சேவை

தற்காலத்து மைசூர் இராஜ்யமும் தென்கன்னடம் வடகன்னடம் ஜில்லாக்களும் சேர்ந்த பிரதேசத்தின் பெரும்பாகம், முற் காலத்தில் கடம்பர் இராஜ்யமாக விருந்தது; கடம்ப மன்னர்கள், ஆதி தொட்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை வணங்கா முடியினராயும், அது முதல் சாளுக்கிய அரசர்களுக்கு உட்பட்டவராயும், ஆண்டு வந்தனர்; வானவாசி என்னும் வைஜயந்தி நகரம், அவர்க்கு இராஜதானி; கடம்ப வேந்தர் குலத்து ஹரிஹரன் என்பவன், கி. பி. 1329-ம் ஆண்டில், துங்கபத்திரை நதிக் கரையிலே ஆனகுந்தி வித்தியாரணிய நகரத்தைத் தன் இருப்பிடமாய்க் கொண்டு, ஒரு புதிய ஸ்வய ராஜ்யத்தை ஸ்தாபித்தான்; கடம்பர் மரபினனான அவன் முளைப் பிடித்த இராஜ்யமே, பின்பு விஜயநகர ஸம்ஸ்தானமாகத் தழைத்தோங்கியது என்பன, சிலர் கூற்றுக்கள். விஜயநகர அதிபதிகளான கருநாடக—தெலுங்க அரசர்கள், இராயர்,


இராயலு என்னும் பட்டத்தை வைத்துக்கொண்டனர். இவ்வரசர்களில் புகழ் மிக்க கிருஷ்ணதேவராயர், கி. பி. 1509-ல் பட்டத்துக்கு வந்து, தன் அரசாட்சியை நாலு பக்கமும் பெருகச் செய்து, தமிழ் நாட்டு மூவேந்தருக்கும் வடநாட்டில் பல வேந்தருக்கும் சக்கரவர்த்தியாய் விளங்கினார். அவர் இவ்வண்ணம் ஆண்டு வந்த இராஜ்யத்தை நரபதிராஜ்யம் எனவும், அவர் தலைநகரான ஆனகுந்தி-வித்தியாரணிய நகரத்தை விஜயநகரம் என்றும், பேர் வழங்குவது முண்டு. கிருஷ்ணதேவராயர் ஆட்சியிலே, விஜயநகர ஸம்ஸ்தானம் எனனும் நரபதிராஜ்யம், அனைவருக்கு மேலாக ஸம்ஸ்தானாதிபதியான மகாராஜாதி ராஜ பரமேசுரப் பட்டம் வகிக்கும் மகாராயரும்; அவருக்குக் கீழே மகா மண்டலங்களை மேற்பார்க்கும் இராஜப் பிரதிநிதிகளான வெவ்வேறு மகா மண்டலேசுரர்களும்; அவர்களின் கீழ், அந்த அந்தச் சிற்றரசுகளைக் கண்காணிக்கும் கர்த்தாக்கள் அல்லது துரைகள் என்னும் அதிகாரிகளும்; அவர்களுக்கும் கீழாக, தத்தமக்குரிய நாடுகளை ஆளும் புராதன ராஜ வமிசங்களைச் சேர்ந்த வேந்தர்களும் தமிழ் மூவேந்தரது சேர சோழ பாண்டிய நாடுகளையும், மத்தியப் பிரதேசங்களையும், வடக்கே சில அரசுகளையும் உள்ளடக்கி ஆளும், ஒரு பெரிய சக்கராதிபத்தியமாய் விளங்கிற்று.

இந்த நாளிலே, விஜயநகரம் என்னும் பெயரே வழக்கொழிந்து போயிற்று. பழிக்குப் பழிவாங்கும் மதவைராக்கியத்தினாலும் வெற்றி வெறியினாலும் மதிமயங்கிய மூர்க்கர்கள், ஐந்தாறு மாதங்களாகத் தீயிட்டுப் பொசுக்கியும், வெடி மருந்துகளால் பிளந்து தகர்த்தும், மண்வெட்டி குந்தாலி

கடப்பாரை கோடாலிகளால் வெட்டி யுடைத்தும், தம்மால் இயன்ற மட்டும் நாசஞ் செய்த அழிப்புக்கும் கெட்டொழி யாது தப்பி யுள்ள சில கற்பணி மாளிகைகளும் கோயில் களின் சிதைவுபட்ட குறை முண்டங்களும், வெற்றிப்பெய ரை வெள்கி வெறுத்தன போல, ஹம்பி என்னும் குக்கிராமப் பெயரே இதற்கு வழங்குகின்றது. தேவ மாதர்களினும் ரூபவதிகளான காந்தா மணிகளின் ஆடல் பாடல்களையும்; வேத சாஸ்திர பண்டித சிரோமணிகளின் செவிக்கு விருந் தாம் வாதுரைகளையும்; தூரதேச ராஜ்யங்களி லிருந்து நேயமுற நாடி வந்த தூதசிகாமணிகள் ஓதுரைகளையும்; கை வல்ல கம்மியரும் பொய் வலா தந்திரிகளும் தமது தமது வினைத்திறன்களை வியப்புறக் காட்டும் அருங்கலை விநோ தங்களையும்; மாமண்டலேசுரர்களும் பிரதானிகளும் சேனா பதிகளும் கர்த்தாக்களும், அவரவர் ஆதிக்கத்துக் குட் பட்ட காரியங்களிலே, அற்றம நோக்கித் திருச்சித்தத் தைத் தெரிந்து சிரமேற்கும் குறிகொண்டு கூறும் அறிக் கைகளையும்; வடகலிங்கத்தி லிருந்து தென்குமரி வரை யும் மேன் மலையி லிருந்து கீழ்அலை வரையு முள்ள பலப் பல நாடுகளை ஆளும் சிற்றரசர்கள் வந்து குழுமி,

"இடைபார்த்துத் திறைநீட்டி, இறைவர்திருப் புருவத்தின்
கடைபார்த்துத் தலைவணங்கி,"

தத்தம் குறைபாடுகளை விண்ணப்பஞ்செய்யும் முறையீடு களையும்; இவைகளின் இடையிடையே, தன் செல்வப் புதல்விகளாம் திருமலாம்பாள் வேங்கலாம்பாள்களின் குமாரரும் தன் அருமைப் பேரப் பிள்ளைகளுமான அரங் கன் இரகுநாதன் என்னும் "குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்களின் பாலவாய்ச் சிறுகுதலை" களையும்; நவரத்ன



விஜயநகரம்-ஒரு கோட்டை வாசல்

மய்யமாய்ச் சோபிக்கும் தங்க சிங்காதனத்தின் மீது இலங்கேசனையே போல் கொலுவீற்றிருந்து, மகா ராஜாதி ராஜ பரமேசுவர நரபதி கிருஷ்ணதேவ மகாராயர், திருக்கண் சாத்திக் கிந்நசெவி பெற்றனிய, சதுரங்க சேனை சமுத்திரகால் முழுப்பட்ட, ஆஸ்தான மண்டபத்திலே, வௌவால்கள் ஊசலாட, ஈசல் ஊஞ்சலாயிட, கூகைகள் குழற, ஆந்தைகள் அலற, பாம்புகள் சீற, பல்லிகள் குறிகூற, சிலந்திகள் சித்திரவினை காட்ட, குழவிகள் ஆடியோடி ரீங்காரஞ் செய்ய, புலிகள் புறங்காக்க, பாழ் என்னும் பரதேவதையே இன்று கொலுவீற்றிருக்கின்றனள்.

அந்த நாளிலோ, அப்பட்டணம் அந்நகரத்துக்கு அமராவதியுமே நிகராவதன்றி, பதினைந்தாவது நூற்றாண்டிலே விஜயநகரை வந்தடைந்த நிகலோகொண்டா என்னும் இத்தாலியர் கண்ட காட்சியைச் சிறிது கூறுவாம். துங்கபத்திரையாற்றின் வடகரையில் ஆனகுந்திக் கோட்டையும் பட்டணமும், தென்கரையில் விஜயநகரமும் இருந்தன. அந்தப் பிரதேசத்தில் குன்றுகளும் பாறைகளும் அதிகம். நகரத்தைக் காக்கும் கன மதில்கள், குன்று பாறைகளுடன் இணைந்து சூழ்ந்ததனை, விஜயநகரத்தின் சுற்றளவு அறுபது மைலுக்குக் குறைவில்லை. இந்த மாபெரும் எல்லைக்குள், பளிங்குக்கற்களால் கட்டப்பட்ட கால்வாய்கள் எங்கும் பரந்தோடி, செந்நெல்லும் கரும்பும் செறிந்த புலங்களையும் பூங்காவனங்களையும் செழித்தோங்கச் செய்தன. பூவைசியர்கள், கைத்தொழிலாளிகளின் வீடுகள், ஆங்காங்கு வேண்டியபடி அமைந்திருந்தன. வர்த்தகர், பிரபுக்களின் மாளிகைகள், மலிந்து விளங்கின. இடையிடையே, சிற்ப சிரேஷ்டம் வாய்ந்த கோயில்களும் கோபுரங்க

ளும் நிமிர்ந்தோங்கி நின்று, காண்பவரைப் பிரமிக்கச் செய்தன. எண்ணி முடியாத ஆலயங்களுடைய வீதிகளும், அகன்றவாய் நெடியவாய அமைந்து, செவ்வை தருபவித் திகழ்ந்தன. இவை யாவும் புடைசூழ நிநாய்கள்போல விளங்கிய அரமனையின் அரியபெரிய அழகுகளையும் சிறப்புகளையும் யாவரே கூற வல்லார்? கூறித்தான் என்ன பயன்? ஸமஸ்தானத்துச் சைனியங்களின் தொகை மட்டுமே பதினொரு லக்ஷம் என்ப; ஆனை குதிரைகள் பல்லாயிரக் கணக்கினவாம். நகரமாக்கள், பல லக்ஷம்பேர் என்று மட்டுமே கூறலாகும்; அதனினும் துல்லியமாய்க் கூறுதல் ஒண்ணாது. “எங்கே பார்த்தாலும் ரோஜா புஷ்பங்கள் விற்கப்படுகின்றன. இந்த ஜனங்கள் ரோஜா வின்றி வாழார் போலும்; ஆகாரம் போல ரோஜாவையும் அவசியமாகவே கருதுகின்றனர். நகைவியாபாரிகள், முத்துக்கள் கெம்புகள் மரகதங்கள் வயிரங்களைப் பகிரங்கமாய்க் கடைகளில் விற்கின்றனர்” என்று, பாரசீக ராஜரிடமிருந்து தூதுவந்த ஒருவர், எழுதியிருக்கிறாரெனின், அந்த நகரத்தின் நாகரிகத்தையும் செல்வப் பெருக்கையும் என்னென்று எடுத்துரைப்பது!

தன் குடும்பத்தை நலியும் வறுமையையும், தனக்குள்ள பல்வகைத் திறமையையும் நினைந்து நினைந்து, என் செய்வதென்று தனக்குள் அதற்கு முன்பே சூழ்ந்துகொண்டிருந்த அரியநாயகர், சோதிடப் பிராமணர் சொன்னதைக் கேட்ட நாள் முதல், விஜயநகரஞ் செல்வதே கடமையெனத் தீர்மானஞ்செய்து, தெலுங்கு பாஷை கற்கத் தொடங்கினார். தம் அருமை மகன் அவ்வளவு நெடுந் தொலை செல்வதற்கு அவர் தாய் தந்தையர் முதலில் இணங்கிலரெனினும், இல்லாமையும் சோதிட நம்பிக்கை

யும் நாள்தோறும் தூண்டா நிற்க,' முடிவில் ஒருவாறு சம்மதித்தனர்.

அப்பால், பிரயாணத்துக்கு ஏற்றதொரு நல்ல நாளிலே, கவலையுற்ற நெஞ்சு பதைபதைக்க, கண்ணீர் ஊற்றெடுத்துப் பெருக, அவர்கள் வாய்குழறி வழுத்திய ஆசிமொழிகளையும் புத்திமதிகளையும் தலைமேல் தாங்கிய அரியநாயகர், எப்பாடு பட்டேனும் வினைமுடிக்கும் உறுதியும் ஊக்கமும் ஆசையும் அவலும் கிளர்ந்தோங்கித் ததும்பி வழியும் உள்ளத்தோடு, விஜயநகரத்தை நோக்கிப் புறப்பட்டார். அவர் வெளிப்பேறிய வேளை, 'வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் சென்றது' போலும்; ஏனெனின், 'கால் நடையாய் ஏகின' அவர், ஊருக்கு மறுபடி மீண்டபோது, 'கனகத் தண்டிகைமேல்' ஏறிவந்தனர்.

பட்டினியும் பசியுமாக வழிநடந்து, பல இன்னல்களைச் சகித்துக் கொண்டு, அரியநாயகர் விஜயநகரம் சென்றடைந்தவுடன், அரமனைச் சேவகம் முதலியன அவருக்குக் கிடைக்கவில்லை; காரிய நோக்கத்தைச் சேர்ந்த கொட்டியம் நாகம நாயகர் என்ற பிரபுவின் மாளிகையிலுள்ள கணக்கப் பிள்ளைகளில் ஒருவராய்ப் பார்ந்து கொண்டார். அந்த நாகம நாயகர், ஆதியில் மைமஸ்தான உக்கிராணி வேலையிலிருந்தவர்; பின்பு படிப்படியாக உத்தியோகத்தில் உயர்ந்து, 'தோசேகான்' என்னும் அரசிறை அங்கத்தின் தலைவராகி, இப்பொழுது தளகர்த்தராயும் தக்ஷிண நாடுகளுக்கெல்லாம் மகாமண்டலேசுரராயும் விளங்கினார். எனவே, கிருஷ்ணதேவ மகாராயருக்கு அடுத்த படியிலுள்ள பிரபுநாயகர்களில் அவர் ஒருவரென்பது தேற்றம். அவர் நெடுநாளாய் மக்கட்பேறின்றித் தவித்து மனமேங்கி,

தன் மனையாட்டியுடன் சென்று தீர்த்தயாத்திரைகள் செய்து, காசியை அடைந்து, கங்கைக்கரையிலே கடுந்தவம் புரிந்து, விசுவேசுரர் கருணையினால் ஒரு நன்மகனைத் தன் வாழ்க்கையின் பிற்பகற் பொழுதில் பெற்றெடுத்து, அம் மகனுக்கு விசுவநாதன் என்று பெயரிட்டிருந்தார்.


இவ்வளவு பெரும்பாடுபட்டுப் பெற்ற தன் அருமருந்தன்ன பிள்ளையை, நாகம நாயகர், தன் உயர் பதவிக்கும் தன்மகன் எதிர்பார்க்கக்கூடிய பெரும்பாக்கியத்துக்கும் ஏற்றவாறு கல்வியறிவுகளில் சிரேஷ்ட முறும்படி பயிற்றுவித்ததுமன்றி; விசுவநாதரது பதினைந்தாவது வயதிலேயே, கிருஷ்ணதேவ ராயருக்கு அடைப்பம் முதலிய சிறு பணியாற்ற அவரை நியமித்து, நரபதியின் பிரியத்தைக் கவரும்படி செய்திருந்தார். அழகிலும் அறிவிலும் ஆள்வினையுடைமையிலும், குதிரையேற்றம் மிருகவேட்டை வில் வாள் மற்போர் சிலம்பம் முதலிய சர்வ பயிற்சிகளிலும், ஒருங்கே சிறப்புற்றிலங்கிய விசுவநாதர், தன் சௌரிய சீலங்களால் நரபதியின் அன்பை நாளுக்கு நாள் கொள்ளைகொண்டு, அவர் அருமை மகனென்ன அறியாதார் மருளும்படி, இராஜ சபையில் விளங்கினார். அகத்துப் பொலிவு முகத்தே விளங்கும் கட்டிளங்காளையும், அவரைப் போலவே கற்றுத் தேர்ந்த அருங்கலை விநோதருமான அரியநாயகர், "உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும்" என்னும் உண்மைப்படி, விசுவநாதருடன் விரைவில் உற்ற நண்பினராகிவிட்டது, வியப்பன்றே. இளைஞர் இருவரிடைப் பெருநட்பைக் கண்டுகந்த நாகம நாயகரோ, அல்லது அவர் தேவியாரோ, தன் மகன் பெயரொடு பொருத்தி, அரிய நாயகரை அரிய நாதர் என்று அழைக்க

அக்காலந்தொட்டே இவர் பெயர் அவ்வாறு மாறி வழங்கத் தலைப்பட்டது என்று கூறுவது பொருந்தும். விசுவநாதரின் நட்பினாலும், தன் வேலைத்திறமை நல்லொழுக்கம் சத்தியம் முதலிய நற்குணங்களினாலும், அரியநாதர், நாகமநாயகரின் நன்மதிப்பை மேன்மேலும் பெற்று, உத்தியோக பதவியில் உயர்ந்து வந்ததுமன்றி, விசுவநாதர் மூலமாக நரபதியின் அறிமுகத்தையும் கடாக்ஷத்தையும் அடையலானார்.

இவ் வண்ணம் நிகழும் காலத்திலே ஒருநாள், தன் யஜமானருடன் அரியநாதரும் மகாராயரின் சபைக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது, அநேக வித்துவான்களும் போர்வீரர்கள் பலரும் மந்திரிகளும் மலிந்து பொலிந்த அச் சபையிலே, உடுபதி போன்று விளங்கிய கிருஷ்ணதேவராயர், அரசியற் பணிகள் முடிந்து, ஏதோ விளையாட்டாக அளவளாவும் சமயத்திலே: "இன்று காலை நாம் அரமனைத் தடாகத்தில் நீராடச் சென்ற பொழுது, அழகிய தாமரை மொட்டொன்று,—ஒரு சாண் நீள மிராது, முக்காற் சாண்தானிருக்கும்,—தாள் முழுதும் தண்ணீர்க்குள்ளும், மொட்டு மட்டும் நீர்மட்டத்துக்கு மேலாகவும், நின்றது. நாம் தடாகத்தில் குதித்த அதிர்ச்சியினால், அந்த மொட்டு, கொஞ்சதூரம் பின்செல்ல,—அப்படிச் சென்றதூரம், நாலுசாணிராது, $3\frac{3}{4}$ சாண் என்கலாம்,—அதன் தலையும் நீர் மட்டத்துக்குச் சமமாக நீர்க்குள் மறைந்து விட்டது. ஆயின், அது நின்ற விடத்திலே தடாகத்தின் ஆழமென்ன?" என்று கேட்டார்.

அரசரது வினவைக் கேட்டுச், சிலர் விழித்தனர்; சிலர் ஏதேதோ முணுமுணுத்துக் கணக்குப் பார்க்கத் தொடங்கி

னர்; ஒருவர், "எவராலும் சொல்ல முடியாது" என்றனர்; மற்றொருவர், "நான் போய் அறிந்து பார்த்து வருகிறேன்" என்று புறப்பட்டனர். இவ்வாறு சபையோர் யாவரும் திகைக்கும் தருவாயிலே, ஒரு தூணோரமாய் ஒதுங்கி நின்று



விஜயநகரம்—ஆஸ்தான மண்டபம்.

கொண்டிருந்த அரியநாதர்: "மகாராயலுவாரு உத்தரவானால், ஊழியன் விண்ணப்பம் செய்கிறேன்" என்று, வணக்கத்துடன் சொன்னார். எவரும் எதிர்பாராத இவ்வுரையைத் திடீரெனக் கேட்டவுடன், அனைவர் கண்களும் அவரை நோக்கித் திரும்பின. கிருஷ்ணதேவராயர்: "எவர் அது, அரியநாதுடுவா? முன்னே வா; சொல், கேட்போம்"

என்று, ஆஜ்ஞாபித்தார். சிம்மாசனத்தின் சமீபமாக முன் சென்று வணங்கி, அரியநாதர்: "அவ்விடத்தில் தடாகத்தின் ஆழம், அதாவது, தாமரைத் தண்டின் நீளம், சந்நிதானத்தின் பக்கத்தில் அதோ நிற்கிறாரே விசுவநாத நாயகர், அவர் உயரமேதான்" என்று, விநயமாய் விடையளித்தார்.

நரபதி, உடனே இடப்பக்கம் நோக்கித் திரும்பி "உன் உயரமென்ன, விசுவா?" என்று கேட்க, விசுவநாதர்: "ஒன்பது சாண்" என்று பதில் கூறினார்.

இதைக் கேட்ட கணிதசாஸ்திரி ஒருவர், கணக்குப் பார்த்து, "விடை சரிதான்" என்றார். மற்றொருவர் "இல்லை, தப்பு" என்றார். அப்பால், நரபதியின் கட்டளைப்படி ஒருவன் சென்று, முழக்கோலால் அளந்து வந்து, அவ்விடத்தில் குளத்தின் ஆழம் ஒன்பது சாண்தான் என்று தெரிவித்தான்.

ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்த கிருஷ்ணதேவராயர், அரியநாதரைப் பார்த்து. "அது தான் கணக்கு விசுவாவின் உயரத்தை எப்படி அளந்தாய்?" என்று கேட்டார்.

அரியநாதர், மீண்டும் வணங்கி. "ஊழியன் உயரம் 8½ சாண்; அவர்கள் என்னைவிட அரைச்சாண் அதிகம் இருப்பார்கள் கண் அளவாததா கை அளக்கும்?" என்று, பதில் அளித்தார்.

அன்றுமுதல், அரியநாதரை அரமனைச் சேவகத்திலேயே நரபதி அமைத்துக்கொள்ள, அவரும் விசுவநாதரும் இன்னும் நெருங்கிப் பழகவும், நரபதியின் கவனத்தை அவர் அடிக்கடி அடையவும் நேரலாயிற்று.

# தளவாய் அரியநாத முதலியார்

விஜயநகர ஸம்ஸ்தானத்தில் நவராத்திரித் திருவிழா வை விசேஷமாய்க் கொண்டாடுவது வழக்கம். படைவீரர் அடவிசென்று வேட்டையாடி உயிரோடு பிடித்துக் கொண்டுவந்த காட்டெருமைக்கடாவைக் காளிகாதேவிக் குப் பலிகொடுத்தலோடு, திருவிழா முடிவுபெறும். அவ் வாறு பலியூட்டப்படும் கடா, ஒரேவெட்டில் மடியவேண் டும; அவ்வண்ணம் வெட்டத் தவறினால், அப் பிழை நாட்டுக்கே கேட்டை விளைக்கும் என்பது பொதுஜன நம் பிக்கை.

அரியநாதர் அரமனைச் சேவகரான ஆண்டிலே, நவ ராத்திரியின் கடைநா ளன்று, அவரும் பரிஜனங்களுடன் காளிகோயில் சென்றிருந்தார். அவ்வாண்டில் பலிக்கா கப் பிடித்து வந்திருந்த எருமைக்கடா மிகப் பெரிதாயும் கொழுத்ததாயும் மூர்க்கமுள்ளதாயும் இருந்தது மன்றி, அதன் கொம்புகள், வரிசசல் பிடித்தாற்போல, முதுகின் இருபுறமும் வால்வரை நீண்டிருந்தன. கொம்புகள் கழுத் தைக் காத்து அதன் மேலாக விருந்ததனால், கொம்புகளை யும் கழுத்தையும் சேர்த்து வாளால் ஒரேவெட்டில் வெட் டித் துணிப்பது அசாத்தியமா யிருந்தது. மீண்டும் காடு சென்று வேறொரு கடாவைப் பிடித்துக் கொணர்தற்கும் போதிய அவகாச மில்லை. இதனால், பிரபுக்களும் நரபதி யும் மனம் கவன்று கையற்று உழன்றுகொண் டிருக்கை யில், அரியநாதர், அந்தப் பலிக்கடாவை எவ்வண்ணம் நிற்கவைத்து,கழுத்திலே எந்தப் பொருத்துவாயில் வெட்டி னால் கொம்புகளைத் தவிர்த்து ஒரேவெட்டாய்த் துணித்து விடக்கூடு மென்று, யுக்தி சொன்னார்: அவர் கூறியபடி, பலிபீடத்தின் அருகே ஒரு சிறு குழி தோண்டி, அதில்

பசும் புல்லை வைத்து, கால்களின் இடையே குழியிருக்கும்படி கடாவை நிறுத்த, புல்லைத் தின்னும் ஆசையால், கடா தன் கழுத்தை நன்கு வளைத்துக் குனிந்து, குழிக்குள் தலையிட்டுப் புல்லைத் தின்னும்போது, அதன் கொம்புகள் வேறாக விலகி நிமிர்ந்து நின்றன. அத்தருவாயில், அங்கிருந்தவர் அனைவரினும் வாட்பயிற்சியிலே சிறந்தவரான விசுவநாதர் கத்தியை எடுத்து வெட்ட, கடாப்பலி நன்கு நிறைவேறிற்று. அதனால் கவலைநீங்கி மகிழ்ச்சிகொண்ட கிருஷ்ணதேவராயர், ஸம்ஸ்தானத்துக்கு நேரவிருந்த ஒரு பெரிய விபத்தை விலக்கிக்காத் துதவினவராகவே அரியநாதரை மெச்சிப் புகழ்ந்து, அன்றுமுதல் அவரை அரமனையில் பெரிய கணக்கனாக்கிக்கொண்டார்.

இவ்வாறு சிலகாலம் இராயர் அரமனை உத்தியோகத்திலிருந்து படிப்படியாக உயர்ந்துவருகையில், கலிங்கத்திலும் இராயச்சூர்ப் பக்கங்களிலும் இந்தியச் சிற்றரசர்களாலும் முகமதியர்களாலும் நேர்ந்த கலகங்களை அடக்குதற்கு, மகாராயருடன் அரியநாதரும் சென்றபோது, தன் போர்த்திறனையும் வீரத்தையும் மெய்ப்பித்துக்காட்டி, மந்திர சபையில் ஒரு ஸ்தானத்தையும், முதலியார் என்ற இராணுவப் பெரும்பட்டத்தையும், பல்லக்கேறும் உரிமையையும், பெற்றார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் பொய்யாமொழிக்குச் சான்றாக, விஜயநகரத்திலே தான் விளங்கி வருவதைத் தன் இனத்தார்க்குத் தெரிவித்தற் பொருட்டு, மற்றப் பொருள்களோடு, தங்கத்தால் ஒரு கலப்பையையும் தாற்றுக்கோலையும் செய்து,

தன் தமக்கையார்க்கு வெகுமானமாக அவர் அனுப்பியது, இக்காலத்திற் போலும். அவர் விவாகம, விஜயநகரத்திலே, மகாராயர் சந்நிதானத்தில் நிறைவேறிய தென்றும், அக்காலத்தில் பத்துலக்ஷம் பொற்காசுகள் செலவழித்தன ரென்றும, தன் இனத்தார் நாற்பதினாயிரவருக்கு விருந் தூட்டின ரென்றும கூறுவர்.

## 3. மதுரை நாயகர் வம்மிச ஸ்தாபனம்.

விஜயநகர ஸம்ஸ்தானத்துக் கர்த்தாக்களின் மேற் பார்வையில, சேர சோழ பாண்டிய வேந்தர்கள் தத்தம் நாடுகளை ஆண்டுவந்தன ரென்று மேலே கூறப்பட்டது. கிருஷ்ண தேவராயர் ஆட்சியிலே, சோழ நாட்டை வீர சேகரனும், பாண்டிய நாட்டைச சந்திர சேகரனும் இவ் வாறு ஆண்டு வருகையில், வீர சேகரன் பாண்டியின்மேற் படையெடுத்துச சென்று, சந்திர சேகரனை வென்று துரத்திவிட்டு, அவன் நாட்டைப பற்றிக்கொண்டான். இந்த அக்கிரமத்தைச சோழ பாண்டிய கர்த்தாக்கள் கவனித்திலர். நாடிழந்த சந்திரசேகரன், உயிர்தப்பி யோடி, விஜயநகரத்தை அடைந்து, மகாராயர் சந்நி தானத்தில் இவ்வநியாயத்தை முறையிட்டுக்கொண்டான். அதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர், தன் ஸம்ஸ்தானத் தில் அப்படிப்பட்ட அக்கிரமம நிகழ்வதையும, அதைத் தன் கீழ் அதிகாரிகள் முறைசெய்யா திருப்பதையும் பொறுதவராகி, தக்ஷிண மகா மண்டலேசுரரான கொட்டி யம் நாகமநாயகரை அழைத்து, அவர் பராமரிப்புக் குட் பட்ட பிரதேசத்தில் நடந்த ஒழுங்கீனத்தை அவரே

நேரிற் சென்று ஒழுங்குபடுத்தி, சந்திரசேகரனை மீண்டும் பாண்டியராஜனாக முடிகவித்து மீளும்படி ஏவினார்.

மகாராயரின் ஆணையின்படி நாகம நாயகர் போதிய சைநியங்களுடன் பாண்டிமண்டலம் சென்று, வீரசேகரச் சோழனைப் போரில் முறியடித்து, பாண்டிய நாட்டை மீட்டு, அவனுக்கு நன்மதி கூறிப் பயமுறுத்தி எச்சரித்தனர். அப்பால், நாட்டின் சீர்கேடான நிலைமையையும் சந்திரசேகரனது திறமைக் குறைவையும் அறிந்து, அவன் வசம் நாட்டைவிடாமல், தானே நேரில் கண்காணித்து வந்தார். ஒருகால் வீரசேகரனை வென்றுவிட்டாலும், நாகம நாயகரைத் தன்னால் என்றுமே வெல்ல முடியாதென்பது, சந்திரசேகரனுக்கு நன்கு தெரியும். இதனால், நாயகரின் செயலையும், தன் பிரயத்தனம் வீண்போனதையும் கண்டு வருந்தி, மனமிடிந்து, சந்திரசேகரன் மடிந்தான். அதன் பின், அவன் மகன் சுந்தரகுமாரன், மகாராயர் திருமுன்பை அடைந்து: "மகா ராஜாதிராஜ பரமேசுர நரபதி மகா ராயரே! 'வேலியே தின்றால் தெய்வமே காவல்' என்பர். எங்கள் குடியின் குறையைத் தீர்த்துவைத்தற்கென்றே, தக்ஷிண மகா மண்டலேசுரரான நாகமநாயகரை அனுப்பினீர்கள். சந்நிதானத்து ஆணையின் வண்ணமே அவரும் வீர சேகரனை வென்று, எங்கள் நாட்டை மீட்டார். அதன் பின்பு, தங்கள் கட்டளைப்படி என் தந்தைக்குக் கொடுத்துவிடாமல், தானே அதை ஆள நினைத்து வைத்துக் கொண்டுவிட்டார். தலைமுறை தலைமுறையாக என் முன்னோர்களும் என் தந்தையும் ஆண்டுவந்த பாண்டி மண்டலத்தை, தங்கள் தர்மராஜ்யத்திலே, நான் மட்டும் ஆளாது, பரதேசிபோல் அலமருதல் முறையாகுமோ?

# தளவாய் அரியநாத முதலியார்

"அல்லற்பட் டாற்றா தழுத கண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்று நாயனார் கூறியிருக்கின்றனர்" என்று, ஓலமிட்டுக் கண்ணீர் பெருக்கினான்.

இதைக் கேட்ட மகாராயருக்குக் கடுங்கோபம் உண்டாகிவிட்டது. நரபதி ஆக்கினையை மீறி நடந்ததினை முகாந்தரத்தை உடனே தெரியப்படுத்தும்படி நாகம நாயகருக்குக் கட்டளை யனுப்பினார். நாகம நாயகர், பாண்டி மண்டலத்தின் நிலைமையையும், சந்திரசேகரனது ஆற்றலின்மையையும், அரசை விரும்பி யன்று குடிகளின் நன்மையை நாடியே அவன் மகனுக்கு நாட்டைக் கொடாது தான் அவ்வாறு செய்தமையையும், விரிவாய் விண்ணப்பம் செய்துகொண்டது மன்றி, எல்லாவற்றையும் நேரில் எடுத்தோதும் பொருட்டு, தன் நண்பர் இராமபத்திர நாயக்கரை விஜயநகரத்துக்கு அனுப்பினார். ஆயின், இம்முகாந்தரங்களை யெல்லாம் கிருஷ்ண தேவ ராயர் ஒப்பவில்லை 'பாண்டியநாடு சந்திரசேகரனுக்குப் பின் அவன் மகன் சுந்தரகுமாரனது உரிமை யாதலின், அவனை நீக்குவது அநீதி' என்னும் ஒன்றை மட்டுமே அவர் கருதினவராய், உடனே நாட்டைச் சுந்தரகுமாரனிடம் ஒப்புவித்து விடும்படி, மீண்டும் ஆஜ்ஞாபித்தார்.

"அறிகொன் றறியான் எனினும், உறுதி,
உழையிருந்தான் கூறல் கடன்"

ஆதலின், அமைச்சரிற் சிறந்த நாகம நாயகர், மகாராயர் ஆணையையும் மதியாது, குடியோம்புதலையே தலைக்கடனாகக் கொண்டு, ஒழுகலானார்.

இதை அறிந்தவுடன், அளவற்ற சினத்தையும் சிறு

மையையும் அடைந்த கிருஷ்ணதேவராயர், தன் சபையோரைப் பார்த்து: "இந்த அநீதியை முறைசெய்து, அந்த ராஜத்துரோகியின் சிரசைப் பாதகாணிக்கையாகக் கொண்டுவர வல்ல வீரன் எவனும் இங்கில்லையோ?" என்று கர்ச்சித்தார்.

நாகம நாயகரினும் உயர்ந்த பிரபுவேனும், சிறந்த போர்வீரனேனும், ஸம்ஸ்தானத்தில் இல்லாமையாலும்; அவர் மகன் விசுவநாத நாயகர், மகாராயரின் கண்மணி போன்றவர், சில்லாண்டுகளுக்கு முன்னரே கலிங்கத்து வேந்தனை வென்றடக்கவும் இராயச்சூரிலே முகமதியரை முறியடித்து ஒடுக்கவும் மகாராயருடன் சென்று, தன் போர்வலி சூழ்ச்சிகளால் புகழ்பெற்ற இளஞ்சிங்கம் போன்றவர், அச்சபையிலே வீற்றிருந்தமையாலும், எவரும் முன்வரத் துணிந்திலர்.

"இதைச் செய்யவல்ல வீரன் ஒருவனும் இல்லையோ?" என்று, மீண்டும் மகாராயர் வினவ, விசுவநாதரே எழுந்து வணங்கி: "மகாராஜா! அவர் என் தந்தையே; நான் அவர் ஒரே மகனே; ஆயினும் என்? இராஜ சேவையில், தந்தை மகன் என்னும் கண்ணோட்டம் ஏது? அடியேனுக்கு ஆஜ்ஞையானால், நானே மதுரை சென்று, இப்பணியை முடித்து வருகிறேன்" என்று கூறினார்.

இதைக் கேட்டவுடன், மகாராயருட்பட, அனைவரும் திகைப்புற்றனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. பிறகு விசுவநாதர்: "என்னை இவ் விஷயத்தில் சந்தேகிப்பது இயல்பாயினும், அப்படிச் சந்தேகிக்க வேண்டா; முழுதும் நம்பலாம்; நான் ஒருநாளும் மோசஞ் செய்யமாட்டேன்" என்றார்.

> "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன் கண் விடல்"

என்னும் சூழ்ச்சியில் நெடுங்காலம் பழகிக் கைவல்லவரான கிருஷ்ணதேவராயர், "சரி: அப்படியே செய், விசுவா! உன் நாயனு இப்படி நடப்பா ரென்று நாம் கனவிலும் எண்ணவில்லை. கெடுகாலத்துக் கெடுமதியே இது. அவர் துரோகத்தைக் கண்டபின்னும் உன்னிடத்தில் நமக்கு முழு நம்பிக்கையே. நீயே இப் பணிமீது செல். இராஜத் துரோகி யாயினும் அவர் உன் தந்தை யாதலின், முதலில் ஆஜ்ஞாபித்தபடி, நீ அவர் தலையைக் கொணர வேண்டா. அவரை வென்று சிறை செய்து, நம்மிடம் அனுப்பி விடு" என்றார்.

மகாராயர் இவ்வண்ணம் சபையில் உத்தரவு செய்த போதினும், அவர் மனம் முழுதும் சமாதானப் படவில்லை. அதனால், "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்பது போல, அரியநாதரையும் விசுவநாதருடன் மதுரைக்கு அனுப்பினார். அரியநாதரின் திறமையையும் விசுவாசத்தையும் கவனித்துவந்த மகாராயர், எவ்விதத்திலும் விசுவநாதருக்கு அவர் தாழ்ந்தவரல்லர், மேலானவரே என்பதை, அறிந்திருந்தார். நாகமநாயகர் விஷயத்திலோ, அவர் ஒரே மகன் மேல் சமுசயம் கொள்வது கிரமமா யிருக்க, அரியநாதரிடம் அவநம்பிக்கை கொள்ள இடமே யில்லை; அன்றியும், விசுவநாதர் தமிழ்நாட்டை யறியாதவர்; அரியநாதரோ, அவ்வூரார், நாட்டு வளப்பத்தையும், குடிகளின் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்தவர். இக்காரணத்தாலும், இருவரும் உற்ற நண்பர்களாகையாலும், விசுவநாதர், மகாராய

ரின் உட்கருத்தை அறிந்துகொள்ள வில்லை.

மிகப் பெரிய சதுரங்க சைனியங்களோடு நண்பர்கள் இருவரும் தென்திசை நோக்கிச் சென்றனர். முதலில், நாகம நாயகருடன் சண்டை யிடாமல் காரியத்தை முடிக்கப் பார்த்தார்கள்; அது பலிக்க வில்லை. அப்பால் யுத்தம் நிகழ்ந்து, நாகமநாயகர் தோல்வி யடைந்து, சிறை செய்யப் பட்டார்.

பின்பு விசுவநாதர், 'என் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கும் பொருட்டு நான் செய்ததை மன்னித்தருளுக' என்று, தன் தந்தையை வணங்கி பிரார்த்தித்து, அவர் மனமுகந்து பிழைபொறுத்து வாழ்த்திய ஆசிகளைப் பெற்றுக் கொண்டு, அவரைக் கிருஷ்ணதேவராயரிடம் அனுப்பினார்.

இந நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றவர்கள்,

"தந்தை மகற் காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

"மகன் தந்தைக் காற்றும் உதவி, 'இவன் தந்தை
என் நோற்றான் கொல்?' எனும் சொல்"

என்னும் இலக்கணக் குறள்களுக்கு இவ் விருவருமே ஏற்ற இலக்கியங்களாவர் என்று கூறிப் புகழ்ந்தனர்.

தன்னிடம் அடைப்பத் தொழிலிற் சிறுவனா யமர்ந்த காலமுதல் அன்றுவரை தான் நேசித்து வநத விசுவநாதரின் வீரத்தையும் ஈடெடுப்பில்லாத இராஜபக்தியையும் கண்டு உள்ளம் பூரித்து மகிழ்வடைந்த மகாராயர், அவர் தந்தையும் நெடுங்காலமாகத் தன் உண்மை ஊழியருமான நாகம நாயகரை மன்னித்து, விடுதலை செய்துவிட்டார்.

பாண்டிய நாட்டின் உண்மை நிலையையும் பழைய

பாண்டிய வம்மிசத்தார் ஆட்சிக் கோளாறுகளையும் பற்றி, நாகம நாயகர் நேரில் தெரிவித்துக் கொண்டது போலவே, அரியநாதரும் விசுவநாதரும் சேர்ந்து அனுப்பிய அறிக்கைப் பத்திரமும் இருந்தது. இதனிடையில், சுந்தர குமாரனும் தற்செயலாய் இறந்துவிட்டான். இதனால், பிற்காலத்தில் மதுரைச் சீமையை ஆண்டுவந்த பாண்டிய வம்மிசம் சந்ததியற்றுப் போய்விட்டது. முகம்மதியர் ஆதியில் தக்ஷிணத்துக்கு வந்து பாண்டிய மண்டலத்தைக் கைக்கொண்ட போது மதுரையை விட்டு ஓடிப் போய்த் தென்காசியைத் தலைநகராக்கிக் கொண்டு, அந்தப் பிரதேசத்தில் இன்னும் ஆண்டுவந்த கிளைவம்மிசத்திலிருந்து ஒரு வாரிசைத் தேடிக்கொணர்ந்து முடிசூட்டுவதைவிட, விசுவநாதரும் அரியநாதருமே நாட்டைப் பராமரித்து வருவதே மேலெனக் கருதி, அவ்வண்ணமே மகாராயர் ஆஜ்ஞாபித்து விட்டார். அப்பால், அரியநாதர், தன் நண்பர் விசுவநாதரைப் பாண்டிய நாதனாக்கி, இராஜ்ய பரிபாலனத்திலே, இராணுவ விஷயங்களை மேற்பார்க்கும் சேனாபதி வேறு, மற்றெல்லா விஷயங்களையும் மேற்பார்க்கும் பிரதானி வேறு என்று அதுவரை இருந்ததை ஒழித்து, தளவாய் என்ற பட்டம் கொடுத்து, தானே எல்லா விஷயங்களையும் கண்காணித்து வந்தார். இவ் விருத்திப்பட்ட அதிகாரங்களையும் அவரே வகிக்கும்படி மகாராயர் செய்ததே, அரியநாதரின் போர்வலி மந்திரசூழ்ச்சி ஆட்சித்திறமை யோக்கியதைகளுக்குத் தக்க சான்றாகும்.

இவ்வண்ணம் தளவாய் அரியநாத முதலியாரும் விசுவநாத நாயகரும் கூடிப் பாண்டியமண்டலத்தைக் கைக்கொண்டு ஆளத் தொடங்கிய காலத்திலே, நாடி நந்த

நிலைமையைச் சிறிது எடுத்துரைத்தல் பொருந்தும்: பதி னான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் முகம்மதியர் உட்புகுந்து, பழைய வேந்தர்களைத் தென்காசிப் பக்கம் ஓட்டிவிட்டு, நாட்டைக் கைக்கொண்டு, இரண்டு தலை முறைகளாக ஆண்டு வந்தனர். அந்த நாளிலே நிகழ்ந்த அழிம்புகள் பல. பிறகு, ஹொய்சாலவமிசத்தார்கள் வந்து முகம்மதியரைப் புறங்கண்டு துரத்திவிட, பாண்டியநாடு விஜயநகர ஸம்ஸ்தானத்திற்கு உட்பட்டது. கிருஷ்ணதேவ மகாராயர் பட்டத்துக்கு வருமுன்பு, அந்த ஸம்ஸ்தானமே வலிகுன்றிச் சீர் குலைந்து குழம்பிய காலங்களிலே, பழைய பாண்டியர்கள் மீண்டும் ஆங்காங்கு ஆதிக்கம் பெறலாயினர். கிருஷ்ணதேவராயர் ஆட்சித் துவக்கத்தில் இவர்களின் அதிகாரம் ஒருவாறு ஒழுங்குற்று, அவர் நியமித்த கர்த்தாக்களின் கீழ் நிகழ்ந்து வந்தது. அப்பால் நாகம நாயகரின் படையெடுப்பும் ஆட்சியும், அதன்பின் அரியநாதர்—விசுவநாதர் படையெடுப்பும் ஆட்சியும் நிகழலாயின. இவ்வாறு கழிந்த இரண்டு நூற்றாண்டுகளில் பல ஆட்சிப் புரட்சிகளுக்கும் குழப்பங்களுக்கும் உள்ளாயிருந்த குடிகள், இப்பொழுது, கள்ளர் மறவர் முகம்மதியர் கொட்டியர் வடுகர் முதலிய பலதிறப்பட்ட போர்வீரர்களின் கொள்ளை கொலைகளால் நொந்து வருந்திக் கொண்டிருந்தனர். சோழநாடும் பாண்டியும் கலப்பதால ஆட்சியுரிமை எல்லைகள் நன்கு வரையறுக்கப்படாத பிரதேசத்திலே, கள்ளர் மறவர்களின் இம்சை பொறுக்க வொண்ணாததா யிருந்தது. சுந்தர குமாரனது மரணத்தினால் மதுரையை ஆண்டுவந்த புராதன பாண்டிய வம்மிசம் முளையற்றுப் போய், விசுவநாத நாயகரே முடி சூடிய பின்னர், பழைய

பாண்டியன் ஒருவனது வைப்பாட்டி மக்கள் ஐவர், 'பஞ்ச பாண்டியர்' என்ற பட்டத்தைப் பூண்டு, " யானும் உண்டு பேயாடி: எனக்கும் உண்டு பாற்சோறு" என்பார் போன்று நாட்டுக்கு உரிமை பாராட்டி, அடங்காப் பிடாரிகள் போலக் கொழுத்துத் திமிருற்று ஆறலை கள்வரா யும் வேறு வேலையில்லாராயும் திரியும் படையாட்களைத் திரட்டிக் கொண்டு, தம்மா லியன்றமட்டும் தெற்குப் பிரதேசத்தில் அழிம்பு செய்து வந்தனர்.

இத் தன்மையாக அலங்கோலப் பட்டுக் கிடந்த பாண்டி மண்டலத்தைச் சீர்திருத்தி முறைசெய்யத் தொடங்கி, அரியநாதரும் விசுவநாதரும், முதலில் தம்மாசான வல்லத்துக் கோட்டையைச் சோழநாட்டானுக்குக் கொடுத்துத் திருச்சிராப்பள்ளியைத் தாமகொண்டு, இரு நாட்டெல்லைகளையும் வரையறுத்துக் கொண்டனர். அப்பால், கள்வர்களைத் தம் ஆக்கிர சங்கரத்துக் குட்படுத்தித் தண்டனை செய்தும், பயமுறுத்தியும், சோரபயத்தை அறவே தொலைத்தனர். காவிரி யாற்றின் இருபாங்கரும் அடர்ந்தோங்கிய காடுகளை வெட்டி யழித்துத் திருத்தி, நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி, அக்கிரகாரங்களையும் கிராமங்களையும் கோயில்களையும் பிரதிஷ்டை செய்தனர். திருவரங்கத்துக் கோயிலைப் புதிப்பித்துப் பெரிதாக்கிக் கட்டினர். திரிச்சிராப்பள்ளியை, ஒன்றின் பின் ஒன்றாயுள்ள இரு பெருங் கோட்டை மதில்களாலும், அவற்றுக்குப் புறம்பே அகன்றாழ்ந்த பெரியதோர் அகழியினாலும், காவல் செய்தனர்; தெப்பக் குளத்தைத் தோண்டிக் கட்டி, மலைக்கோயிலைச் செப்பனிட்டு, ஓர் அரமனையையும் பல வீதிகள் ஆவணங்களையும் நிருமாணஞ் செய்தனர்.

இவ்வேலைகள் ஒருவாறு நடந்து வருகையில், அவற்றைக் கண்காணித்து நிறைவேற்ற விசுவநாதரை விட்டுவிட்டு, அரியநாதர் தென்பால் சென்று, ஆங்குள்ள குழப்பத்தை ஒழுங்குபடுத்தி, பஞ்சபாண்டியர்களோடு போர் புரியலானார். ஆறுமாத காலமாகச் சண்டை நடந்தது. இதற்குள் விசுவநாதரும் வடபாலிருந்து வந்து சேர்ந்து கொள்ளவே, நண்பர் இருவருஞ் சேர்ந்து மும்முரமாய்ப் போராடினர். அதற்கும் பஞ்சபாண்டியர்கள் மடங்கவில்லை. இவ்வண்ணம் இருபக்கத்திலும் படைவீரர் பல்லாயிரர் வீணே மாண்டொழிந்து, உழவுக்கும் தொழிலுக்கு முரிய ஆள்வன்மை நாளுக்குநாள் குன்றி, நாடு வறண்டுபோவதைக் காண சகியாத அரியநாதர், ஒரு சூழ்ச்சி செய்தார்: அதாவது, எதிர்க் கட்சியில் ஒருவனும் தம் கட்சியில் ஒருவனும் மாத்திரம், சுவாமி சந்நிதியில் யுத்தம் செய்ய, கடவுள் கிருபையினால், கடவுள் சாக்ஷியாக, எவன் வெல்கிறானோ, அவன் கட்சியே ஆதிக்கத்தைப் பெற, எதிர்க்கட்சியார் போரொழிந்து, தோல்வியை ஒப்புக்கொண்டு கீழ்ப்படிவது, என்பதே.


ஆசுகவி காளமேகப் புலவரின் சரித்திரத்தைப் படித்துள்ளோர், கயத்தாற்றுாரை அறிவர். அவ்வூர்ப் பெருமாளைத்தான்:—


"பாளைமணங் கமழ்கின்ற கயத்தாற்றுப் பெருமாளே!
பழிகாரா! கேள்:
வேளை என்றால், இராவேளை பதினாறு நாழிகைக்கு
மேலாயிற் (று); என்
தோளை முறித் ததும் அன்றி, நம்பியானையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்;
நாளை இனி யார்சுமப்பார்? எந்நாளும் உன்கோயில்
நாசம் தானே."

என்று, அவர் வயிறெரிந்து பாடியது. அந்தக் கயத்தாற்றுப் பெருமாள் சந்நிதியிலே, இருதிறத்துப் படை வீரர்கள் பிரபுக்கள் பலலாயிரர் குழுமிய மகாசபையின் நடுவிலே தான், தெய்வ சம்மதத்தை அறியும் பொருட்டு, இந்தத் தனிப்போர் நிகழ்ந்தது. பாண்டியரில ஒருவன், வீம சேனனே போன்ற சரீர எழுச்சி திரட்சி வலிமைகளால் தென்பாண்டி வீமன் என்னும புகழ்ப்பெயர் பெற்றவனே. எதிரிகளுக்காகவும், "என் உயரம் ஒன்பது சாண்" என்று விடை கூறிய விசுவநாதநாயகர் தம்கட்சிக்காகவும், யுத்தம் செய்தனர். கயத்தாற்றுப் பெருமாளின் கருணை யிருந்த வாறு. விசுவநாதர் பலமான காயங்களை யுற்றாராயினும், முடிவில், தென்பாண்டிவீமனைக் கொன்றுவிட்டார். அப்பால், சபதப்படி, மற்ற நான்கு பாண்டியர்களும் போரொழிந்து, பாண்டியைத் துறந்து, மலைநாடுநோக்கிச் சென்றனராக, நாடனைத்தும் நாயகர் வசமாயிற்று. தானுற்ற காயங்களை யாற்றிச் சுகப்படு மாறு விசுவநாத நாயகர் மதுரை மீண்டார். அரியநாதர் மட்டும், ஆங்காங் குள்ள கோளாறுகளை யெல்லாம் ஒழுங்கு படுத்திக்கொண்டே திருநெல்வேலி சென்று, அவ்வூரை முற்றிலும புதிப்பித்துப் பெரிதாகக்கட்டி, கோயிலில் ஆயிரக்கால மண்டபமும், வேறு பல பணிகளும் இயற்றினார். காவிரியின் இரு கரையிலும் காடழித்து நாடாக்கியது போலவே, தாமிரவருணியின் இருகரைகளையும் செப்பனிட்டு, சோலைகளும் அக்கிரகாரங்களும் செழித்தோங்கும்படி செய்தார்; பாளையங்கோட்டையில ஒரு கோட்டையையும் கட்டினார்.

அப்பால் அரியநாதர் மதுரை மீண்டு, நாடெங்கும் ஒருபடியாய்க் காணும் ஒழுங்கும் அமைதியும நீடி

த்து நிலைபெறுதற்கு 'வேண்டிய ஆலோசனை செய்து, அதற்குத் தக்க சூழ்ச்சியாகப் பாளையப்பட்டுக்களை ஸ்தாபித்தார். தொன்றுதொட்டு ஆங்காங்கு முதன்மையுற்றிருந்தவர்களும்; போர்க்குழப்பத்தில் தம் புயவலியால் மேன்மையுற்றுச் சிறுபடைகளுக்குத் தலைவராகி, ஊர்கள் கோட்டைகளைக் கைக்கொண்டு குரிசில்களானவர்களும்; நாகமநாயகரோடும், அவர்க்கு முன்னும் பின்னும், அவ்வக் காலங்களில் படைத் தலைவர்களாயும் இராஜ்யபரிபாலன உத்தியோகஸ்தர்களாயும் விஜயநகரத்தி லிருந்து வந்து, பாண்டிமண்டலத்தில் குடியேறினவர்களுமான இம் மூவகை முக்கியஸ்தர்களால், நாட்டிக்குத் தொந்தரையும் அபாயமு மின்றி, நன்மையும் க்ஷேமமுமே விளையுமாறு செய்த சூழ்ச்சி அது. ஒன்றுருக் குரிய ஊர்கள் பூமிகளை எழுபத்திரண்டு பாளையங்களாக வகுத்து, மதுரைமா நகரைச் சூழ்ந்த பெரிய கோட்டையில் எழுபத்திரண்டு கொத்தளங்களைக் கட்டி, அவைகள் ஒவ்வொன்றுக்குப் ஒவ்வொரு பாளையக்காரனைக் காவலாக்கினர். அந்தப பாளையக்காரர்கள், அவரவர் பாளையத்தில் வரிதண்டுதல், குற்ற விசாரணை செய்து தண்டித்தல், தம் இறைவராகும் மதுரை நாயகர் சேவகத்துக்கும் தமக்குரிய கொத்தளக் காவலுக்கும் தமது பாளையப் பராமரிப்புக்கும் வேண்டிய படைகளை அமைத்துக் கொள்ளுதல், முதலிய உரிமைகளைப் பெற்றும்; தமது மொத்த வருமானத்தை மூன்று பகுதிகளாக்கி, ஒரு பகுதியைத் தாம் அனுபவித்தும், ஒரு பகுதியை நாயகருக்குக் கப்பமாக இறுத்தும், மூன்றும் பாகத்தைப் படைகளின் பராமரிப்பில் செலவிட்டும் ஒழுகும் கடமையைக் கையேற்றும், சிற்றரசு புரியும்





மதுரை—பழைய கோட்டையின் பாகங்கள்.
மேற் கட்டடங்கள் இப்பொழுது
ஆசுபத்திரியாய் உபயோகமாகின்றன

படி ஏற்படுத்தினர். இவ்வண்ணம் (military fief) அமரநாயக முறையாக நாட்டுக்கு வேலிகோலிய சூழ்ச்சியின் திறலும் எதிர்நோக்கப் பேரறிவும், விசுவநாதர் மகனை குமார கிருஷ்ணப்பநாயகர் ஆட்சியிலே, மதுரை நாயகரது அதிகாரத்தை எதிர்த்த தும்பிச்சிநாயக்கனையும் கண்டிராஜனையும், பாளையப்பட்டார் உதவியைக் கொண்டு ஒடுக்கித் தொலைத்த காலத்திலும்; பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலே, ஆறுகாடு நவாபிடமிருந்து பாண்டிமண்டல ஆட்சியைப் பெற்ற ஈஸ்டிந்தியா கம்பெனியார், நாட்டைக் கைக்கொண்டு வரிதண்ட முயன்றபோது நிகழ்ந்த பாளையக்காரர் யுத்தகாலத்திலும், நன்கு துலங்கின. இஃதன்றி, இன்றுமே தென்பாண்டியிலே பலவூர்களில், போலீசார் அதிகாரத்தினும் திறமாகச் சிறந்து விளங்கும் ஊர்க்காவல் முறை, அக்காலத்தில் அரியநாதர் ஏற்படுத்தியதே.

இவ்வாறாக நாட்டை ஒழுங்குசெய்து, காவலுக்கு வேண்டிய ஊர்களில் கோட்டை கொத்தளங்களைக் கட்டி, ஆணை மீறியவரைத் தண்டித் தடக்கி, அரியநாதர் நிலை நாட்டிய மதுரை நாயகர் ஸம்ஸ்தானம், இக் காலத்திலே திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயமுத்தூர் என்று வழங்கும் ஜில்லாக்களையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண் டிருந்தது; நாஞ்சிநாடு என்னும் மலையாளப் பகுதியும், அதற்குட்பட்ட எழுபத்திரண்டு பாளையங்களில் ஒன்றாயிருந்தது.

இன்னணம் அரியநாதர் சீரும் சிறப்பும் திகழப் பாண்டிநாட்டை ஆண்டுவரும் காலத்திலே ஒரு நாள், பாளையக்காரர் பலரும் பரிவாரங்களும் புடைசூழ, இராஜ

சபையிலே அவரும் விசுவநாதரும் கொலுவீற் றிருக்கும் சமயத்தில், காவலாளர் தடுப்பதையும் மீறி, ஒரு பிராமணர் சபைக்குள் நுழைந்து, அரியநாதரை அணுகினர். பிராமணரைத் தடுப்போரை விலகச் சொல்லி, அரியநாதர், வந்தவரைப் பார்த்து: "தாங்கள் யார், ஸ்வாமி, இப்படி ராஜசபைக்குள் அவசரமாய் மீறி வருகிறீர்கள்? என்ன செய்தி?" என்று கேட்டார்.

பிரா:—தாங்கள் தானே தளவாய் அரியநாயக முதலியார் என்கிறது?

அரிய:—ஆம், நான் தான்; அரியநாயகன் என்றும், அரியநாதன் என்றும் சொல்வார்கள்.

பிரா:—நமக்குக் காஞ்சீபுரம். இரண்டு வேதம் வரும்; கொஞ்சம் சாஸ்திராப்யாசமு முண்டு. பிதா அவாள் சிசுப் பிரகிருதியிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டாள். வடக்கே காசிக்குப் போய் அத்தியயனம் பண்ணி, பண்டித பட்டம் ஸம்பாதித்துக் கொண்டு வந்தேன். எங்கள் பரம்பரை குலவிர்த்தி, புரோகிதம். பிதா அவாளுக்கு ஜோஸ்யம் நன்றாய் வருமாம். இந்தக் கன்னி மாஸத்திலே, ஸரஸ்வதி பூஜைக்காக ஏதோ சில புராதன ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருக்கும் ஸமயத்திலே, பிதா அவாள் கைப்பட ஒரு ஓலைநறுக்கும், இதோ, இந்த ஓலைநறுக்கும் அகப்பட்டது. கொஞ்சம் விசாரணை செய்ததிலே, ஆச்சரியமா யிருந்தது. இது தங்கள் ஸ்வஹஸ்த லிகிதந்தானு, பாருங்கள்" என்று சொல்லி, இடுப்பிலிருந்து ஒரு பழைய ஓலைநறுக்கை எடுத்து நீட்டினர்.

அரியநாதர், அதைவாங்கிப் பார்க்க, நாற்பது ஆண்டு

களுககு முன்பு, தன் சிறுபிராயத்திலே, மெய்ப்பேட்டு மைதானத்தில் குறிசொன்ன பிராமணருக்குத் தான் எழுதிக்கொடுத்த உறுதிமொழி ஓலைச் சீட்டா யிருந்தது. உடனே அவர் எழுந்து, பிராமணரை மரியாதையோடு வணங்கி, தன் பக்கலில் அவருக்கோர் ஆதனமளித்து வீற்றிருக்கச் செய்து, பிறகு தான் இருந்து, விசுவநாதரும் சபையோர் பிறரும் ஆச்சரியத்தை அடையும்படி, நடந்த விருத்தாந்தத்தை எடுத்துக் கூறினார். அப்பால், பிராமணரை நோக்கி: "சுவாமிகளே! இது நான் எழுதிக் கொடுத்த ஓலைதான்; தங்கள தந்தையார் இல்லையே என்று வருந்துகிறேன். என் வாக்கை நிறை வேற்ற நான் சித்தமா யிருக்கிறேன்" என்றார்.

பிரா:—ஸந்தோஷம்: தங்கள் ஸத்தியமே ஸத்தியம். அரிச்சந்திரனும் தாங்களும் ஸரிஸமானமே. தாங்களோ, பிதா அவாள சொன்னது போலவே, ராஜாதி ராஜனாய்ச் சோபிக்கிறீர்கள். நானோ, ஏழைப் புரோகிதன்; வைதிகன்; பிராமண விருத்தியை விட்டுவிட்டு, ராஜ்யபரிபாலனம செய்யப் போகிறேனா என்ன? எனக்கு வேறொன்றும அபேக்ஷையில்லை: ஏதோ, சொந்த ஊர், ஏகாம்பரநாதர் க்ஷேத்ரம், காஞ்சீபுரத்திலேயே ஒரு வீடு, குடும்ப ஸுக ஜீவனத்துக்கு வேண்டிய பூஸ்திதி, தோட்டம், துரவு, மாடு, கன்னு, இல்லையா, அதுகள் கொஞ்சம்; இவ்வளவு அநுக்ரகம பண்ணினால், மஹா த்ருப்தி. பிராமணனுக்கு இதைவிட வேறென்ன வேண்டியிருக்கு? என்ன? நீங்கள் தான் சொல்லுங்களேன்.

இதைக் கேட்ட சபையோர், பிராமணரது மனநிறைவையும் ஸந்துஷ்டியையும் கண்டு வியப்படைந்தனர்.

அரியநாதர், அந்த விப்பிரோத்தமருக்கு வேண்டிய யாவும், அவர் வேண்டியதினும் பதின்மடங்கு அதிகமாகவே உதவி, அன்றுமுதல் அவரைத் தன் குடும்ப குருவாக வைத்துக்கொண்டார்.

## 4. தலைக்கோட்டைச் சண்டை.

ஓர் அரசாட்சியோ இல்லற வாழ்க்கையோ மற்றெந்த வைபவமோ, மங்களகரமாய் ஐம்பது ஆண்டுகள் நடைபெறின், அதன் முடிவிலே, அந்தச் சுபகாரியத்தின் "பொன் விழா" (Golden Jubilee) கொண்டாடுதல் மேல்நாட்டார் மரபு. நமக்குள் அந்த வழக்கம் இருப்பின், அரியநாதர் விசுவநாதர்களின் அரும்பெரும நட்பினது "பொன் விழா"க் கொண்டாடுதற்குரிய காலத்திலே, முடிபுனை திருவிழா ஒன்று தற்செயலாய் நிகழ்ந்தது. வாழ்க்கைப் போராட்டத்திலே களைப்புற்ற விசுவநாத நாயகர், அதுகாறும் புகழொளி பொலிந்து விளங்கிய தன் வாழ்நாட்பரிதி அஸ்தமிக்குமுன், தந்தைக்கேற்ற சேயான தன் மகன் குமார கிருஷ்ணப்ப நாயகருக்கு முடிசூட்டி, அவரைத் தன் ஸ்தானத்தில இருத்தி, சிறிது இளைப்பாற விரும்பினர். அரியநாதரும் அதற்கு இசையவே, கிருஷ்ணப்ப நாயகர், ருத்ரோத்காரி வருஷம தை மாதத்திலே பாண்டியநாத ரானார். அவ்வண்ணம் மகன் முடிசூடிய பின்னர்ச் சில மதிகளை வாழ்ந்து, விசுவநாதர் தேக வியோகமானார்.

தன் ஆருயிர்த் துணைவருக்காக வருந்திக்கொண்



6174a
மறைமலையடிகள் நூல்நிலையம் MARAIMALAI ADIGAL

டிருக்கையிலே, விஜயநகர ஸம்ஸ்தானத்தைக் கெடுக்க முகம்மதியர் அனைவரும் கூடிச் சூழ்ந்துகொண் டிருப்பதால், சிறிதும் தாழ்க்காது ஆண்டு வந்துசேர வேண்டுமென்ற மகாராயரின் ஆணை வரவேதய்த, "உடுக்கை இழந்தவன் கை போல"ப் பரபரத்து, உடனே திரட்டக்கூடிய சதுரங்க சைனியங்களோடும், தன் பரிவாரத்தோடும், அரியநாதர் வடக்கே சென்றார். மூவாயிரத்துச் சில்லறை ஆண்டுகளுக்கு முன்னர் குருக்ஷேத்திரத்திலே நிகழ்ந்த பாரதப்போர் தொட்டு, இரண்டு தலைமுறைக்கு முன்பு அதனருகே நடந்த "சிப்பாய்க் கலக"ச் சண்டை இறுதியாக, இந்தியாவிலே மிகப் பலவிடங்களில் நடந்த மிகப்பல சமரங்களிலே அதிமுக்கியமாக மதிக்கப்படும் சிலவற்றுள், கி. பி. 1565-ம் ஆண்டின் துவக்கத்தில் தலைக்கோட்டையின் அருகு நிகழ்ந்த போரும் ஒன்றாகும். அதைப பற்றிக் கூறுமுன், நமது நண்பர் இருவரும, நாகமநாயகரை அடக்குதற் கென்று படையெடுத்துத் தமிழ் நாடுற்ற பின்பு, முப்பத்தேழு வருஷங்களாக, விஜயநகர விருத்தாந்தங்களைச் சுருக்கி யுரைத்தல் பொருந்தும.

கிருஷ்ணதேவ மகாராயர் 1530-ம் ஆண்டிலே புகழுடம்பை நிலைநிறுவிப் பொய்யுடலை நீததார். அதன்முன், நாட்டில உட்பகைக் கலகங்களை அருசித் தான் முடிசூடிய காலத்திலே சிறையில்அடைதது வைத்திருநத தன் சகோதரர்களை விடுதலை செய்து, அவர்களில் அசசுதராயர் என்பவரே தனக்குப் பின் பட்டத்துக்கு வரும்படி நியமித்திருந்தார். நீண்ட சிறைவாசம் இராச்சிய நிருவாகத்துக்கு ஏற்ற முற்பயிற்சி யன்றெனின், ஒருமண்டல காலம்வரை சிறப் பேதுமின்றிக் கழிந்த அச்சுதராயர் ஆட்சியிலே, விஜயநகர

ஸம்ஸ்தானம் தொய்வுறத் தொடங்கியது வியப்பன்றே. அச்சுதருக்குப் பின், அவர் தமயன் அரங்கராயரின் மகன் சதாசிவராயர் பட்டத்துக்கு வந்தார். தலைக்கோட்டைச் சண்டை நடந்ததும் விஜயநகரம் பாழாக்கப்பட்டதும் அவர் ஆட்சியிலேதான். அந்தச் சதாசிவராயர், மகாராயப் பட்டத்தைத் தாங்கிப் பொம்மை ராஜாவைப்போலச் சிங்காசனத்தில் வீற்றிருந்தாரே யன்றி, உண்மையில் இராஜ்யத்தை ஆண்டுவந்தவர் கிருஷ்ணதேவராயரின் மருமகனான இராமராயரே. "மாப்பிள்ளை" இராமராயர் மகா கர்வி; இராஜ்ய பரிபாலன முறைகளையும் சூழ்ச்சிகளையும் நன்கு கவனியாது, அதிகார உன்மத்தம் கொண்டு, நியாயம் தவறி ஒழுகுபவர். விஜயநகர ஸமஸ்தானத்துக்கும் கிருஷ்ணாநதிக்கும் வடபாலுள்ள பீஜபுரம், கோலகொண்டா, ஆமதுநகரம், பீதார், பிரார், என்னும் ஐந்து முகம்மதிய ராஜ்யாதிபதிகளும உட்பகையினால் அடிக்கடி ஒருவரோடொருவர் போராடியதில இராமராயர் கலந்து, பீஜபுரத்துச் சுல்த்தான் அடில்ஷாவுக்கு உதவிபுரிந்து, ஆமதுநகரத்து நிஜாம்ஷாவின பகைமையை அடைந்திருந்தார். இவ்வண்ணம முகம்மதியர்களுக்குள் நடந்த போர்நிகழ்ச்சிகளில் உதவிசெய்துவந்த விஜயநகரத்து ஹிந்து சைநியங்கள், மதத்துவேஷத்தினால் முகம்மதியரையும் மசூதிகளையும் அவமதித்தொழுகிப் பல அழிப்புகள் செய்தன. இதனால், இராமராயரின் உதவியை நாடி அவர்க்கு நண்பராயிருந்த முகம்மதியமன்னருமே, உள்ளூர மனம் நொந்து வருத்தமுற்றனர். இராமராயர் இதைச் சிறிதுமே கவனியாததுமன்றி, தன் உதவியை நாடுவோரும் தன்னால் போரில் முறியடிக்கப் பட்டோருமான முகம்மதிய

மன்னர்களையும், அவர்கள் அனுப்பும் தூதர்களையும் பிரதிநிதிகளையும் மானக்கேடாக நடத்தி வந்தார்.

வாழ்விலே செருக்கினாலும் பொறாமையினாலும் ஒருவரையொருவர் மதியாது பகைத்து ஒழுகுவோர், தாங்குதற்கரிய தாழ்வுற்ற சமயத்திலே, தருக்கொழிந்து நன்மதியுற்று நட்புக்கொண்டு தம் பொதுப் பகைவனைத் தாக்கித் தகர்க்க முபலுவதைச் சரித்திரத்தில் பரக்கக் காணலாம். "மிதியுண்ட புழுவுமே திரும்பித் தாக்கும்" என்பது, ஆங்கில முதுமொழி. அவ்வண்ணமே இவைந்து முகம்மதிய வேந்தர்களும் ஒன்று சேர்ந்து, விஜயநகரத்து ஹிந்து ஸம்ஸ்தானத்தை அழிக்கக் கங்கணம் பூண்டனர். தமமுடைய புதிய நட்பு வலிமையுற்று நிலைபெறுதற்கென்றே, நிஜாம்ஷாவின் மகள் சாந்தபிபியை அடில்ஷாவுக்கும், அடில்ஷாவின் சகோதரியை நிஜாம்ஷாவின் மூத்தமகனான முர்த்திஷாவுக்கும் மணம்புரிந்து, இரு குடும்பத்தாரும் நெருங்கிய உறவினராயினர். அப்பால், இராமராயரைக் கெடுபபதொன்றே குறியாக, முகம்மதிய மன்னர்கள் ஐவரும் கூடிச்சூழ்ந்து, பெரும் போருக்குப் பிரயத்தனஞ் செய்யலானார்.

முகம்மதியர் சூழ்ச்சிகளை இராமராயர் ஒரு பொருட்டாகப் பாராட்டில ரெனினும, தானும் போர்க்குச் சன்னத்தராகி, அரியநாதர் உடனே புறப்பட்டு வரும்படி அவருக்கு ஆளனுப்பினார். இராமராயருடன் பிறந்த திருமலையும் வேங்கடாத்திரியும் அவர் ஆணையைமீறி அதற்குமுன் ஒருகால் கலகஞ்செய் திருந்தமையால், அவர்களிடத்துப் போதிய நம்பிக்கை அவருக் கில்லை; அரியநாதரின் சூழ்ச்

சித் திறமையையும் இராஜபக்தியையும் சத்தியத்தையும் நன்குணர்ந்தவ ராதலின், அவரை அழைப்பித்தார்.

கிருஷ்ணையாற்றின் வடபால் முகம்மதியர் நாடுகளென்றும், தென்பால் விஜயநகர ஸம்ஸ்தானமென்றும் முன்பே கூறினோம். தலைக்கோட்டை, கிருஷ்ணைக்கு இருபத்தைந்து மைல்களுக்கு வடக்கே, தோன் என்னும் ஆற்றின் கரையில் இருக்கின்றது. அந்தப் பிரதேசம் பீஜபுர மன்னன் அதிஷ்டானவைச் சேர்ந்தது. பீஜபுரத்தின் அருகே முகம்மதிய மன்னர்கள் ஐவரும் தத்தம் படைகளுடன் வந்து சந்தித்து, தெற்குநோக்கி வந்து, தலைக்கோட்டையில் தங்கலாயினர். அவ்வூர் அதிஷ்டாவின் எல்லையாதலின், தன் கூட்டாளிகளையும் அவர் படைகளையும் அதிதிகளாகப் பாராட்டி, அவர்களுக்கு நல்விருந்தூட்டி, அவர் உபசரித்தார். இராணுவ உக்கிராணங்களையும், படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிறவும் தாமாது தங்காது தடையின்றி வந்துசேரும் வழிகளையும், அவற்றைச் சுமந்துவரும் பண்டிகள் பொதிமாடுகள் முதலியவற்றையும் பற்றித் தீர்க்காலோசனை பண்ணி, தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டனர். அப்பால், படைகள் கிருஷ்ணையைக் கடந்து எதிரிகளின் தெனகரையை அடைதற்கு ஏற்ற துறைகளை அறிந்துவரும்படி, ஒற்றர்களை அனுப்பினர்.

விஜயநகரத்திலோ, நகரவாழ்க்கையும் திருவிழாக்களும் வியாபார நடபடிக்கைகளும் என்றும் போலவே நிகழ்ந்து வந்தன. பல்லாயிரம் பொதிமெருதுகள் நாள்தோறும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களைத் துறைமுகப் பட்டணங்களுக்குச் சுமந்துபோய் மீண்டுவந்துகொண்டிருந்தன. தன் முதுகின்மீது வந்துட்கார்ந்த கொசுவை

மதியாத மிருகேந்திரனைப் போலவே, இராமராயர் அலக்ஷியமா யிருந்தார். ஆயினும், அரியநாதர் பாண்டி மண்டலப் படைகளுடன் வந்துற்றபின்,

" ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் "

என்று, இறுமாந் திருத்தல் நன்மதி யன்றென்றும்;

" வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் " என்றும்;

" இளைதாக முள்மரம் கொல்க : களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து "

என்னும் யுக்திப்படி ஒழுகுவதே தக்கதென்றும், எடுத்தோதித் தூண்ட, இராமராயர், தன் தம்பிகள் திருமலையையும் வேங்கடாத்திரியையும், கிருஷ்ணையின் தென்கரைத் துறைகளைக் காக்கும்படி, சதுரங்க சேனைகளுடன் அனுப்பினார். அப்பால் அவரும் அரியநாதரும் எஞ்சிய படைகளுடன் போர்முகம் நோக்கிச் சென்று, கிருஷ்ணைக்குப் பத்துமைல் தென்பாலுள்ள மூத்கல் கோட்டையைத் தம் படைவீ டாக்கிக்கொண்டனர். விஜயநகர ஸம்ஸ்தானத்துப் படைகளின் மொத்தம், ஒன்பது லக்ஷம் காலாள், நாற பத்தையாயிரம் பரிவீரர், ஈராயிரம் போர்யானைகள், பதினையாயிரம் துணைப்படைவீரர் என்றும்; முகம்மதியரின் படைத்தொகை அதில் பாதி யென்றும், சொல்லப்பட்டிருக்கிறது; வெடிகுண்டு பீரங்கிப் படைகள் வேறு போலும். அந்த நாளிலே சாதாரணப் படையாட்கள், குருதிக் கறையைக் காட்டாது மறைக்கும்படி சாயம் தோய்த்த துவர்நிற அங்கியும், குறுகிய கால் சட்டையும், அணிந்திருப்பர்; வேல், கட்டாரி, வாள், வில், அம்புகளே அவர் படைக்கலங்களாம்.

# தளவாய் அரியநாத முதலியார்

முகம்மதியரின் சைநியங்கள் இங்குலிகி என்னும் கிராமத்தின் அருகே கிருஷ்ணையின் வடகரையை வந்தடைந்த போது, விஜயநகரத்துப் படைகள் மண்மதில்களை எழுப்பிப் பீரங்கிகளை அணிவாய் அமைத்துத் தென்கரையைக் காத்து நிற்பதைக் கண்டனர். சைநியம் ஆறு தாண்டு தற்கு மற்றத் துறைகளைவிட இங்குலிகித் துறையே இசைவா யிருந்தது; அத்துறையே மற்றவற்றினும் பலமாய்க் காக்கப்பட்டு மிருந்தது. அதை யறிந்த சுல்த்தான்கள் ஒரு தந்திரம் செய்தனர்: அவ்விடத்து நதியைத் தாண்டுவது அசாத்தியமென் றுணர்ந்து, வேறு சுலபமான துறையை நோக்கிச் செல்வார்போல நடித்து, பத்து மைல்களுக் கப்பாலுள்ள தானூர்த் துறையை நோக்கி வடகரை வழியே தம் படைகளைச் செலுத்தினர். இராமராயரின் படைகளும், முகம்மதியருக்கு எதிர்முகமாக, தென்கரை வழியே தானூரை நோக்கிச் சென்றன. சிறுவர் கிளித்தட்டு விளையாட்டில் ஒருவரை ஒருவர் மறிப்பது போல, இருதிறத்துப் படைகளும் மூன்று நாள் இவ்வாறு தட்டுமறித்தபின், முகம்மதியர் தானூரில பாசறை கொண்டதைக் கண்டு, விஜயநகரத்து ஆற்றுக்காவற் படைகள், முதலில் இங்குலிகித் துறையைக் காத்தது போலவே தானூர்த்தென்கரைததுறையைக் காக்கலாயின. சுல்த்தான்கள் விரும்பியதும் அதுவே: இங்குலிகித் தென்கரைக் காவல் நீங்கியதை ஒற்றர்களால் அறிந்த முகம்மதியர், இரவில் இருட்டிலே சரேலெனத் திரும்பிப் பாய்ந்து, ஆற்றைத் தாண்டி, 1565-ம் வருஷ ஜனுவரி மாதம் 22-ம் தேதியன்று காலை, கிருஷ்ணையின் தென்கரையிலே விஜயநகர ஸம்ஸ்தான எல்லையிலே, போருக்கு ஆயத்தமாய் அணிவகுத்து நின்றனர்.

தான் எதிர்பாராத வண்ணம் ஏமாற்றுண்ட இராம ராயர், இதைக் கண்டும் நிலைகலங்கிலர். ஆற்றுக்காவலில் அமைந்திருந்த அவர் தம்பிகளும், தம் முயற்சி பயன் படாதாகிவிடவே, தக்கணமே அதைக் கைவிட்டு, வெகு சாதுரியமாய்த் தம் படைகளையும் இராமராயரின் மூல சைநியங்களோடு சேர்த்துக் கொண்டனர்.

1565 வரு ஜனுவரி மீ 23உ செவ்வாய்க் கிழமை யன்று, ஹிந்துக்களும் முகம்மதியரும் தத்தமக்குரிய படைகள் அனைத்தையும் கொண்டு கடும்போர் புரிந்தனர். முகம்மதியர் வழியில் தங்கிய பாசறைகொண்ட தலைக்கோட்டையின் பெயரே அச் சண்டைக்குச் சரித்திரத்தில் வழங்குகின்ற தாயினும், உண்மையில், கிருஷ்ணையாற்றுக்குத் தெற்கே, இங்குலிகியி லிருந்து மூடுகல்லுக்குச் செல்லும் மார்க்கத்திலே, முக்கியமாய்ப் போகபுரம் என்னும் ஊரினருகே தான், அப்போர் நிகழ்ந்தது. தன் தம்பிமார் திருமலையும் வேங்கடாத்திரியும் இடப்புறமும் வலப்புறமும் முறையே தலைமைவகிக்க, தானே நடுவில் நின்று, இராமராயர் சைநியங்களைப் போரில் நடத்தினர். அவர் கிழவரே யாயினும், முப்பது பிராயத்துக் கட்டிளங்குமரனையே போல, ஐராவதத்தை நிகர்க்கும் மிகப்பெரிய தன் போர் யானையின் மீதேறி, இருதிறத்துப் படைகளும் தன்னை எளிதில் நன்கு காணும்படி உயர்ந்து விளங்கி, சைநியங்களைத் தைரியப் படுத்தியும், வீரச்செயல்களுக்கேற்றபடி வெகுமானங்கள் அளித்து உற்சாகப்படுத்தியும், போர் புரிந்தார்.

முகம்மதியர் கட்சிப் படைகள், திருமலையை எதிர்த்துச் சுல்தான் அலி அடில்ஷாவின் தலைமையின்கீழ் பீஜபுர

சைநியங்களும்; வேங்கடாத்திரிக்கு நேராக கோல்கொண்டா, பீதார், பீரார் சுல்தான்களின் சேனைகளும், நடுவே இராமராயரை எதிர்த்து, அவர் ஜன்மவிரோதியான ஹுசேன் நிஜாம்ஷாவின் தலைமைகீழ் அம்புராகாரத்துத் தண்டுகளுமாக, அணிவகுக்கப்பட்டிருக்கின் முகம்மதியர், தமது நீண்ட படைமுகத்தின் மத்தியைப் பீரங்கிப் படை காவல் காத்து, இருபுறச் சிறகின்முனைப்பும் பன்னிரண்டு இராமர்களின் தோள்கள் புடைக்க, போர் விரும்பி நின்றனர். சுல்தான் நிஜாம்ஷா, தன் போர் முகத்தின் நடுவிலே மூன்று வரிசையாக அறுநூறு பீரங்கிகளை அமைத்து, எதிரிகளுக்கு அவை புலப்படாவண்ணம் அவற்றின் முன்பு இரண்டாயிரம் வில்லாட்களை நிறுத்திவைத்து மறைத்திருந்தார்.

விஜயநகர வீரர்கள், வெடிகுண்டு பாணங்களைச் சேனைமாரிபோற் பொழிந்து சண்டையைத் தொடங்கி, முகம்மதியரை நெருங்கிச் சைகாந்து சாய்த்து, இருபுறமும் அவர் பின்னிடும்படி பொருதனர். போர் முகத்தின் நடுவிலே, வில்லிகளின் அம்புமாரியைப் பொருட்படுத்தாது இராமராயரின் படைகள் மேற்சென்ற போது, நிஜாம்ஷாவின் வில்லாட்கள் விலகிவிடவே, மறைவில் இருந்த பீரங்கிகள் குபீரென நெருப்பு மழையைப் பொழியாநிற்க, மேற்சென்று தாக்கிய வீரர்கள் அதைத் தாங்கமாட்டாது பின் வாங்கினர். உடனே இராமராயர் யானையை விட்டிறங்கி, பொன்னையும் மணிகளையும் வாரியளித்து, தன் தண்டுகள் மீண்டும் மேற்சென்று பீரங்கிகளைத் தாக்கும்படிச் செய்தார். ஒரு பல்லக்கில் ஏறிக்கொண்டு, அங்கும் இங்கும் போர்க்களத்தில் திரிந்து, தன் வீரர்களை உற்சாகப்

படுத்தலானார். அதைக் கண்ட தளகர்த்தர்களும் அரிய நாதருமே, அவ்வண்ணம் அவர் அந்தச சமயத்திலே பல்லக்கி லிருப்பது தகா தென்றும், ஒருவேளை தோல்வியே நேர்ந்துவிட்டால, விரைவில் தப்பியோடுவதற்கு யானை குதிரைகளை ஏற்ற வாகனங்க ளென்றும், கூறினர்.

அதைக் கேட்ட இராமராயர்: "இந்த ஆமதுநகரப் பூனைகளின் போர் வலியை யான் அறியேனோ? இதுவரை எத்தனை முறை இந்த நிஜாம்ஷா எனக்குத் தோற்றோடிப் யிருக்கிறான்! இதோ, இன்னும் ஒரு நாழிகையில், சூறை முன் பூளைப்பூப்போல, இவன் பறக்கப் போகிறான், பாருங்கள். ஆனால், இந்த முறை அவனைத் தப்பவிட்டு விடாமல், எவ்வண்ணமாவது அவன் தலையைக் கொய்துவந்து விட வேண்டும். மற்ற இரண்டு துரோகிப் பயலகள் இருக்கிறார்களே, பீஜபுரம் அடில்ஷாவும் கோல்கொண்டா இபிராஹிம்ஷாவும், அவர்களை உயிரோடு பிடித்துக் கொண்டு வந்து, 'இராமராயருக்குத் துரோகம் செய்தவர்களின் கதி இது தான்!' என்று எல்லோரும் தெரிந்துகொள்ளும் படி, அவர்களை ஆயுள் பரியந்தம இரும்புக் கூடுகளில் அடைத்து வைககவேண்டும்" என்றார்.

அரியநாதர்:—"மாபபிள்ளைராயர் சொல்வது சரியே, அப்படியே நடக்கவும் செய்யும். ஆயினும், ஜயலக்ஷ்மியும், தனலக்ஷ்மியைப் போல, ஒரு வேசைதானே? இன்று ஒருவனிடமும் நாளை வேறொருவனிடமும் இருப்பவள் தானே? அதனால் தான்,—"

இராமராயர் குறுக்கிட்டு மறுத்து: "அரியநாதரே! இந்தப் பேச்செல்லாம் வீணை. விஜயநகரத்தின் அடிமையே விஜயலக்ஷ்மி. அப்படிக் கின்றி ஒரு வேளை

நிகழ்வதா யிருந்தால், நான் இந்த யுத்த களத்தைவிட்டு உயிர்கொண்டு புறங்காட்டித் திரும்பமாட்டேன். நானு வது, அந்த நிஜாம்ஷாவாவது, இன்று இங்கே மடிவது நிச்சயம். நானே மாளும்படி நேர்ந்தால், இப்பொழுதே இங்குள்ளவர் எல்லார் முன்னிலையிலும் சொல்லிவிடுகிறேன் கேளுங்கள்: சதாசிவ மகாராயர் பொம்மலாட்டம் ஆடினதெல்லாம் போதும்; அதனால் பல சங்கடங்களுண்டு. என் தம்பிமாரோ, எனக்கே துரோகம் செய்தவர்கள். நான் போனபின் ஒருவரோ டொருவர் கலகம் செய்து, ஸம்ஸ்தானத்தையே நாசமாக்கி விடுவார்கள். அவர் களுக்கு, இந்தச் சமயத்திலே வேண்டிய சாமர்த்தியம் போதாது. எனக்குப்பின் அரியநாதர்தான் ஸம்ஸ்தானத் தைக் காப்பாற்றக் கூடியவர். இந்த ஸம்ஸ்தானத்துக்கு, அம் மான் கிருஷ்ணதேவ மகாராயர் காலம் தொட்டு, அவரை விட ஆப்தர்கள் இல்லை. அதனால் எனக்குப் பின் அவர் அடைக்கலமே இது; அவரே மகாராயராக மகுடாபிஷேகம் செய்துகொண்டு, இந்த முகம்மதியப் பதர்களையெல்லாம் ஒடுக்கி நசுக்கி, ஸம்ஸ்தானத்தை ரக்ஷிக்கட்டும்" என்றார். "அப்படியொன்றும் மாப்பிள்ளை ராயருக்குக் கேடு வராது; இன்று ஜயம் நம்மதே" என்று, அரியநாதர் விடையளிக்க, "நானும் அப்படியே நம்புகிறேன்", என்று கூறிவிட்டு, பல்லக்கி லிருந்துகொண்டே, இராம ராயர், மீண்டும் படைகளைத் தைரியப் படுத்தித் தூண்டிக் கொண்டிருந்தார்.

இராமராயரின் ஏவுதலால் மீண்டும் குண்டுகள் நிஜாம் ஷாவின் பீரங்கி வரிசைகளைச் சென்று தாக்கின. அப் பொழுது, நிஜாம்ஷா, குண்டுகளுக்குப் பதிலாக ஏராள

மான செப்புக் காசுகளைப் பீரங்கிகளுக்குள் இடித்துச் செலுத்திச் சுடும்படி செய்தார். இந்த சமயோசிதமான யுக்தியினுல், உருக்கிய செம்புவந்து மழைபோற் பொழிய, அதைத் தாங்க மாட்டாது தவித்து விஜயநகரப் படைகள் நாற்புறமும் சிதறுண்டு ஓடலாயின. அதுவுமன்றி, அது வரை யானையின்மீது யாவரும் காணும்படி விளங்கிய இராம ராயர் பல்லக்கி லிருப்பதை அறியாத சைநியங்கள், அவர் மடிந்தார் அல்லது கடுங்காய முற்ருரென்று அஞ்சி மனந் தளர்ந்தனர்; இருபுறத்து யானைகளும் அங்குமிங்கும் ஓடிச் சாடித் துவைத்துப் போர்க்குழப்பத்தை அதிகரித்தன. பீரங்கிகளின செப்புமாரிக்குப பயந்து ஹிந்துக்கள் ஓடு வதைக் கண்ட நிஜாம்ஷா, பீரங்கிவரிசைகளின் இடை யிடையே சென்று தாக்கும்படி 5000-குதிரைப் படை களை ஏவ, அவர்கள் வந்து கொடுங்கொலை புரியலாயினர். இவற்றை யெல்லாம் கண்ணுற்ற இராமராயர் தன் தைரிய நிலை கலங்கித் தடுமாற்றமுறருர். தன் இருபக்கலிலும் தன் தம்பிமார் திருமலையும் வேங்கடாத்திரியும் போரில் வெற்றி பெற்றுத் தம்மை எதிர்த்த முகமமதியர் பின்னிடும்படித் துரத்தியதை அவர் அறிந்திலர். இராமராயர் யானை மேல் இருக்கும்போதும், அவர் அதைவிட்டிறங்கிப் பல்லக்கேறிய போதும், அவர் இருக்கும் இடத்தையே கவனித்து வந்த நிஜாம்ஷா, அவ்விடத்தை நோக்கித் தன் படைவீரருடன் சென்ருர். நிஜாம்ஷாவின் போர்யானையும் படைவீரர்களும் பல்லக்கை அணுகவே, போகிகள், திகிலுற்றுத் தம் பல் லக்கைக் கீழே வைத்துவிட்டு, ஓடிப் போயினர். அதை யறிந்த இராமராயர் பல்லக்கைவிட் டிறங்க, அருகிலிருந்த குதிரை வீரன், ஒருவன் அவர் ஏறி ஓடித் தப்பிக்கொள்

ளும்படி, தான் குதிரையைவிட் டிறங்கித் தன் குதிரையை அவருக் குதவினன். இராமராயர் குதிரையேறிய கணமே நிஜாம்ஷா அவரை நெருங்கி யடைந்து, " இதோ என் பழி யைத் தீர்த்துக்கொள்கிறேன்; இனி அல்லா எனக்கு என்ன வேண்டினும் செய்யட்டும்!" என்று கர்ச்சித்துக்கொண்டே தன் வாளால் இராமராயர் தலையை வீசிவிட்டார்.

இராமராயரின் அற்று விழுந்த தலையை ஒரு வேலின் முனையில் தூக்கி, இருபக்கத்துப படைகளும் பார்க்கும்படி உயர்த்திக் காட்டவே, முகம்மதியர்கள் பெருமகிழ்ச்சி யையும் உற்சாகத்தையும, ஹிந்துக்கள் விசனத்தையும திகிலையும் அடைந்து, அவர் ஆரத்திக் கொலவும், இவர் சிர்குலைநது நடுநடுங்கி விஜயநகரத்தையும் மற்றிடங்களை யும்நோக்கி ஓடவும், ஆரமபித்தனர். அதுகாறும் திரு மலையும் வேங்கடாத்திரியும் உற்றிருநத வெற்றியும் பய னற்றதாகி, அவர்கள் படைகளும் புறங்காட்டி யோடி விட்டன. இராமராயரே யன்றி, வேங்கடாத்திரியும் போர்க்களத்தில மடிநது வீழ்நதார். அன்று முகம்மதி யரின் கைகளால் மாண்ட ஹிநதுப் படைவீரர் நூறாயிர வருக்கு மேல் என்பர்.

" விருதர் இருதுணி பார் நிறைந்தன ;
விடர்கள் தலைமலை வான் வளர்ந்தன ;
குருதி குரைகடல் போல் பரந்தன ;
குடர்கள் குருதியின் மேல் மிதந்தவே !"

அந்தக் களத்தைக கொள்ளையாடிய முகம்மதியப் படையாட்கள் ஒவ்வொருவரும் ஏராளமான செல்வத்தை யடையும்படி, சுல்த்தான்கள், போர் யானைகள் தவிர மற் றெல்லாவற்றையும் அவர்களுக்கே விட்டுவிட்டனர்.

அருந்திறல் வீரர்களின் தலைமைக்கீழ்ச் சேனாசமுத்திரத்தைப் போர்க்கனுப்பிய விஜயநகரம், அமைதியாய் அச்சமற்றதாய் விளங்கிக் கொண்டிருக்கையில், பேரிடி விழுந்தாற்போல, இராமராயரும் வேங்கடாத்திரியும் மடிந்து படைகள் முறியுண்டு தோற்ற செய்தி எட்டியது. முதலில் எவருமே நம்பிலர்; அப்பால், அரியநாதர், திருமலை, இராயர் குடும்பத்தினர் பிறர், தளகர்த்தர் படைவீரர்கள், எல்லோரும் வந்தடைந்தபின்பே, தோல்வி மெய்யென நம்பினர். அப்பொழுதும், விஜயநகரக் கோட்டையின் பலத்தையும், நகரவாசிகளின் பெருந்தொகையையும், இன்னும் மாளாது மீந்துள்ள படைகளின் பெருமையையும் எண்ணி, அரியநாதரும வேறு சிலரும், ஊக்கத்தையும் உறுதியையும் கைவிடாது, நகரத்தைக் காப்பதே கடனெனக் கருதினர். ஆயின், இராயர் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் இதற் கிணங்கிலர். தன் அண்ணனும் தம்பியும இறந்த பின்பு தானே தலைவராகிவிட்ட திருமலைராயர், பொம்மைராயரான சதாசிவராயரையும, இராயர் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பெண்கள் அனைவரையும், கைக் ககபபட்ட ஐசுவரியங்களையும் பொன்மணிகளையும், ஸமஸ்தான முத்திரைகள் விருதுகளையும், நவரத்ந கசிதமான சிமமாசனத்தையும், ஐந்நூற்றைபபது யானைகளின் மீது ஏற்றிக்கொண்டு, தென்பாலுள்ள பெனுகொண்டா கோட்டையை நோக்கி ஓடிவிட்டார். ஒரு சாமப் பொழுதிற்குள் இவ்வண்ணம் திரட்டி அவர் கொண்டுபோன பொன் மணிகள் மட்டும், பத்துக்கோடி பவுனுக்கு மேலிருக்கு மென்று மதிப்பிட் டிருக்கின்றனர்.

இதைக் கண்ட அரியநாதர், என்செய்வ தென்று

அறியாது திகைப்புற்று, இராமராயர் போர்க்களத்தில் மடியுமுன் ஸம்ஸ்தானம் தனக்கே அடைக்கலமென்று ஒப்புவித்ததை நினைந்து, அவர் கட்டளையின்படி, தான் மகாராயராகி மகுடம் புனைந்து விஜயநகரத்தைக் காக்கக் கருதி, தன் உறவினரோடும் குருவோடும் ஆலோசனை செய்தார். பரம்பரையான ராஜவமிசத்தாரே பயந்தோடி விட்டதைக் கண்கூடாப் பார்த்த அவர் உறவினர், அதற் கிணங்க வில்லை.

அவர் குரு: "இதென்ன கலியுக நீதி! மகாயுத்தம் சம்பவித்தால் வர்ண சங்கரமும் உண்டாகிவிடு மென்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதையிலே சொல்லியிருப்பது, இதைத் தானோ? என்றேனும் எங்கேனும் பூவைசியர் களான வேளாளர்கள், கிருஷித்தொழிலைக் கைவிட்டு, மகுடாபிஷேகம் செய்துகொண்டு, சிம்மாசனத்தி லிருந்து ராஜ்யபரிபாலனம் செய்ததுண்டோ? இது கண்ணால் கண் டது மில்லை, காதால் கேட்டது மில்லை.

(1) "பரிசர்யாத்மகம்கர்மா சூத்ரஸ்யாபிஸ்வபாவ ஜம்" என்று பிரதமத்திலே சொல்லிவிட்டு,

(2) "ஸ்வேஸ்வேகர்மண்யபிரதஸ் ஸம்ஸித்திம் லபதேநர:" என்றும்;

---

1. "மற்ற மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய் வது சூத்திரருக்குச் சுவபாவமா யுண்டான கருமமா யிருக்கிறது."


2. "அவனவனுக்கு விதித்திருக்கிற கருமத்தில் சிரத்தையை உடைய மனிதன் ஞானயோக்கியதையை அடைகிறான்."

(3) ச்ரேயான் ஸ்வதர்மோவிகுணப் பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்" என்றும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவான வர் கீதையிலே சொல்லி யிருக்கிறார். இது ஒரு நாளும் நியாயமாகாது; இதற்கு நான் ஸம்மதிக்கவே மாட்டேன்" என்று, வற்புறுத்திக் கூறினர்.

இதற்கேற்ப, மகாராயரோடும் இராஜகுடும்பத்தோ டும் திருமலைராயர் ஓடிப்போய்விட்டதைக் கண்ட நகரமாக் களும், மனங்கலங்கி, உறுதிநிலை தளர்ந்து, அரியநாதரின் உத்தேசத்துக்கு இணங்க வில்லை. இதனால், இயன்ற வளவேனும் ஸமஸ்தானத்தைக் காப்பாற்றும் பொருட்டு, அரியநாதரும் பெனுகொண்டா செல்லும்படி யாயிற்று.

இவ்வண்ணம் தலைவர்கள் அனைவராலும் கைவிடப் பட்ட குடிகளில் தத்தமக்குரிய சங்கம சொத்துக்களைக் கொண்டு தப்பியோடியவரைத் தவிர எஞ்சியவர், தம் ஆபரணாதிகளைப் பூமியில் புதைத்துவிட்டுத் தமதா லியன்றமட்டும் நகரத்தைக் காக்கச் சித்தமாயிருந்தனர். ஆயின் போர்ப்பழக்கமில்லாத உழவர்களும் வர்த்தகர் களும் சுகஜீவிகளும் என்செய்யலாகும்? மறுநாளே சுற் றுப் பக்கங்களிலுள்ள லம்பாடிகள் குறும்பர்கள் ஆதிய கள்ளர் குழாங்கள் வந்து புகுந்து, நகரத்தைக் கொள்ளை யாடத் தொடங்கின. மூன்றுநாள் முதல, வெற்றி வெறி யும் பழிக்குப்பழிவாங்கும் பகைமையும் மதத்துவேஷ மும் குடிகொண்டு குதித்தோங்கும் நெஞ்சினரான முகம்

3. "தன்னுடைய கருமமானது குணமற்றதான போதிலும், கிரமமாய் அநுஷ்டிக்கப்பட்ட பிறருடைய கருமத்தைக் காட்டிலும் சிரேஷ்டமானது."



விஜயநகரம்—யானைக் கொட்டகை

மதிய எதிரிகள் வந்தடைந்து, யமனையேபோல் கண்ணோட்டமேனும் பாரபக்ஷமேனும் இல்லாதவராய், ஊழி கால உருத்திரனையேபோல் அனைத்தையும் அழிப்பவராய், கொலையையும் கொள்ளையையும் அழிம்புகளையும் தொடங்கி, ஐந்து மாதகாலம் நிகழ்த்தினர்.

தாம் கொய்துகொண்ட இராமராயரின் தலையைப் பதனிட்டுச் சேமித்துவைத்து, தலைக்கோட்டைச் சண்டையின் ஆண்டுநிறைவுதோறும் அதற்குச செஞ்சாந்தும் எண்ணெயும் பூசி, 1829-ம் ஆண்டுவரை, அஃதாவது இருநூற்றைம்பத்தைந்து வருஷங்களாக, அத்தலையை ஆமதுநகரத்து நிஜாம்ஷாவின் சந்ததியார், பிற்காலத்து முகம்மதியர்களுக் கெல்லாம் காட்டிவந்தமையும்; பீஜபுரத்துக் கோட்டைச் சாக்கடையின் தூம்பாய் முகத்தில், இராமராயர் தலையைப் போல் கல்லாலடித்து இன்றைக்கும் காணும்படி வைத்திருக்கின்றமையும், அவர் மீது முகம்மதியருக்குள்ள க்ஷாத்திரத்தின் கடுமையையும், முன்னாளைய நாகரிகப்போக்கையும் ஒருவாறு விளக்கும்.

> "கறுத்தின்னா செய்தஅக் கண்ணும், மறுத்தின்னா
> செய்யாமை மாசற்றார் கோள்"

ஆவதன்றி, சாமானிய மனிதர் ஒழுகும் முறை யன்றென்பதையும்

> "மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்,
> அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"

என்பதன் மெய்ம்மையையும், விஜயநகர ஸம்ஸ்தானத்து ஹிந்துக்கள் நன்குணர்ந்தனர்.

திருமலைராயரின் பின்னரே பெனுகொண்டா சென்ற

அரியநாதர், விஜயநகரத்தின் அழிவையும் ஸம்ஸ்தான முற்ற சீர்குலைவையும் கருதி, திருமலைராயரோடு கலந்து கொண்டு, இவ்விதக் கேடுகள் பின்னும் நேராமல் தடுத்தற்குரிய ஆலோசனையைச் செய்து முடித்தார். கிருஷ்ண தேவ மகாராயரைப் போன்ற ஆன்ற சூழ்ச்சி அருந்திறல் வீரருக் கன்றி, ஒருகுடைக்கீழ் ஒடுக்கியாளுதல் எளிதில்லா அளவு அகன்று பெருகியுள்ள ஸம்ஸ்தானத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து, பெனுகொண்டாவைத் தலைநகராக்கி, சிம்மாசனாதிபதியா யாங்கிருந்து மகாராயப் பட்டத்துடன் ஆள்பவர், முகம்மதியர் தொந்தரை செய்யாது வடவெல்லையைக் காப்ப தென்றும்; சீரங்க பட்டணத்தை ராஜதானியாய்க் கொண்டு, ஒருவர் மேலைமலைத் தொடர்க்கு அப்பாலுள்ள பிரதேசங்களை ஆள்வ தென்றும்; சந்திரகிரியை ராஜதானியாய்க் கொண்டு ஒருவர் மலைத்தொடர்க்கு இப்பாலுள்ள சேர சோழ பாண்டிய தொண்ட மண்டலங்களைக் கண்காணிப்ப தென்றும்; பின்னிருவரும் முன்னவர்க்கு அந்தஸ்தில் கீழாகி, அவரது பிரதிநிதிகளா யாளுவ தென்றும்; இம்மூன்று பிரிவுகளடங்கிய ஸமஸ்தானத்தின் தளவாய்ப் பட்டம் அரியநாதருக் கென்றும் தீர்மானித்தனர். இங்ஙனம் முடிவு செய்த பின்பு, அரியநாதர், அடுத்த ஆண்டின் இறுதியில் தெற்கே திரும்பிவந்து, மீனாக்ஷிசுந்தரேசுரரைத் தரிசனம் செய்துகொண்டு, மதுரையிலேயே தங்கி, மதுரை நாயகரின் ஆட்சிக் குட்பட்ட நாடுகளைக் கண்காணித்து வந்தார்.

## 5. "சுற்றந்தழால்"—வாழ்நாள் மாலை.

விசுவநாதர் இறந்து அரியநாதரும் அவசரமாய் விஜயநகரஞ் சென்றதைக் கண்ட தும்பிச்சி நாயக்கன் என்னும் பாளையக்காரன், பாளையப்பட்டுக்களுக்குள் தனக்கு அளித்துள்ள பதவி தன் பெருமைக்குப் போதாதென்று சினந்து முணுமுணுத்துக் கொண்டிருந்தவன், அதுவே தக்க சமயமெனத் துணிந்து, குமார கிருஷ்ணப்ப நாயகரின் அதிகாரத்தை மீறிக் கலகஞ் செய்யத் தொடங்கி, பரமன்குடிக் கோட்டையைத் தன் பாசறை யாக்கிக் கொண்டு, சூழ்ந்துள்ள ஊர்களைச் சூறையாடலானான். அதை யறிந்த கிருஷ்ணப்ப நாயகர், அரியநாதர் நாட்டி லில்லாமையால் தளவாயா யிருந்த பெரிய கேசவப்ப நாயக்கரை அவனை யடக்கும்படி அனுப்ப, தும்பிச்சி அவரைப் போரில் கொன்றுவிட்டான். அப்பால் அவர் மகன் சின்ன கேசவரையும், பதின்மூன்று பாளையப்பட்டாரையும், படைகளையும் கோட்டையைத் தகர்க்கச் சில பீரங்கிகளையும் அனுப்பினார். சின்ன கேசவர் தும்பிச்சியை வென்று சிறை செய்ய, அரசர் ஆக்கினையின்படி அவன் சிரச்சேதமுற்றான். அப்பால், கிருஷ்ணப்ப நாயகர், அவன் பாளையத்தில் பெரும்பகுதியைப் பிடித்துக்கொண்டு, பரமன்குடி போராம்பூர் முதலிய சில ஊர்களைமாத்திரம் ஒரு சிறு பாளையப்பட்டாக்கி, தும்பிச்சியின் மக்கள் இருவர்க்கும் அதைக் கருணைகூர்ந்து கொடுத்தார்.

ஈழநாட்டிலே யுள்ள கண்டிராஜன், தும்பிச்சி நாயக்கனது நண்பன், தன் சிநேகிதன் கொலையுண்டதைக் கேட்டுச் சகியாது கோபங்கொண்டு, குமார கிருஷ்ணப்ப

நாயகரைப் பழித்து வெறுத்து, "யானை கண்டியி லிருக்க, அதன் தும்பிக்கையை வெட்டி விட்டேனென்று வீம்பு பேசும் வீரனே இவன்!" என்று, அவரை ஏளனமாகப் பேசினான். அதை யறிந்த கிருஷ்ணப்ப நாயகர்: "ஓகோ! ஈழநாட்டானுக்கு இவ்வளவு கொழுப்போ? கண்டி யானையும் தண்டித்து, அவன் தும்பிக்கையை மாத்திரமோ, முடித்தலையையும் துண்டித்து விடுகிறேன், பார்!" என்று சபதம் செய்து, ஐம்பத்திரண்டு பாளையக்காரரையும் அவர்களற்ற படைகளையும் திரட்டிக்கொண்டு, இப்பொழுது தேவிபட்டணம் என்று வழங்கும் நவபாஷாணத் துறையில் நாவாயேறி, ஈழத்திலே மன்னாரில் இறங்கி, "உடனே கப்பத்தோடு வந்து காலில் விழுக; அல்லது போர்க்கெழுக" என்று, கண்டி மன்னனுக்குத் தூதனுப்பினார். இத் தூதினைக் கேட்ட கண்டிராஜன், மந்திரிகள் நால்வரையும் தேசநாதர்கள் எண்மரையும், நாற்பதினாயிரம் படைவீரருடன் போர்க்கனுப்பினான். தும்பிச்சியைச் சிறை செய்த சின்ன கேசவர், இருபதினாயிரம் படைவீரரைக் கொண்டு, தன்னினும் இருமடங்கு பெரிய அப் படையைப் புத்தளத்தில் நிகழ்ந்த போரில் முறியடித்து, மந்திரிகளில் இருவரையும், தலைவர்களில் ஐவரையும், படைவீரர் பலரையும் சிறைசெய்து கொண்டார். இவ்வண்ணம் சிறையுற்ற கண்டிவீரர், குமார கிருஷ்ணப்பர் தம்மைக் கருணையோடும் மரியாதையோடும் நடத்தினதைப் பாராட்டி, அவருடன் சமாதான மாகும்படித் தம் மன்னனுக்குப் புத்திகூறியும், அவன் இணங்க வில்லை. பின்னும் அறுபதினாயிரம் படைவீரரையும் பதினாயிரம் காபிரிகளையும் அவன் திரட்டிக்கொண்டு வர, கண்டியார்க்கும் பாண்டி

யார்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. அநதச சண்டையிலே எண்ணுயிவர் சிங்களவரும் எண்ணுயிவர் காபிரிகளும் மாண்டனர்; கிருஷ்ணப்பநாயகரும் சின்னகேசவரும் உயிரோடு பிடிக்க எவ்வளவு முயன்றும் பயன்படாமல், தோல்வியினும் வீரசுவர்க்கத்தையே விரும்பிய கண்டிராஜனும், அக்களத்திலே பட்டு வீழ்ந்தான். அப்பால், பாண்டிநாயகருக்குத் திறைசெலுத்தும் உள்நாடாகக்கண்டிராஜ்யத்தையாண்டு வரும்படித் தன் மைத்துனர் விஜயகோபால நாயகரைப் போதிய படைகளுடன் ஈழத்திலே இருத்திவிட்டு, எஞ்சிய தண்டுகளுடன் கிருஷ்ணப்ப நாயகர் மதுரை மீண்டார்.


மேலே கூறிய போர் நிகழ்ச்சிகள் யாவும், தளவாய் அரியநாத முதலியார் அக்ஷய வருஷத்திலே (1566-67) மதுரை மீளுமுன்னரே நிகழ்ந்தனவாக, அவற்றைக் கேட்டு அவர் அகமகிழ்ந்து, தன் அருமை நண்பரின் மைந்தரை மெச்சிப் புகழ்ந்தார்; தான் ஏற்படுத்திய பாளையப் பட்டுக்கள் ஆபத்துக்காலத்தில் நாட்டுக்குத் தாரகமானதை அறிந்து பெருமகிழ் வெய்தினர்.

அப்பால் அரியநாத முதலியார்,

"சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வம் தான்
பெற்றத்தால் பெற்ற பயன்."

என்னும் குறளை நினைந்து, தொண்டமண்டலத்தில், மெய்ப்பேடு, பெருநாடு முதலிய ஊர்களிலுள்ள தம் இனத்தாரைப் பாண்டிக்கு வரவழைத்து, சோழன்வந்தான், நகரி, திருமங்கலம், புத்தனேரி முதலிய கிராமங்களில் அவர்களைக் குடியேற்றி வைத்தார். சோழன்வந்தானிலே அவர்களுக்கென்றே முந்நூறு வீடுகளும், தன் குலகுருவுக்கென்று

ஒரு மடமும் வீடும், ஊரைச்சுற்றி "முதலியார் கோட்டை" என்னும் கோட்டையும் கட்டி, புதிதாய்க் குடி வந்தவர்களின் சுகசௌகரியங்களுக்கு இன்றியமையாத அடிமைகள், உழவர்கள், கருமான்கள், மற்றத் தொழிலாளிகள் யாவரையும் வேண்டியவாறு குடியேற்றி வைத்தார். இவையன்றி, நாட்டிலே ஆங்காங்குள்ள பழைய கோயில்களைப் புதுப்பித்தும், வேண்டிய விடங்களில் புதியன கட்டிப் பிரதிஷ்டை செய்தும் வந்தார்.



மதுரை—கீழைக்கோபுரம்

மதுரையிலே கோயில்கொண்டுள்ள மீனாக்ஷிசுந்தரேசரிடம் அரியநாதர் விசேஷ பக்தி யுள்ளவர். அக் கோயிலி

லுள்ள மிகச் சிறப்பான ஆயிரக்கால் மண்டபமும், அறு பத்துமூவர் மண்டபமும் அவர் கட்டியன. அவையன்றி, விலையுயர்ந்த ஆபரணங்களை அம்மனுக்குச் சமர்ப்பித்து, தான் கண்டமகனையொன்று நிமித்தம பள்ளியறைக்கட்டளை ஏற்படுத்தினது மன்றி, அறச்சாலை ஒன்றும், 'வன்னியடி என்னும் நந்தவனமும் நிறுவி, சிவராத்திரித திருவிழாவுக் கென்று பன்னீராயிரம் பொன்னளித்து, சுவாமிக்கு ஒரு வெள்ளிச்சிங்காசனமும் செய்வித்தனர்.

" அருமா தவஞ்செய் அறுபத்து மூவர் அணிமண்டபம்
மருவாரும் சோலை அறச்சாலை மண்டபம் வன்னியடி
முருகேசன் சொக்கற்கு வெள்ளிச்சிங் காதன முற்றுஞ்செய்
வருமா லரிய நயினு முதலி மதிமந்திரியே.'' [தான்

என்று கூறும் மதுரைத் திருப்பணிமாலை.

தனக்கு ஆத்மார்தத மாவதன்றி, நாட்டின வளத்தை யும் சிறபபையும் பெருக்கும் பல பணிகளை அரியநாதர் இவ்வண்ணம் செய்துவருவதைக் கண்ட கிருஷ்ணப்ப நாயகர், தானும் அவ்வாறே செய்து, தன் பெயரையும் புகழையும் நிலைநிறுவக் கருதி, திருநெல்வேலிக்குக் காவதவழித் தொலைக்குக் கிழ்பால், திருசசெந்திற் பதிக் குச் செல்லும் வழியிலே, கிருஷ்ணபுரம் என்னும் நக ரத்தை யெடுப்பித்து, இன்றும் காண்பவர் வியப்பையும மகிழ்வையும் அடையும்படியான அரிய நுண்ணிய சிற்ப வினைசிறநத கற்பணிநிறைந்த கோயிலையும் கோபுரம் குளங் களையும் அக்கிரகாரங்களையும் கட்டினதுமன்றி; திருநெல் வேலிக்கு மேற்கே தடையம் என்ற ஊரினருகே, கிருஷ்ணபுரம் என்னும் பெயரிய மற்றோர் ஊரையும் கட்டிமுடித்தார். இங்ஙனமாக நாயகரும் தளவாய்ப்பிர

தரனியும் தம்முள் இகலியிகலிப் பாண்டிமண்டலத்தை அலங்கரித்து வந்தனர்.

தன் தந்தையின் புகழொளியை மங்கவிடாது தளவாய் முதலியாரின் உதவியால் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த குமார கிருஷ்ணப்பர், 'பாண்டியகுல ஸ்தாபனாசாரியர்' என்றும் 'தென்கடல் நாதர்' என்றும் சாஸனங்களில் புகழ்ப்பெற்ற வீரர், 1572-ம் ஆண்டிலே இறந்தனராக, அரியநாதர், அவர் மகன் வீரப்பநாயகரை முடிசூட்டி வைத்தார். இவர் ஆட்சியிலேயும் ஒரு சிறு கலகம் நடந்தது: மாவலி வாணதராயன் என்னும் பாளையக்காரன், மானாமதுரையையும் காளையார்கோயிலையும் கைக்கொண்டு, நாயகர் அதிகாரத்தை எதிர்த்துக் கலகம் செய்தான். வீரப்பநாயகர் அவனை அடக்கி ஒடுக்கி, அவனுக்குரிய பாளையத்தைப் பறிமுதல் செய்துவிட்டார்.


இவர் காலத்திலே, "நாட்டை உண்மையில் ஆண்டு வந்தவர் அரியநாதரே" என்றும், அவர் கைக்கீழ் இருந்து அவர் ஆட்டுவித்தபடியெல்லாம் இவர் ஆடிவந்தனர் என்றும், கூறப்பட்டிருக்கிறது. விசுவநாதரும அரியநாதரும் ஒத்த துணைவராய் வந்து, பாண்டிமண்டலத்தை ச் செயித்து, கிருஷ்ணதேவ மகாராயரின் உத்தரவுப்படி ஆளத் தொடங்கியவர். விசுவநாதர் இறந்தபின்பு, அவர் இருக்கும் பொழுதே முடிசூட்டப் பெற்ற குமாரகிருஷ்ணப்பர், அரியநாதரைத் தன் தந்தையின் ஸ்தானத்தில் பாவித்து, அவர் சொற்படி ஒழுகி வந்தனர். அவரும் இறந்த பின்னர், அரியநாதரால் முடிபுனையப் பெற்ற வீரப்பநாயகர், எல்லா விதத்திலும் தனக்குப பெரியோரானவரும், இரண்டு தலைமுறையாகத் தன் வம்மிசஸ்தாபனரா யிலங்கிய

வரும், தன் சக்கரவாதத்தியான மகாராயரால், மதுரைக்கு மட்டுமன்றி விஜயநகர ஸம்ஸ்தானத்துக்கே, தளவாய்ப் பிரதானி யென்று நியமிக்கப் பட்டவருமான அரியநாதரின் சொற்படி ஒழுகியது, வியப்பன்றே. விசுவநாதருக்கும் குமாரகிருஷ்ணப்ப நாயகருக்கும் பின் வந்த மன்னர்கள் தன்னைத் "தளவாய்த் தாத்தா" என்றழைக்க, குருகுல ராஜ்யத்தில் பீஷ்மரைப் போலவே நாயகர்களின் பாண்டிய மண்டலாதிபத்தியத்தில் அரியநாதர் விளங்கினாரென்று கூறின், வணங்காமுடி அரவக்கொடியோனைப் போன்ற அரசனொருவன் இல்லாமை நீங்கலாக, முற்றும் பொருந்தும்.

வீரப்பநாயகர் தெய்வபக்தி மிக்கவராதலின், தன் செல்வத்தில் பெரும்பகுதியை, தருமத்திற் செலவிட்டார். ஆயின், அவரேனும் அரியநாதரேனும், குறுகிய நோக்கமும் மதவைராக்கியமும் உள்ளவராகத் தெரிந்திலது. அதுகாறும் புறற்றுக்குடி முதலிய கடற்கரை ஊர்களிலே பரவர்களுக்குள் மதப்பிரசாரம் செய்துவந்த யேசு சங்கப் பாதிரிமார், அவர் ஆட்சியிலதான் முதலில் மதுரையுட் புகுந்து, அந்நகரிலே ஒரு கிறிஸ்தவக் கோயிலும் மடமும் கட்டி, மேற்சாதி ஹிந்துக்களுக்குள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முயன்றனர். கொல்லாமை கள்ளுண்ணாமைகளை முக்கிய விரதங்களாகக் கொண்டொழுகும் உயர் மரபினர், பலவகை மிருகங்கள் பறவைகளையுமன்றிப் பசுவையுமே வதைத்துண்டு, பொருள் கொடுத்து மெய்யறியாமையை வாங்கி, "என்றுள் முகத்தேயும் இன்னாதாம்" மதுக்களை அருந்தி, "சான்றோரால் எண்ணப்பட வேண்டாதாராய்" வாழ்வாரின் ஆத்மஞான போதனைகளை இகழ்ந்து மதியாதுவிட்டது வியப்பன்று.

# தளவாய் அரியநாத முதலியார்

"வெற்றி வேற்கை வீரராமன், கொற்கையாளி குலசேகரன்" என்று தன்னையே கூறுபவரும், 1564-ம் ஆண்டிலே தென்காசிப் பாண்டியனாக முடிசூடியவரும், நைடதம் கூர்மபுராணம் காசிகாண்டம் திருக்கருவையந்தாதி முதலிய அருந்தமிழ் நூலாசிரியரும், ஸ்ரீ வல்லவன் என்னும் இயற்பெயரினரும், விசுவநாத நாயகர் காலந்தொட்டு மதுரை நாயகர்களின் கடாக்ஷத்தை



மதுரை—புதுமண்டபம்

அடைந்து பெருகினோருமான அதிவீரராம பாண்டியர், வீரப்ப நாயகர் ஆட்சியில் நிகழ்ந்ததொரு போரிலே துணை நின்று பொருதனரென்று, தெரியவருகின்றது. ஆயின், அரியநாதரும் அதிவீரராம பாண்டியரும் நெடுநாள் நண்பர்களாயிருந்திருத்தல் கூடும். அப்போதைக்கப்போது அவர்கள் சந்தித்த சமயங்களில் நிகழ்ந்த வர்த்தமானங்களும்

கூற்றுக்களும் என்றுமே தெரியா தொழிந்தமைக்காக, தமிழ் மக்கள் அனைவருமே வருந்துவ ரென்பது திண்ணம். வீரப்ப நாயகர் 1595-ம் ஆண்டிலே தேகவியோகமாக, அவர் மூத்தமகன் வீரகிருஷ்ணப்ப நாயகரை, அரியநாதர் முடிசூட்டி வைத்தார். வீரகிருஷ்ணப்ப நாயகரின் தம்பி விசுவப்ப நாயகரும துணையரசராய் முடிசூட்டப் பெற்றன ரென்றும், அரசர் இருவருமே அரியநாதர் சொற்படி ஒழுகிவந்தன ரென்றும கூறுவர்.

நாயகர் வம்மிசத்தைப் பாண்டிய நாட்டிலே ஸ்தாபித்து, 1529 முதல் 1600 வரை, எழுபத்தோராண்டுகளாக, முதல் நான்கு நாயகர்களின் ஆட்சிகள் முழுதும் மகுடமில் மன்னனாக ஆண்டுவந்தவரும், அரசரமைக்கும் அருந்திறல் வீரருமான தளவாய் அரியநாதமுதலியார், சார்வரி வருஷம் (1600) சித்திரை மாதம ஏழாம தேதியன்று, தன் புகழுடம்பை நிலைநிறுவிப் பொய்யுடம்பை நீத்தனர் என்ப. ஆயின், அவர் தேகவியோக மாகுமபோது, அவர் வயது நூற்றுக்கு மேற்பட்டிருக்கும். அவர ஸ்தாபித்த பாளையக்காரரே, இந்நாளிலே தென்னாட்டு ஜமீன்தார்களாக இலங்குகின்றனர். இவர்களிற் சிலர் அரியநாதரைத் தம் குலதேவதையாகக் கொண்டாடுகின்றனராம். மதுரைக் கோயிலில அரியநாதர் கட்டிய ஆயிரக்கால மண்டபத்திலே அசுவாரூடராய்த் தோன்றும் அரியநாதரின் சிலையை இன்றும காணலாம்.

அரியநாதரின் உதவியைக் கொண்டு, மதுரை நாயகர்கள், நாளுக்கு நாள் செல்வத்திலும அதிகாரத்திலும் மேம்பட்டு வந்தனராயினும்; சர்வசுவாதீனமுள்ள இராஜர்களாகவே விளங்கினராயினும்; அவருள்ளவரை, விஜய

நகரத்து நரபதி மகாராயர்களின் பிரதிநிதிகளாகவே தம்மை மதித்து, சாஸன பட்டயங்களிலும் இராஜ்யாதிகாரச் சின்னங்களிலும் அவ்வண்ணமே ஒழுகி வந்தமை, அரியநாதரின் இராஜ பக்திக்கும் சத்திய விரதத்துக்கும் தக்க சான்றாகும். அரியநாதருக்குச் சில்லாண்டுகளுக்குப் பின், 1609-ல் பட்டத்துக்கு வந்த முத்துவீரப்ப நாயகர்தான், விஜயநகரத்து நரபதியின் மேலதிகாரத்தை முதல் முதல் மீறி, வணங்காமுடி மன்னராக ஒழுகினவரென்பது, சரித்திர சித்தாந்தம். ஈடெடுப்பில்லா அரசியல் திறமையோடு ராஜபக்தியும், தெய்வ பக்தியும், சத்திய விரதமும், தன் நலத்தினும் பொதுநலத்தை மேலாகக் கருதி நாடும் ஒழுக்கமும் சீலமும் ஒருங்கமைந் திருந்ததாலன்றே, ஏழை சொல்லும் அம்பலம் ஏறி, உழுதொழிலுக்குப் பிறந்தவர் அரசர் பெருமக்களும் தொழுதகைய சீரும் சிறப்பும் திகழ்ந்து, கிருஷ்ணதேவ மகாராயர் முதல் வேங்கடராயர் இறுதியாக, விசுவநாத நாயகர் முதல் கிருஷ்ணப்ப விசுவப்ப நாயகர்கள் இறுதியாக, பல திறப்பட்ட பார்த்திபர்கள் பல தலைமுறைகளாகப் போற்றிப் புகழ்ந்து தன் சொற்படி யொழுகுமாறும், தான் பிறந்த தென்னாட்டைத் தும் பெறற்கரிய நன்மைகளைப் பெற்றுச் செழித்தோங்கித் தன் புகழ்மணமே கமழுமாறும், ஒரு நூற்றாண்டு வாழ்ந்து, தன் பெயரை நிலை நிறுவினார்!

"சிறப்பீனும், செல்வமும் ஈனும் ; அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு ?"

# 2. மைசூர் ஹைதர் அலி

ஒரு சாமானியப் போர்ச்சேவகன்; சொற்பக் கூலிக்காக ஏவிய வண்ணம் தன் உயிரை விற்பவன்; உயர் பிறப்பு, செல்வம், செல்வாக்கு எதுவுமின்றி, வயிறு பிழைக்கும் பொருட்டுத் தன்னாடுநீங்கி இந்நாடுவந்து குடியேறிய ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன்; தன்பெயர் கூட எழுத அறியாத தற்குறிபேதை; இப்படிப்பட்ட ஒருவன், இயற்கையில் அமைந்த தன் தோள்வலி மூளைவலி சாதுரியம் தைரியம் ஊக்கம் முதலிய குணவிசேஷங்களையே துணையாக்கொண்டு, பூமியெங்கும் போர்முழக்கம் மிஞ்சித் தீரசூரர்கள் மலிந்து திகழ்ந்த நாளிலே, தன் பெயர் கேட்டோரெல்லாம் பீதியுற்று நடுநடுங்கும் வீரசிகாமணியாய் விளங்கினதுமன்றி, மகத்தானதோர் ராஜ்யாதிபதியாயும் சிறப்புற்றிலங்கினன் என்றால், அநத அற்புதந்தான், அழுக்குப்பிடித்து அரிதில் நகருமோர் சிறு புழு, வானவில்லினும் மிக்க பிரகாசமும் விசித்திரமும் கூடிய பலவர்ணப் பட்டுப்பூச்சியாக மாறிப் பறந்திலங்கும் காட்சியினும் அதிக ஆச்சரியத்தை விளைக்குமன்றோ? ஹைதர் அலி இப்படிப்பட்ட ஓர் அற்புத வீரர்.

பதினேழாவது நூற்றாண்டின் முற்பாகத்திலே, முகம்மது பைலால் என்ற ஒரு பக்கிரி, ஆப்கானஸ்தானத்திலிருந்து வந்து, நிஜாம்ராஜ்யத்தி லுள்ள குல்பர்கா என்னும் ஊரில் குடியேறினார். அவர் மக்கள் இருவரில் இளையவரான அலிமுகம்மது என்பவர், அவ்வூரையும் விட்டு, மைசூர் ராஜ்யத்தின் கீழ்ப்பாகத்திலே, இப்பொழுது பொன்விளையும்பூமியாய்த் திகழும் கோலாரில் வந்து

குடியேறினர். அலிமுகம்மதுவுக்குப் பிள்ளைகள் நால்வர். அவர்களில் கனிஷ்டரான பட்டி முகம்மது என்பவருடைய மக்களே ஷாபாஸ் என்பவரும் ஹைதர் அலியுமாம். தந்தை. பட்டிமுகம்மது, மைசூர் ராஜ்யத்தில் பௌஜ்தார் என்னும் பதவியை அடைந்து, பூதிகோட்டை ஜாகீரைப பெற்று, உத்தியோகஞ் செய்துவந்தார். ஹைதர் அலி பிறந்த வருஷம் நிச்சயமில்லை: கி. பி. 1717 என்பார் சிலர்; 1722 என்பாரும் உளர்.

அக்காலத்திலே மைசூர் அரசர், பெரும்பாலும் தமது அமைச்சர் கையில் அகப்பட்டு, அவர்கள் ஆட்டுவிக்கும் பொம்மைராஜாக்களாயிருந்தனர். ஹைதரலியின் தமையனான ஷாபாஸ் என்பவர், மைசூர் ஸம்ஸ்தானத்தில், 200 குதிரை வீரருக்கும் 1000 சேவகருக்கும் தலைவராய் இராணுவ உத்தியோகஞ்செய்து வந்தார். அவர் படையில் ஓர் (Volunteer) உமேதவாரிப போர்சசேவகனுய்த்தான் ஹைதர் அலி முதல் முதல் வேலைபார்க்கத் தொடங்கினர். நிஜாம் ராஜ்ய உரிமையைப்பற்றி நடந்த போரில், மைசூர்ப் படைகள் முஸபர்ஜங்குவின் கட்சிக்கு உதவியாயிருந்த பிரெஞ்சுக்காரர் பக்கத்தில சண்டைசெய்தன. அந்த யுத்தத்தில் ஹைதரின் போர்த்திறனையும ஆர்வத்தையும் சாமர்த்தியத்தையும் மைசூர்ப் பிரதம மந்திரியான நஞ்சராஜர் பார்த்து, அவர் ஒரு சாமானியப் படைவீரனுக இருப்பது தகுதியன்றென்பதைக் கண்டு, அவரை 1755-ம் ஆண்டில், அப்பொழுது மைசூர் ராஜ்யத்துக் குட்பட்டிருந்த திண்டுக்கல்லுக்கு பௌஜ்தாராக நியமித்தார். இதுவே ஹைதரின் உயர்பதவிக்கு முதற்படி என்னலாம்.

ஹைதர் அலியின் இராணுவ உத்தியோக வரலாற்றையும், அவர் புரிந்த போர்களேயும், அவர் படிப்படியாக மேலேறி மைசூர் ராஜ்யத்தின் சிம்மாசனத்தை அடைந்ததையும் விரித்துக் கூறுதல், சரித்திரத்தின் கடமையாகும்.



மைசூர் ஹைதர் அலி

அவற்றையெல்லாம் ஈண்டு விஸ்தரியாது, அவர் குணதிசயங்களேயும், சாதாரண சரித்திரங்கள் கூறுதுவிடும் சிற்சில குறிப்புக்களேயும் பொதுப்பட எடுத்தோதுவதே பொருந்தும்.

அவர் நாளிலே தர்ம யுத்தம் என்பதே இல்லை; இராஜ்ய தந்திரங்களிலும் உடன்படிக்கைகளிலும் நாணயமான வாக்குச் சுத்தமுள்ள நடத்தையென்பதும், எவரிடத்தும் இல்லை. ஈஸ்டிந்திய கம்பெனியாரான ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும், மொகலாய சக்கரவர்த்தியும், அவர்க்குக் கீழ்ப்பட்ட நிஜாம் நவாபுக்களும், மகாராஷ்டிரரும், மற்றுமுள்ள சிற்றரசர் தலைவர்களும், அவரவர் சொந்தக் காரியத்துக்கும் இலாபத்துக்கும் வேண்டியபடி வேடம்பூண்டு, வாக்கு மாறி, நடத்தை மாறி, அப்படியொழுகுவதில் எவ்வித வெட்கத்தையேனும் அவமானத்தையேனும் ஒரு சிறிதும் உணராமல், பாராட்டாமல், நடந்தது போலவே, அவரும் நடந்து வந்தனர். காலத்துக்கேற்ற கோலமே யது. எனினும், ஹைதர் அலி, தன் ஒழுக்கத்தில் மற்றவரினும் கீழ்த்தரமாக நடக்கவில்லை யென்பது மட்டுமன்றி, பலமுறை, பல அம்சங்களில், மேன்மையாக ஒழுகினரென்றே கூறுதல் பொருந்தும். அவருக்கு எழுதவும் படிக்கவும் தன் கையெழுத்துப் போடவுமே தெரியாதாயினும், தன் அரிய ஞாபகசக்தியினால், எப்படிப்பட்ட தந்திரிகளும் தன்னை எளிதில் ஏமாற்ற முடியாமல் காத்துக்கொண்டதுமன்றி, ஒரே சமயத்தில் பல வேலைகளைக் கவனித்து, நன்கு செய்துமுடிக்கும் அவதான சகதியும் பெற்றிருந்தார். அவர் நாளிலே, இந்தியர்களுடன் பழகுவதில், அங்கிலேயரைவிடப் பிரெஞ்சுக்காரரே அதிகந்திறமை காட்டினர். மஹாராஷ்டிரர் ஹைதரை அடிக்கடி தொந்தரை செய்ததனால் அவர் வலி குலையாதிருப்பின், அல்லது பிரெஞ்சுக்காரர் தம் வாக்குப்படி அவருக்குச் சமயோசிதமான உதவிசெய்திருப்

பின், அல்லது அவர் அகாலமரணத்தை அடைந்திராது பின்னும் சிலவாண்டுகள் உயிரோடிருந்திருப்பின், தென்னிந்தியாவின் சரித்திரம் முழுதும் வேறு விதமாக முடிந்திருக்குமென்பது சரித்திரக்காரர் துணிபு.

ஹைதரின் சிவ சரிதையில் நிகழ்ந்த விசித்திரமான சில சம்பவங்களை இனிக் கூறுவோம்: அவருக்கு முதலில் கண்டேராவ் என்னும் பிராமணர் துணைவராகவும் மந்திரியாகவும் விளங்கினார். உண்மையில் ஹைதரே மைசூர் இராச்சியத்தின் அதிபதியாயிருந்தபோதிலும், அவர் அரசுரிமைப் பேறை ஏலாமல், பழைய ஹிந்து அரசகுடும்பத்தில் ஒருவரையே அரசராகப் பாவித்து நடத்திவந்தார். இப்படிப் பொம்மையரசனாக விளங்கின அரசிளங்குமாரின் தாயாராகிய இராணியார், உண்மையில் இராஜ்யாதிகாரத்தைப் பெற விரும்பி, கண்டேராவைத் தன் வசமாக்கிக் கொண்டு, ஹைதருக்குத் துரோகஞ்செய்யும்படி தூண்டினார். கண்டேராவின் சூழ்ச்சியினாலும் போர்த்திறமையினாலும், ஹைதரின் ஆட்சி தொலைந்ததென்னும்படி யாகி விட்டது. பிறகு, ஹைதர் வெற்றிபெற்று, கண்டேராவைச் சிறைப்பிடித்த பொழுது, அரண்மனை ஸ்திரீகள், கண்டேராவ் பிராமண குலத்தின ரானபடியால், அவரைக் கொல்ல வேண்டாமென்று ஹைதரை வேண்டிக் கொண்டனராம். அதற்கு ஹைதர், "இல்லை அவரைக் கிளிப்பிள்ளைபோல் பேணிக் காப்பாற்றுகிறேன்" என்று பதிலளித்தனராம. அவ்வாறே, கண்டேராவ் சாகும்வரை, ஹைதர், அவரை ஓர் இரும்புக் கம்பிகளாலான கூட்டில் அடைத்துவைத்து, நாள்தோறும் ஒரு கிண்ணியில் போதுமான பாலும் சோறும் கொடுத்து வந்தனராம்

முகம்மதலி என்பவனை ஆறுகாடு நவாபாகக்கொண்டு, இங்கிலீஷ் கம்பெனியார், அவனுக்காகப் பல சண்டைகள் செய்தது சரித்திர விஷயம். அயோக்கியத்தனமே மிகுந்துள்ள அந்த நாளிலேயும், அவன் மற்றெல்லோரினும் பரம அயோக்கியன்; ஆண்மையேனும் வீரமேனும் இல்லாதவன். அவன் குணத்தை நன்கு அறிந்து கொள்ளாமல், மீண்டும் மீண்டும் அவனை நம்பிக் கம்பெனியார் அல்லற் பட்டனர். ஹைதரலி அவனை உள்ளபடி மதிப்பிட்டு, முற்றிலும் வெறுத்துவந்தார்; அவன் மட்டும் தடையாகாதிருந்திருப்பின், ஹைதரலி இங்கிலீஷ் கம்பெனியாருடன் சிநேகம் பாராட்டி, மைசூர் அரசின் சரித்திரம் வேறு விதமாய் முடிந்திருக்கலாம். இதைக் கூறும் இங்கிலீஷ் சரித்திரக்காரர், ஹைதரின் கூரிய மதியையும் சாதுரியத்தையும் மெச்சித் தம் நாட்டவரின் மதியீனத்தை இகழ்கின்றார்.

1776-ம் வருஷத்தில் பேருக்கு ராஜாவாக விளங்கிய சாமராஜா இறந்தபொழுது, அவருக்குப் பதில் ஒருவரைத் தெரிந்தெடுக்க, ஹைதர் பின் வருமாறு செய்தார்: அரண்மனையில் ஓர் அறையில் பலவகை விளையாட்டுச் சாமான்களைச் சேகரித்துவைத்து, ஹிந்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவராயும், அரசுக்குரியவை ரெனத்தக்கவராயுமுள்ள சிறு குழந்தைகள் எல்லோரையும் அங்கே கொண்டுவந்துவிட்டு, அவரவர் இஷ்டம்போல் சாமான்களை எடுத்துக் கொள்ளச் சொன்னார். ஓர் எலுமிச்சம் பழத்தையும், நவமணி குயிற்றிய பிடியுள்ள ஒரு கட்டாரிக்கத்தியையும், தனக்குப் பிரியமாக எடுத்த சாமராஜா என்ற சிறுவனையே, ஹைதர், மைசூர் அரசனாக முடிசூட்டி வைத்தார்.

காஞ்சிபுரத்துக் கருகே கர்நல் பெய்லி என்ற அங்கிலேய தளகர்த்தரைச சைநியத்தோடும் முறியடித்து ஹைதர் அலி சிறைப்பிடித்ததே, அங்கிலேயர் இந்தியாவில் அடைந்துள்ள பல தோல்விகளி லெல்லாம் கடுமையானதென்று கூறப்படுகிறது. சீரங்க பட்டணத்திலுள்ள அரமனைச் சுவரிமேல, இச்சண்டையும் வெற்றியும் பெரிய சித்திரமாக எழுதப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

பின் வருவது ஹைதரின் யுத்த தந்திரத்தை விளக்கும்: தார்வார் கோட்டையை ஹைதர் பிடிக்க முயன்ற பொழுது, மராட்டிய ரிடமிருந்து உதவி விரைவில் வருவதாகக் கோட்டைத் தலைவனுக்கு ஒரு பொய்க்கடிதம் அனுப்பப்பட்டது பிறகு, ஹைதர், தன் சேனைகளில் சிலரை மராட்டியப் படைகளைபபோல வேஷம்போடச் செய்து, அவர்களை கோட்டையின் உதவிக்கு வருபவர் போலும், அப்படி உதவவரும் மராட்டியரைத் தன் சேனைகள் தாக்குவது போலும் நடிதது, குண்டில்லாத தோட்டாக்களைக சுடசசெய்தார். கோட்டைத் தலைவன் அதை நம்பி, கோட்டை வாயிலைத் திறக்க, மராட்டியர் வேஷமபூண்ட ஹைதரின் படைவீரா உள்ளே நுழைநது, அவனையும் கோட்டையையும் பிடித்துக் கொண்டனர்.

குற்றஞ் செய்தவர்களை முக்காலியில் கட்டியும் கட்டாமலும் குறடாவால் அடித்துத் தண்டிப்பது அந்த நாளை வழக்கம். ஒரு போர்நிகழ்ச்சியில் ஒரு விஷயத்தை அவர் நேரில் செய்ய முடியாமற்போக, அதைச செய்யும் கடமை பூண்டிருந்த அவர் அருமை மகன் திப்பு, தானும் செய்யத் தவறியதற்காக, ஹைதர், அவரைத் தன் கையா

லேயே குறடாவால் அடித்துச் சிக்ஷை செய்தனர். இவ்விதமான நியாயவுணர்ச்சி ஹைதருக்கு அதிகம் உண்டு; அன்றியும், தன் மகன் திப்பு சுலத்தானுக்கு இருந்தது போன்ற மதத்துவேஷமும் குறுகிய நோக்கமும் வைராக்கியமும் அவருக்கு அணுவேனுமில்லை. தன் கீழுள்ள உத்தியோகஸ்தர் அவரவர் கடமைகளை நன்கு செய்வதை மட்டும் கவனிப்பாரே யன்றி, அவர்கள் எம்மதத்தினராயினும், அவர் பாரபக்ஷம் பாராட்டுவதில்லை.

ஹைதரிடத்தில் அவருடைய உத்தியோகஸ்தர்கள் கொண்டிருந்த விசுவாசத்துக்கும் வாஞ்சைக்கும், அவருடைய மந்திரி பூர்ணையாவின் நடத்தையே சான்றாகும்: ஹைதர் திடீரென இறந்துபோன பொழுது, அவர் மகன் திப்பு, நெடுந்தொலையில் வேறோர் இராணுவச் சோலியாகப் போயிருந்தார். ஹைதர் இறந்ததைக்கொண்டு, பிராமணரான பூர்ணையா, ஹிந்து ராஜாவையே மீண்டும் உண்மையில் மைசூர் அதிபதியாக்கிவிட, அச்சமயம் முயன்றிருக்கலாம். ஆயினும், அவர் அப்படித் துரோகம் செய்யவில்லை. ஹைதர் இறந்தமை வெளிக்குத் தெரிந்தால் சைநியங்கள் அடங்காமல் கலகஞ்செய்யுமென்று தெரிந்து, ஹைதரின் சவத்தைப் பொக்கிஷப்பெட்டியில் அடக்கிப் பொக்கிஷமென்று சீரங்கபட்டணத்துக்கு அனுப்பிவிட்டு, ஹைதர் உயிருடன் நோயாளியா யிருப்பதாகவே செய்தியைப் பரப்பி, திப்பு திரும்பி வந்து ராஜ்யபாரத்தைக் கைக்கொள்ளும் வரை, வெகு பதனமாய் அவர் உரிமையைப் பாதுகாத்து வந்தார். திப்புசுல்த்தானும் பூர்ணையாவையே தன் மந்திரியாக்கிக் கொண்டது வியப்பன்றே

## தட்சிண சரித்திர வீரர்

அங்கிலேய ஈஸ்டிந்தியா கம்பெனியாருக்காக ஹைதரிடம் தூது சென்றவரும், கீர்த்திபெற்ற கிறிஸ்தவப் பாதிரியுமான ஷ்வார்ட்ஸ் என்பவர், சீரங்கபட்டணத்திலே ஹைதர் அரண்மனையிலே சில நாட்கள் தங்கி, தான் நேரில் கவனித்த அவர் துரைத்தனமுறைகளையும் ஒழுங்குகளையும்பற்றி எழுதியிருப்பதை எடுத்தோதி, இதை நிறுத்துவோம் :—

ஹைதர் அலி தனக்காகக் கட்டிக்கொண்டிருக்கும் மாளிகை, இந்திய சிற்ப சாஸ்திரப் பிரகாரம், வெகு அழகியது. அவ்வரண்மனை, அநேக ஸ்தம்பங்களுடன் செதுக்கிய கற்களால் அமைந்துள்ளது. அதன் அந்தத்தில், மைசூர் இராஜாக்களின் புராதன அரண்மனை இருக்கின்றது. முந்திய மைசூர் அரசர் இன்னும் அதில் வசித்து வருகிறார்; ஹைதர் அவருக்குச் செலவுக்கு வேண்டிய திரவியம் உதவுகிறார்; அவருக்குப் பிரத்தியேகமான சிப்பந்தி யிருந்தபோதிலும், அவர் ஒரு ராஜ கைதியாகவே நடத்தப்பட்டு வருகிறார். சில வேளைகளில், ஹைதர், அவரைச் சென்று காண்பதுண்டு: அப்பொழுது, அவர் முன் வீற்றிராது, ஒரு பணியாள்போலவே ஹைதர் நிற்பர். உலகாநுபவம் உள்ளவர்கள், தங்கள் காரியசித்தியின் பொருட்டுப் பாசாங்கு செய்வது இப்படித்தான். அரசரின் மக்கள் எல்லாரும் இறந்து போயினர்; அவர்கள் இரகசியமாய்க் கொல்லப்பட்டன ரென்பதுதான் பொதுஜன அபிப்பிராயம். அரண்மனையின் முன்பு ஒரு பெரிய சதுர வெளி: இதன் இருபுறமும், அடைப்பில்லாத கட்டடங்கள் இருக்கின்றன; இவற்றிலேதான ஹைதரின் இராணுவ உத்தியோகஸ்தர்களும் நாட்டாண்மை அதிகாரிகளும், தத்தமக்குரிய இராஜ்யபரிபாலன அலுவல்களை நடத்துவது. நாட்

டுப் பிரதேசங்களிலிருந்தும் படைவீடுகளிலிருந்தும் அப் போதைக்கப்போது வரும் அறிக்கைப் பத்திரங்களைப் பெறு தற்பொருட்டு, இவர்கள், தங்கள் தங்கள் ஸ்தானங்களில்



ஷ்வார்ட்ஸ் பாதிரியார்.

றிப்பிட்ட வேளைகளில் சித்தமாயிருப்பார்; ஆகவே, சர்க் ாருடன் வேலையாக வருபவர்க்கெல்லாம் இவர்களிருக்கு

மிடம் தெரியும். இவ்விடங்களையும் அவற்றில் நடக்கும் சம்பவங்கள் யாவற்றையும், ஹைதர், தன் மேல்மாடியி லிருந்து கவனிக்கக்கூடும். இந்த உத்தியோகச் சாலைகளில் எவ்வித ஆடம்பரமும் இல்லை; எல்லாவேலைகளும் ஒழுங் காகவும் துரிதமாகவும் நடக்கின்றன. தன் வேலைக் காரர்க்கு ஹைதர் சில சமயங்களில் வெகுமதி கொடுப்ப துண்டாயினும், பீதி மூலமாகவே எல்லா வேலைகளும் செய்யப்படுகின்றன. ஒவ்வொருவனும், தன் கடமை தவறி னால் தனக்கு விளையும் கொடுந்தண்டனையை நினைந்து, மனத்தில் அச்சத்தோடு வேலை செய்கிறான். அதியுன்னத பதவியி லுள்ள அதிகாரிகளுக்கும், மிகத்தாழ்ந்த படியி லுள்ள குற்றேவலாளருக்கும், ஒரே விதமான தண்டனையே. இருநூறு கிங்கரர்கள் குறடாக்களுடன் எப்பொழுதும் தயாரா யிருக்கின்றனர்; நாள் தப்பினாலும் பார் தண்டனை யடைவது தப்பாது. ஒரு ஜில்லா முழுமையும் ஆளும் கவர்னரும், கேவலம் ஒரு தோட்டியைப் போலவே, குறடா வால் அடிக்கப்படுகிறான். ஹைதர் எல்லோரையும் ஒரே விதமாக நடத்துகிறார். அவர் இருமக்களுக்கும் மருமக னுக்கும் கூட, இதே கொடிய தண்டனை தான். அவரு டைய உயர்ந்த உத்தியோகஸ்தர்களில் யாராவது, இவ் வாறு பகிரங்கமாகக் குறடாவடி பெற்றபிறகு, வேலையை ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விடுகிறே னென்றால், அவர் விடுவ திலலை; குறடாத் தழும்பு தம் தேகத்தி லுள்ள வரை, மீண்டும் அவ்வுத்தியோகஸ்தர் அதேமாதி ரிக் குற்றம் செய்யமாட்டா ரென்று நினைந்து, அவரை வேலையிலேயே இருக்கும்படி நிர்ப்பந்தம் செய்கிறார். தம் நயத்தையே கருதி அக்கிரமமாகப் பணம் பறிக்கும்

எவர்க்கும், மானவுணர்ச்சி, சீலக்கொள்கைகள் ஒன்றும் இராதென்பது ஹைதருடைய அபிப்பிராயம்.*

ஒரு நாள் சாயங்காலம் அரமனைக்குட் புகுந்தவுடன், கொலுமண்டபத்தில் அநேகர் வளைவாய் வீற்றிருப்பதைக் கண்டேன். அவர்களின் உடையினால், அவர்கள் ஜில்லா கலெக்டர்கள் (வரி தண்டுவோர்) என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் முகங்கள், அவர்கள் மனதி லுள்ள கவலையையும் அச்சத்தையும் காட்டின. ஹைதரு டைய பாரசீக காரியதரிசி, அவர்கள் தத்தம் கணக்குக்களை ஒப்புக்கொடுக்க வந்திருப்பவரென்று எனக்குச்சொன்னார். மரணதண்டனையை நோக்கிக் கொண்டிருக்கும் குற்றவாளி களைபோல் அவர்கள் எனக்குத் தோன்றினர். ஹைதருக் குத் திருப்திகரமாகக் கணக்கை ஒப்புக் கொடுப்பவர், மிகச் சிலரே; எனவே, நாள்தோறும் பலர் கொடியதண்டனை களுக் குள்ளாயினர். இந்த நிர்ப்பாக்கியர்களில் ஒருவன் பட்டதைச் சொல்லலாமோ கூடாதோ என்று திகைக் கிறேன். அந்த ஏழைக் குற்றவாளியை ஒரு தூணோடு சேர்த்துக் கட்டி, இரண்டு கிங்கரர்கள் மிகக் கொடிய வண் ணம் குறடாவால் அடித்தனர்; குறடாவி லுள்ள கூரிய ஆணிகள் அவன் சதையைக் கிழித்துப் புண்செய்தன. கேட்டோர் இருதயத்தை ஊடுருவிப்பாயும்படி அவன் கதறியழுதான்.

தண்டனை இவ்வளவு கண்டிப்பாயும் கொடிதாயு மிருந்தும், இந்த வேலைகளை நாடி அநேகர் போட்டி

* "மெய்வருத்தம பாரார், பசிநோககார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்" என்றார் பிறர்.

போட்டுக் கொண்டு ஆவலுடன் மேல்விழுந்து வருகின்றனர். இந்த வியாபாரத்தில் பிராமணர்தாம் முழுமோசமாய் நடப்பவர். ஒரு ஜில்லா முழுதும் வரிதண்டும் அதிகாரத்தை ஒரு பிராமணன் அடைந்தவுடன், ஈவிரக்கமின்றி ஜனங்களை உறிஞ்சிவிடுகிறான். கடைசியில் ஹைதர் கணக்குக் கேட்கும்போது, தான் ஏழை, தன்னிடத்தில் பணமில்லை என்கிறான்; குறடாப்பூசை பெற்றான பின், மீண்டும் தன் ஜில்லாவுக்குச் சென்று, ஜனங்களை உறிஞ்சத் தொடங்குகிறான். இப்படி நடைபெறும் துரைத்தனத்தில், ஜனங்கள் மானவுணர்ச்சியே யின்றிக் கெட்டுப்போதல் ஆச்சரியமில்லையே.

ஹைதருடைய சைநியம், 'பக்சிகள்' என்னும் நான்கு அதிகாரிகள் வசத்தில் இருக்கிறது. அவர்கள் தண்டுகளுக்குச் சம்பளம் கொடுப்பதன்றி, சைநியத்துக்கு ஆட்சேர்ப்பது, மற்ற இராணுவ விஷயங்களை முறைசெய்வது, சைநியத்துக்குள் உண்டாகும் சிறிய உட்கலகங்களில் வழக்குத்தீர்த்து நியாயம் கூறுவது, முதலிய இதர வேலைகளையும் செய்கின்றனர். இந்தப் பக்சிகளுடன் அடிக்கடி நான் சம்பாஷித்திருக்கிறேன். சிலர் பாரசீக பாஷையும், சிலர் ஹிந்துஸ்தானி மட்டும் பேசுகின்றனர்; எல்லாரும் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவரே........ஹைதரின் அரண்மனை நிர்வாகம் எல்லாம் விசேஷமாய்ப் பிராமணர் வசம்தா னிருக்கிறது. இவர்களோடும் அடிக்கடி நான் பேசுவ துண்டு..............ஹைதரின் ஒற்றர்கள் எங்கும் இருக்கின்றனர். அத்யந்த நண்பர்கள்கூட மனத்திலுள்ளதைத் தாராளமாய் ஒளியாது பேசத் துணிவதில்லை; ஆனால், மதவிஷயத்தில் மட்டும், இராப்பகலாக நான் எதைப்

பேசினும், ஹைதருக்குக் கோபம்வராதென்பது எனக்குத் தெரியும்.

ஹைதர் எனக்குப் பேட்டி கொடுத்தபொழுது, கீழே விரித்திருந்த விலையுயர்ந்த கம்பளத்தின் மீது, தன்னருகே உட்காரும்படி சொன்னார். என் ஜோடுகளைக் கழற்றச் சொல்ல வில்லை. நான் சொன்னதையெல்லாம் கவனித்துக் கேட்டார்; ஒளிப்பு மறைப்பின்றித் தன் மனத்திலுள்ளவற்றை வெளிப்படையாகச் சொன்னார். ஐரோப்பியர் (சென்னையிலுள்ள ஈஸ்டிந்தியா கம்பெனியார்) பகிரங்கமாய்ச் செய்த உடன்படிக்கைகளை மீறி நடந்து விட்டனராயினும், தான் அவர்களுடன் சமாதானமாய் வாழ விரும்புவதாகச் சொன்னார். அவர் கட்டளைப்படி எழுதப் பட்ட ஒரு கடிதம், அவர் காரியதரிசியால் எனக்குப் படித்துக்காட்டப் பட்டது. பிறகு, ஹைதர், "நமக்குள் நடந்த சம்பாஷணையின் சாராம்சத்தை இந்தக் கடிதத்தில் குறித்திருக்கிறேன்; விவரங்களை நீர் நேரில் வாய்மொழியாகச் சொல்லிவிடலாம்," என்று கூறினார். இதனால், என் தூதை ஒரு புதிய உடன்படிக்கைக்கு அடிப்படையாக ஹைதர் கருதினாரென்பது தெரிந்தது; ஆனால், சென்னையிலிருந்த நவாபு (முகம்மதலி) அதைக் கெடுத்து விட்டார். ஹைதரின் பக்கத்தில் நான் வீற்றிருந்தபொழுது, துரைத்தனக் காரியங்கள் எவ்வளவு துரிதமாய் நடத்தப் பட்டன என்பதைக் கவனித்து, நான் ஆச்சரியப்பட்டேன். அவர் என்னுடன் பேசி முடிந்தவுடன், ஒரு காரியதரிசி சில கடிதங்களை அவருக்குப் படித்துக் காட்டினார்; உடனே அவருக்கு ஹைதர் பதில் கூற, அவர் குறித்துக் கொண்டார். பிறகு காரியதரிசிகள் ஓடிப்போய், அவர்

கட்டளைப்படி பதில் கடிதம் எழுதிக் கொண்டுவந்து அவருக்குப் படித்துக் காட்ட, ஹைதா, தன் முத்திரையை வைத்தார்.

இவ்விதமாக அன்று சாயங்காலத்துக்குள் அநேக கடிதங்கள் எழுதி முடிந்தன. ஹைதருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது; ஆனால், அரிய ஞாபகசக்தி யுண்டு; ஒருவரும் அவரை ஏமாற்றத் துணிவதில்லை. அவர் முதலில் ஒருவரை ஒரு கடிதத்தை எழுதித் தனக்குப் படித்துக் காட்டச் சொல்வார்; பிறகு அதே கடிதத்தை வேறொருவரை அழைத்து அவரிடம் கொடுத்துப் படித்துக் காட்டச் சொல்வார். கடிதத்தை எழுதிய காரியதரிசி, இம்மியேனும் பிசகி எழுதியிருந்தாலும், ஹைதர் கட்டளையில் மயிரிழை விலகியிருந்தாலும், அவர் தலை போய்விடும்.

பளிக்குத்தூண்களுள்ள அழகிய மாடத்தில் நான் அவருடன் அடிக்கடி வீற்றிருப்பதுண்டு. அந்த மாடத்தின் முன்பு அரண்மனைத் தோட்டம். தோட்டம் சிறியதாயினும்—கோட்டைக்குள் பெரிய தோட்டத்துக்கிட விசாலமில்லை—அதில் இரண்டுவிதப் பழங்களையுதவும் அழகிய ஒட்டுமரங்களின் வரிசையும், தமால மரச்சாலையும், நீரூற்றுக்களும், பிறவும் உண்டு. வாலிபர் பலர், அந்தத் தோட்டத்தில் மண் தூக்கிச் செல்வதைக்கண்டு, அவர்கள் யார் என்று விசாரித்தேன். அவர்கள் எல்லோரும் அநாதப் பிள்ளைகள் என்பதையும், ஹைதர் அவர்களைப் பராமரித்துக் காப்பாற்றி, ஊண் உடை உதவி, அவர்கள் பயிற்சிக்கு வேண்டியன அளித்து வருவதையும், அறிந்தேன். ஏழை அநாதர்களை இப்படிப் போஷிப்பதையறிந்து நான் ஸந்தோஷப்பட்டேன். நம்முடைய ஸர்க்காரும்

இதுபோற் செய்து, மதவிஷயமான போதனைகளும் புகட்டினால், நலமாயிருக்கும். கடைசிநாள் மாலை நான் அவரிடம் விடைபெற்றுக்கொள்ளும்பொழுது, ஹைதர், பாரசீக பாஷையில் பேசும்படி என்னை வேண்டினார். அவருடைய பரிவாரத்தில் சிலருடன் நான் பேசினது, அவருக்குத் தெரியும். அவருக்குப் பாரசீக பாஷை பேச வராது; ஆனால் பிறர் பேசுவது கொஞ்சம் அர்த்தமாகும். நான் அப்படியே பேசி, நான் தூதுசென்ற உட்கருத்தை விளக்கினேன்: "இராஜ்யபரிபாலன விஷயங்களில் ஒரு சம்பந்தமுமில்லாத மதபோதனைப பாதிரியாகிய நான், என் தொழிலுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி உம்மிடம் தூது வந்தது, உமக்கு ஒரு வேளை ஆச்சரியமாயிருக்கலாம். என் தூதின் நோக்கம் சமாதானமே என்பதை யறிந்து, யுத்தத்தினால் விளையும் பெருங்கேடுகளையும் கஷ்டநிஷ்டூரங்களையும் பயங்கரமான கொடுமைகளையும் உணர்ந்தவனாதால், இவ்வாறு இரண்டு துரைத்தனத்தாருக்குள் யுத்தம உண்டாவதைத் தடுத்துச சமாதானத்தை உண்டுபண்ணும் முயற்சியில தலையிட்டேன். தேசத்துக்கு இதனால் விளையலாகும் நன்மையையும் க்ஷேமத்தையும் கருதியே தூதுக்கு இசைந்தேன். சமாதான மதபோதகனை என் தொழிலுக்குப் பொருந்தியதே இதுவும் என்றெண்ணி வந்தேன்," என்று சொன்னேன். அதைக் கேட்டு அவர் சந்தோஷப்பட்டு, "நல்லதே; மிகவும் நல்லதே! நானும் உம்மைப் போலவே நினைக்கிறேன். அங்கிலேயர் என்னுடன் சமாதானமாய் வாழவேண்டுமென்பதுதான், என் மனப்பூர்வமான கோரிக்கை. அவர்கள் சமாதானத்தை நாடிக் கையுதவி

ஞல், நான் பிணை வாங்கமாட்டேன்" என்று பதிறசொன்ஞர்.

மேலே றிப வண்ணம எழுதியவர் கிறிஸ்தவமத போதகர், அங்கிலேய கம்பெனியாருக்காகத் தூது சென்ற வர்; ஹைதரோ, முகமமதியர், கம்பெனியாரின் விரோதி; அங்கிலேய கம்பெனியார் காரணமாகவே, ஹைதரும் திப்பு சுல்த்தானும் மாண்டு, அவர் வம்மிசம அரசிழந்து நசித் துப் போயிறறு. அங்ஙன மிருந்தும், ஷ்வார்ட்ஸ் பாதிரி யார் ஹைதரைப்பற்றிக் கூறியிருப்பது, ஹைதர், உண் மையில் எவ்வளவு நியாயப்பற்றும் பெருந்தன்மையும் ஔதாரியகுணமும் விசாலநோக்குமம உள்ளவராயிருந்தா ரென்பதை நன்கு விளக்குமம. அவரது யுத்த சாமர்த்தி யத்தையும் வீரத்தையும் அரசியல் திறமையையும், அவ ரைப் பழிதூற்றும் விரோதிகளுமே ஒப்புக்கொண்டு புகழ் கின்றனர். இதஞல், சாதாரணமான சரித்திர நூல்களைப் படித்து, அவற்றின்படிமட்டும் ஹைதரை மதிப்பிட்டு, அவரை ஒரு கொடிய துராத்மாவாக எண்ணுவது, முற் றும் தவறென்பது விளங்கும். இராஜ்ய பரிபாலனத்தில் அவர் கண்டிப்பையும் குறடாப் பிரயோகத்தையும் அநா கரிக மென்று இகழ்வோர், அக்காலத்து வழக்கங்களை மனத்திற கொள்வ தன்றி, இக்காலத்திலுமே, இராணுவச் சட்ட அதிகாரத்தின் கீழ் நடைபெறும் குரூரங்களையும் அழிம்புகளையுமம, கசையடியையும், அதனினும் மானக் கேடான தண்டனைகளையும், மறவாதிருக்கக்கடவர்.

வங்காள மேதாவி மேஜர் பாஸு என்பவர், கடந் தவாண்டில் (1924) பிரசுரஞ் செய்துள்ள "இந்தியாவில் கிறிஸ்தவர் (பிரித்தானியர்) அதிகார ஸ்தாபனம்" என்னும்

சரித்திரப் பெருநூலிலே, ஹைதர் அலியைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார் :—

"ஹைதர் பல நற்குணங்களும் திறமைகளும் வாய்ந்தவர். அவர், யுத்த வீரருக்குரிய சிறப்புக்களைப் பிறவியில் அமையப் பெற்றவர்; குதிரை யேற்றத்தில் தேர்ந்தவர்; வாட்போரிலும் துப்பாக்கி சுடுவதிலும் அதிசமர்த்தர். அனுபவமும் மதத்துவேஷம் இல்லாதவர்; தன் உத்தியோகஸ்தர்கள் எம்மதத்தினர் என்பதைச் சிறிதும் கவனியாதவர்; அவர்கள் தன் கட்டளைப்படி ஒழுகுவதொன்றையே கருதுபவர். மனிதர் குழாங்களின் தலைமை பூண்டு, அவர்களை மேல்நடத்துதற் கின்றியமையாத அரும் பெருங் குணங்களை இயற்கையிலமையப்பெற்ற நரபதி; இராஜ்ய பரிபாலனத்தில் உயர்திற னுற்றவர். அரசாங்கத்தி லுள்ள உயர் பதவிகளி லெல்லாம் ஹிந்துக்களை அவர் நியமித்தது, அவருக்குத் திருப்திகரமாய் முடிந்தது; அவர் இறந்த பின்னரும், அவர் நியமித்த ஹிந்து உத்தியோகஸ்தர்கள், விசுவாச மாயிருந்தனர்.

யுத்தத்திறமை விஷயத்தில், ஹைதருக்குச் சமானரான வீரர், அவர் காலத்தில் இந்தியாவில் வேறெவருமே யிலர்; உலகெங்குமே, அவரினுஞ் சிறந்த வீரர் அரியரே யாவர். காலத்துக்குப்பொருந்த நடக்கும் மதியூகமுள்ளவராதலின், ஹைதர், ஐரோப்பியரது யுத்த முறைகளைப் பாராட்டி, அவற்றைப் பயின்று வந்தார். இவ்வாறு யுத்தத்தில் மேன்மையுறும் பேரவாவினால்தான், பிரெஞ்சுக்காரரின் துணையை அவர் நாடினார். தன் நாட்டைச் சார்ந்த கடற்கரைப் பிரதேசத்தின் காப்பை அவர் மறந்திலர். அவர் காலத்தி லுள்ள இந்திய அரசர்களிலே, அவர் ஒருவர்

தான் நாவாய்ப் படைகளை ஏற்படுத்திப் பராமரித்து வந்தவர்."

இவற்றை யெல்லாம ஆலோசித்து நியாயங்கண்டு மதிப்பிடுவோர், மைசூர் ஹைதா அலியை, தக்ஷிணத்தி லே புகழ்பெற் றிலங்கிய வீரா பலர்க்குள், எல்லாவிதத்தா னும் மிகச் சிறநத ஒருவராகவே கருதுவர்.

# 3. கான்சாயபு கம்மந்தான்

உலக நாடக அரங்கிலே சிறபபுற் றிலங்குவோ ரை, பிற்காலத்துச் சரித்திர ஆசிரியர்கள், அவரவர் வாழ்க் கையைத் தமமுடைய கட்டளைக்கல்லில உரைத்துப் பார்த்து மதிபபிட்டு, குணங் குறறங்களில மிகை நாடிக் கொண்டு, உலக சரிததிரப் பேராமனையிலே அவரவருக் குரிய ஸ்தானத்தை அமைபபது ஒன்று; அவருடன் வாழ்ந் தோரும் அடுததுப பின்னுறறோருமான பொதுமக்கள், தாம் கண்டதையும் கேட்டதையுங் கொண்டு வசையையோ இசையையோ அவர்க்களிதது, பேசசுவழக்கில் அவர் பெயரை வீடுதோறும் வீதிதோறும வழங்கச் செய்வது வேறு ஒன்று. பொதுஜனமதிபபும் சரித்திர மதிப்பும் சில வேளைகளில் மாறுபடுவ துண்டு. ஆராய்ச்சிக்கார ரின் உள்நோக்கத்துக்கும், மனப்போக்குக்கும், அவரவர்க் ககப்படும் ஆதாரங்களுக்கும் ஏறறபடி, ஒருவரைப் பற்றிய மதிபபுக்களே வேறறுமைப்படுவது முண்டு. ஆனல், பொதுமக்களின் மதிபபோ, தலைமுறை தலைமுறை யாக ஒரேபடி நிகழ்வ தன்றி, மாறுவ தரிது. சரித்திரத்

தில் திகழும் பெருமையைப் பெறுதாரின் பெயர்கள் பல, ஆங்காங்கு பொதுஜனங்களுள் வழங்குவதையும் காணலாகும். பிற்காலத்துச் சரித்திர ஆசிரியராலும், அவரினும் தம்மை நன்கறிந்த பொதுமக்களாலும், ஒருங்கே நன்கு மதிக்கப் பெறுபவர்களின் புகழே சிறந்த புகழென்பது, கூறுமே விளங்கும்.

தமிழகத்திலே, 'தேசிங்கு ராஜன்கதை' யைக் கேட்டிராதார் யார்? ஆனால், அவ்வீரனது பெயரைச் சரித்திர நூல்களிற் காண்பதரிது. கான் சாயபு சண்டை என்னும் பாட்டையும் பலர் அறிந்திருப்பர். 'கானு' என்று அப்பாட்டில் சாதாரணமாய்ப பெயர்வழங்கும் முகம்மது யூஸப் கான் என்ற வீரரின் பெயரைச சரித்திரங்கள் எடுத்துக் கூறுவது மன்றி, அவர் சரித்திர மட்டுமே ஒரு தனிப் பெரு நூலாக எழுதப்பட் டிருக்கிறது. தளவாய் அரியநாத முதலியாரையும், மைசூர் ஹைதர் அலியையும் பற்றிப் பேசியபின், முன்னவர் ஸ்தாபித்த மதுரைச் சீமையைப் பிற்காலத்திலே சின்னாள் ஆண்டு, அவர் ஏற்படுத்திய பாளையக்காரர்களில் திமிருற்று மிஞ்சினவர்களை ஒடுக்கி யடக்கி, "கள்ளர் கருவறுத்த வீரன்" என்று புகழப் பெற்றவரும்; ஹைதா அலியையுமே எதிர்த்துப் பொருது, அவர் படையெடுப்பு மேற்செல்லாது தடுத்தவரும்; முன்னவரைப்போல் வேளாண்மைக்குப் பிறந்து வாளாண்மையிற் சிறந்து, பின்னவரைப்போல் முகம்மதியராக இறந்தவருமான கான் சாயபு கம்மந்தான் சரித்திரத்தை எடுத்துரைப்பது, நன்கு பொருந்தும்.

இவர் இராமநாதபுரம் சீமையிலுள்ள பனையூரிலே வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவர் பிறந்த ஆண்டு

தாய் தந்தையரின் பெயர்கள், ஒன்றும் தெரிந்திலது. இவர் இயற்பெயர் மருதநாயகம்பிள்ளை. இவர் பிறந்தது 1720-1730க்குள் இருக்கலாம். வாலிபப்பருவத்தில் இவர் வெகு துஷ்டராயும் பெற்றோர்க் கடங்காதவராயும் இருந்தமையால், அவர்கள் இவரைக் கண்டித்துத் தண்டிக்க, தன் ஊரையும் உற்றாரையும் துறந்து, இவர் புதுச்சேரிக்கு ஓடிபபோய் விட்டாராம்.

இவ்வாறு ஓடிப்போனவர், ஷாக் லா என்னும் பிரெஞ்சுக்காரரிடம் மூன்று வருஷங்களுக்குமேல் குற்றேவல் புரிந்து வந்தார். அதற்கு முன்னரே இவர் முஸ்லீமாகி, முகம்மது யூஸப் என்று பெயர்வைத்துக் கொண்டனராம். தன் யஜமானருக்குத் துரோகம் செய்து, இவர் திருடினரென்றும்; அதனால் இவரை அவர் வேலையைவிட்டு நீக்கினரென்றும்; இவர் செய்த திருட்டுக்குத் தண்டனை யாக, அக்காலத்து முறைப்படி, இவர் காதுகள் அறுத்து விடப்பட்டன வென்றும் கூறுவர். இக்கூற்றுக்களுள் ஒன்றும் நிச்சய மில்லை. அப்பால் இவர் பிரண்டன் என்னும் ஐரோப்பிய கனவானிடம் வேலையி லமர்ந்தார. அக்கனவான், தன் மகனைப்போல இவரைப் பேணி நடத்தி வந்ததுமன்றி, இவருக்குக் கல்வி பயிற்றி, பிரெஞ்சு, இங்கிலீஷ், போர்த்துகீஸ் முதலிய அன்னிய பாஷைகளிலும் இவரைத் தேற்றுவித்தார். திருட்டுக்காக வேலையையும் காதுகளையும் இழந்தபின், புதுச்சேரியில் வாழ வெள்கி, தஞ்சாவூருக்குச் சென்று, அச்சீமை அரசரின் இராணுவத்தில் சிப்பாயாக இவர் சேர்ந்தனரென்று சிலர் கூறுவர். மேற்கூறிய வண்ணம் இவரைப் பேணி வளர்த்துக் கல்வி பயிற்றிய பிரண்டன் இன்னரென்று துலங்க வில்லை.

ஷாக்லா என்பவரின் குடும்பத்தினர்கள், முதலில் 'பிரண்டனூர் லாக்கள்' என்று அழைக்கப்பட்டன ரென் பர். அங்ஙனமாயின், லாவும் பிரண்டனும் ஒருவராகவே இருந்திருக்கலாம். அஃதெவ்வாறாயினும், யூஸப் கான், பல பாஷைகள் பேசவும் எழுதவும் தெரிந்தவர் என்பது திண் ணம். இதுவு மன்றி, ஒருகாலத்தில், திருப்பதி, நெல்லூர்ப் பிரதேசங்களை யாண்டு வந்த முகம்மது கமால் என்பவ ரிடம் இவர் வைத்தியரா யிருந்தமையால், இவருக்கு வைத் தியமும தெரியு மென்பது தேற்றம். பிரண்டன் துரை சேவகத்தை விட்டு நீங்கிய பின்னர், யூஸப்கான், நவாபின் சேவையில் அமர்ந்து, முறையே தண்டல்காரன், சுங்கச் சாவடிககாரன், சிபபாய், நாயக், ஹவில்தார் வேலைகளி லிருந்து படிபபடியா யுயர்நது, ஒரு சிப்பாய் கம்பெனி யின் தலைவராகி, சுபேதார் என்னும பட்டத்தை அடைந் தனர் என்பர். அநதக் காலத்திலே, கருநாடக நவாப் ஸ்தா னத்தைபபறறி, முகமமதலிக்கும சநதாசாயபுக்கும் வழக் கும் போர்களும நிகழ்நதமையும; அவரவர் கைவலிமைக் கமைநதவணணம நாட்டிற சில பாகங்களை அவரவர் ஆண்டு வந்தமையும; புதுச்சேரியைத் தலைநகராககிக கொண் டிருந்த பிரெஞ்சுக்காரர் சநதாசாயபுககும், தேவிகோட் டை (Fort St. David)யையும சென்னையையும தலைநகராக ளாக்கிக் கொண்டிருநத ஆங்கிலேயர் முகமமதலிக்கும் உதவிசெய்து, ஒருவரோடொருவர்சண்டைசெய்தமையும; இந்தியாவில் ஆங்கிலேயர் துரைத்தனத்தின் மூலபுருஷர் எனத்தகும் க்ளைவ் என்பவர், இநதச் சண்டைகளில முதல் முதல் பெயர் பெற்றமையும், சரித்திர விஷயங்கள். யூஸப்கான் சந்தாசாயபுவின் சேவகத்தில்தான் முதலில்

அமர்ந்தனர் போலும்; ஏனெனின், நெல்லூரிலே இவர் யஜமானராயிருந்த முகமமது கமால், சநதாசாயபுவின் உத்தியோகஸ்தர். கமாலின் வைத்தியராக யூஸப்கான் எவ்வளவு காலமிருநதன ரென்பது தெரிய வில்லே. பலநாள் அவ்வேலையி லிருந்தா ரென்று எண்ணுதற்கு மிடமில்லே. அதுவரையில் தான் சம்பாதித்திருநத கைப்பொருளேக் கொண்டு, தனக்கே சொந்தமான ஒரு சிபபாய்ப படையைத் திரட்டி, அதன் சுபேதாராகத் தானிருநதுகொண்டு "நெல்லூர் சுபேதார்" என்னும பெயரோடும், தன் சிபபாய்ப் படையோடும், அவர் ஆங்கிலேயரின் சேவகத்திற் புகுநதார். இங்ஙனம் அவா ஆங்கிலேயரின் கீழ் முதல் முதல் உத்தியோகஸ்தரானது, 1752-ம் ஆண்டின் துவக்கத்தில், க்ளேவின் சைநியததில் என்பர். இவர் சேர்ந்த பிறகே, ஆறுகாட்டுக கோட்டையைக் கிளேவ் பிடிக்கலானுர். அபபால, சநதாசாயபுவின் குமாரர் ராஜா சாயபு என்பவர், தோற்றுச் சிதறுண்ட தன் படைகளேயெல்லாம் ஒருவாறு திரட்டிச சேர்த்து, பிரெஞ்சுக்காரர் உதவியையுங் கொண்டு, மீண்டும யுதத சன்னத்தராயினர். 1752-மவருஷம் பெப்ரவரிமீ 28-ம் தேதியன்று, காவேரிப் பாக்கததில நடநத சண்டையிலே, க்ளேவ, மீண்டும் அவரை முறியடித்தார்.

அடுத்த மாதத்தில் மேஜர் லாரன்ஸ் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து ஆங்கிலேய சேனுபதியாகிவிடவே, க்ளேவ், அவர்கீழ்ப் படைத்தலேவராயும் இராணுவ உக்கிராணியாயும்; க்ளேவின் தலேமைக் கீழுள்ள தண்டில், நெல்லூர்ச சுபேதார், தன் சிப்பாய்களோடு ஒரு வகுப்பாயும், சேவித்து வநதனர். அக்காலத்து இராணுவ அறிக்கைய

யத்திரங்களிலும், லிகிதங்களிலும், யூஸப்கான் பெயர் "நெல்லூர்ச் சுபேதார்," அல்லது "நெல்லூர்" என்று மாத்திரமே குறிக்கப் பட்டிருக்கிறது.

யூஸப்கான் உதவியினால் பிரெஞ்சுக்காரரை உட்டாத்தூரிலே தோற்கடித்த காப்தன் டாலடன் என்பவர்: "நெல்லூர்ச் சிப்பாய்கள் சுத்த வீரர்கள்; அவர்கள் சுபேதாரோ, ஒப்புயர்வற்ற வீரர்; அவர்தான் எனக்கு ஒரே தாரகம்" என்று எழுதியிருக்கிறார். அதன் பின் வாலிகொண்டபுரத்திலே பிரெஞ்சுக்காரரை வென்றபோதும், நெல்லூர்ச் சிப்பாய்களைப் புகழ்ந்திருக்கிறார்.

இதற்குள், தஞ்சாவூர் இராஜ்யத்து மகாராஷ்டிர சேனாபதியான மங்கோஜி என்பவர் கையில் அகப்பட்டு விட்ட சந்தாசாயபு, அவரால் கொலையுண்டார். பல வருஷங்களுக்கு முன்னர், திருச்சிராப்பள்ளியிலே, காவேரிக் கரையி லுள்ள தளவாய்மணடபத்திலே, பாண்டியராணி மீனாக்ஷிக்கு உண்மையாயிருந்து உதவி செய்கிறேனென்று குரானைக் கையிலேந்திச் சத்தியஞ்செய்து கொடுத்துத் திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குள் நுழைந்த சந்தாசாயபு, பாண்டியராணிக்காக யுத்தஞ்செய்து நாட்டைக் கைப்பற்றிய பின்னர், கொடுந் துரோகஞ்செய்து அவளைச் சிறைப்படுத்தி, இராஜ்யத்தைத் தானே அபகரித்துக் கொண்டு, இராணியை மானபங்கமுஞ் செய்து, அவள் நஞ்சுண்டு சாகும்படி செய்து விட்டார். 'அரசன் அன்று கேட்கும்; தெய்வம் நின்று கேட்கும்', என்னும் நீதிப்படி, அந்த மகா துரோகத்தின் பயனாக, அத் தளவாய் மண்டபத்தில்தானே, 1752-ம் வருஷம் ஜூன் மீ 3-ம் தேதியன்று, "நீ யன்று பொய்ப் பிரமாணம் பண்ணிச் செய்த துரோகத்

துக்கு இதுவே தண்டனை" என்று சொல்லிக் கொண்டே, மங்கோஜி, சந்தாசாயபுவின் தலையை வீசிவிட்டார். சந்தா சாயபு ஒழிந்து, முகம்மதலியே கருநாடக நவாபாகி விட்ட பின்பு, இனிச சண்டை சச்சரவுக ளில்லை யென்று ஆங்கிலேயர் எண்ணினர். ஆனால், முகம்மதலிக்கு உதவி செய்த மைசூரார், அவர் வாக்குக் கொடுத்தபடி, திருச்சிராப்பள்ளியைத் தமக்குக் கொடுத்து விடவேண்டுமென்று வாதாடினதாலும், டூப்ளேயின் சூழ்சசிகளாலும, மேஜர் லாரன்ஸ், திருசசிராப்பள்ளியைக் காத்துப் போர்புரிய வேண்டியதாயிற்று. அவர் சைநியங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் படைக்கலங்கள் எவையும் எதிரி கையில அகபபடாமல, ஆங்கிலேயரிடம வெகு சாமர்த்தியமாய்க் கொண்டு சேர்தது உதவினவர் யூஸபகானே. இவ்வாறு பேருதவி செய்த யூஸபகானைப் பறறி, மேஜர் லாரன்ஸ் பின் வருமாறு எழுதியிருககிறார்:—

"அவர் சிறநத தளகாத்தர் இநதப பிரதேசங்களை நன்கறிநதவர்; வீரமும் மனவுறுதியுமவாய்நதவராயி னும், சமயத்தில வெகு நிதானமாய், புததிசாலித்தனமாய், நடப்பவா; சுருககிக் கூறின், பிறவியில யுததவீரர்; அவருக்குச சமானரானவரை இநநாட்டில நான் கண்டதில்லை; ஓயாதுழைக்கிறார்; ஒவ்வொரு வேலையையும் நேரில் கவனிக்கிறார்; தன் புத்திசாலிததனத்தினால் உணவுப் பொருள்களை அவர் கொண்டுவந்துதவினார்." ஒப்புயர்வற்ற உத்தம வீரரும் ஆங்கில அரசாடசி ஸ்தாபன கர்த்தருமான க்ளைவைப் பற்றியும, இவை போன்ற சொற்களாலேயே மேஜர் லாரன்ஸ் புகழ்ந்திருப்பதைக் கவனித்தால், யூஸப்கான் க்ளைவுக்குச் சமமானவர் என்பது விளங்கும்.

மேலே கூறியவண்ணம் ஆங்கிலேயருக்கும் மைசூராருக்கும் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பற்றிப் போர் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்திலே, யூஸப்கானது உதவியினால்தான் மேஜர் லாரன்ஸின் படைகள் ஜீவித்துப் போராடுகின்றன என்பதையும், அவர் உதவி யில்லாவிடின், ஆங்கிலேயரை விரைவில் வென்று நசுக்கி விடலாமென்பதையும் அறிந்து, அதுகாரணமாக மேஜர் லாரன்ஸ் யூஸப்கானிடத்து வைத்திருக்கும் மிக்க பிரீதியையும் பெரு மதிப்பையும் கண்டு பொறாமைகொண்ட முனுஷி புண்ணியப்பர் என்னும் பிராமணர், யூஸப்கானைத் தொலைக்கச் சூழ்ச்சி செய்யலானார். மைசூர் சேனாபதியான நந்தராஜரிடமிருந்து யூஸப்கானுக்கும் வேறொரு சிப்பாய்த் தலைவனுக்கும் ஒரு சதியாலோசனைக் கடிதம் வருமாறும்; அக்கடிதம் ஆங்கிலேயர் பாசறையில கீழே கிடக்க, அதையொருவன் கண்டெடுத்து ஆங்கிலேயர் தலைவரிடம் கொடுக்கு மாறும், புண்ணியப்பர் ஏற்பாடு செய்தார். அந்தப் பொய்க் கடிதத்திலே, திருச்சிராப்பள்ளிக் கோட்டையைத் துரோகமாய் மைசூராருக்குப் பிடித்துக்கொடுத்துவிட யூஸப்கான் சம்மதித்தது போற் கண்டிருந்தது. கடிதத்தைப் பார்த்தவுடன், மேஜர் லாரன்ஸ், யூஸப்கானையும் அவருடன் துரோகத்திற் சேர்ந்த சிப்பாய்த் தலைவனையும் சிறைப்படுத்தி, காப்தன் கைலாட்டை, அவ்விஷயத்தைப் பற்றித் தீர விசாரணை செய்ய ஏவினார். கைலாட் விசாரணை செய்ததில் உண்மை துலங்கி, யூஸப்கானின் சத்தியமும் புண்ணியப்பரின் சதியாலோசனையும் விளங்கிவிடவே, கவர்னரின் கட்டளைப்படி, புண்ணியப்பர் பீரங்கி வாயில்வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்;

யூஸப்கான் சிறை நீங்கி மீண்டும் தன் பதவியைப் பெற்றார். நாட்டில் வழங்கும பாஷை தமக்கும் தெரியாமையால் புண்ணியபபரைப போன்ற துரோகிகளின் உதவியைக் கொண்டே வேலைகளை நடததும ஆஙகிலேயரிடம சேவகம் செய்வது, எததுணை ஆபததுககிட மென்பதை, யூஸப கான அபபொழுது நனகுணர்நதார.

திருசசிராபபளளியி லுளள சைநியஙகளுககு வேண்டிய உணவுப பொருளகளைக காவற படைகளுடன் காபடன சைராடடும யூஸபகானும ஒருநாளிரவு கொண்டு வருகையில், வழககமபோல யாவர்ககும முன்பு ஒறறா தலைவனாயக குதிரைமீது சென்ற யூஸபகான, பிரெஞசுக் காரரான எதிரிகள காடடு மறைவில ஒளிநதிருபபதை யறிநது, வேகமாயத திருமபி வநது தெரிவிததால, உடனே காவற படைகளை வேறு வழியில இருகிளைகளாகத் திருபபி நடததி,எதிரிகளைத தாககி முறியடிதது வெருட்டி விட முடிநதது. அனறு மட்டும எதிரிகள கையில அகப் பட்டுத் தோலவியுறறு, உணவுப பொருளகள திருசசிராப பள்ளி சேராமலிருநதால, மேஜா லாரனஸ் கோட்டையை இழநது புறங்காட்டி போயிருகக வேண்டியதுதான் யூஸபகானே அன்று ஆஙகிலேயரின் படைகளையும் மானத் தையுங் காபபாறறினா எனபது பொருநதும.

யூஸப்கானின் யோககியதையையும, அரும்பெருந் திறலையும, அவர் செய்துவரும் விலைமதிப பிலலாப் பேருதவிகளையும் நனகறிநத மேஜர் லாரன்ஸ், சென்னையி லுள்ள கவர்னருக்கு அவரைப புகழ்நதெழுதி, அவரு டைய சேவகச் சிறப்புக்கு ஏறக, கம்பெனியார் அவரை மரியாதை செய்ய வேண்டினார். அதனால, ஆங்கிலேய கம்

பெனியார், தமது சிப்பாய்ப் படைகளுக்கெல்லாம் யூஸப் கானையே சேனுபதியாக்கி, கம்மந்தான் (Commandant) என்னும் பட்டத்தையும், ஒரு போக்கியதா பத்திரத்தை யும், தங்கப் பதக்கத்தையும், அவருக்கு அளித்தனர். மூன் றவுன்ஸ் கனத்துக்கு மேலான அந்தப் பதக்கத்தில், ஒரு புறத்தில் கம்பெனியாரின் படைமுத்திரையும் வாழ்த் துரை வாசகமும் பொறித்திருந்தது; மறுபுறத்திலே; "கனம் கம்பெனியாரின் சிப்பாய்களுக்கெல்லாம் கம்மந்தா ஞன முகம்மது யூஸப்கான் பகதூருக்கு, போர்டு ஸெண்ட் ஜார்ஜ் கனம் கவர்னர் கவுன்ஸிலர் அவர்களால், வீர வெகுமானமாகவும்; அநேக போர் வீரரும் அதி சாமர்த் திய தளகர்த்தரும் உண்மை சேவகருமான அவர் பெய ரைப் பிற்காலத்தில் நிலைக்கச் செய்யும் ஞாபகச் சின்னமா கவும், இந்தப் பரிசு அளிக்கப்பட்டது" என்று, பாரசீக பாஷையில் எழுதியிருந்தது. இவ்வாறு புகழ்ப்பத்திரமும் பொற்பதக்கமும் 1751-ம் வருஷத்திலே யூஸப்கானுக்கு அளித்த ஆங்கிலேய கவுன்ஸிலர்கள் எழுவரில் மூவர், பத்தாண்டுகளுக்குப் பின், அவரைத் தூக்கிலிடும் கட்ட ளைக்கும் கையொப்பமிட்டவராவர்.

சந்தாசாயபு கொலையுண்டதால் நாட்டின் ஏகபோகம் நவாபு முகம்மதலியை அடைந்ததாயினும், மதுரை திரு நெல்வேலிச் சீமைகள், பாளையக்காரர் வசத்திலும் சந்தா சாயபுவின் கட்சியைச் சேர்ந்த மூவர் வசத்திலும் இருந்த மையால், அந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றி வாழ்வித்து, குடிகளிடத்திலும் பாளையக்காரரிடத்திலும் வரிகண்ட வேண்டியிருந்தது. இந்தப் பாளையப்பட்டுகள் சிலவற் றில் குடியிருந்த கள்ளர், மறவர் முதலியோர், "முடலை

யாக்கை முழுவலி மாக்கள்;" 12 அடி முதல் 18 அடி வரை நீளமுள்ள ஈட்டிகளே அவர்கள் முக்கிய ஆயுதங்களாம்; அவற்றைக் கொண்டு, மட்சுவர்களுக்கும முள் வேலிகளுக்கும் பின் பதுங்கி யிருந்து, பொல்லாப் போர் புரிய வல்லவர். இறைவனுக்குத் திறையிறுக்கும் விஷயத்திலோ, "மழைபெய்கிறது; நாங்கள் உழைக்கிறோம்; உண்மை யிப்படி யிருக்க, நம்மைப் போன்ற மற்றொரு மனிதன் சொற்படி நடந்து, ஏன் அவனுக்கு வரிகொடுக்க வேண்டும்?" என்று வழக்காடுபவர். இன்னாரிட மிருந்து வரிதண்டுவது எளிதன்றே.

நவாபு முகம்மதலி தரப்பில் நாட்டை வாழ்வித்து, ஒழுங்கு படுத்தி, வரிதண்டும் பொருட்டு, ஒரு பெரும் படையுடன், ஹெரான் தளகர்த்தரும், அவருக்குதவியாகக் கம்மந்தானும், நவாபின் தமையன் மாபுஸ்கானும், தென்னாடு நோக்கிச் சென்றனர்.

இம் மூவருள், கம்மந்தானே யோக்கியதையிலும் சாமர்த்தியத்திலும் மிக்கவரென்பதில் சந்தேகமே யில்லை. மதுரை திருநெல்வேலிச சீமைகளில நடநத அழிம்புகளுக்கும், கலகங்கள் அடங்காமல் மீண்டும் கிளைத்துக் குழப்பம் மிகுந்ததற்கும், நவாபின் அதிகாரம் நிலைபெறாமல் நெடுநாள் தத்தளித்ததறகும், மாபுஸ்கான ஒரு முக்கிய காரணஸ்தராய் நடந்து கொண்டார். ஹெரான் தளகர்த்தரோ, மாபுஸ்கானிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, கம்பெனியாரின் கட்டளைப் படி, வேலைமுடியுமுன்பே சென்னை மீளவேண்டியதாயிற்று. யார் எவ்வித அநியாயஞ் செய்வதைக் காணினும் உடனே தான் அடங்காத கோபங்கொள்பவ ரென்றும்;

வேறு மேல்நோக்க மின்றி வெறும் பணவாசை பிடித்தவ ரல்ல ரென்றும், சத்தியசந்த ரென்றும், கம்மந்தான் புகழப்பட் டிருக்கிறார். இப்படிப்பட்டவருக்கும் மற்றிரு வருக்கும் ஆதிமுதலே ஒருப்படாமை வியப்பன்றே.

கம்பெனியாரின் பிரதிநிதியும் சேனைபதியுமான ஹெரான் உத்தரவுப்படியே மற்றிருவரும் நடக்கவேண் டியவராயிருந்தனர். அவரோ, அயோக்கியத்தனமாயும், மூடத்தனமாயும் நடந்து கொண்டார். கோவில்குடிக் கோயில் கதவைத் தீயா லெரித்து, உட்புகுந்து, கள்ளர் களை வாளுக் கிரையாக்கியதோடு நில்லாமல், அவர்கள் வணங்கும் சிறிய செப்பு விக்கிரகங்களை அழிசெம்பாக விற்றுக் காசாக்கும் பொருட்டு அபகரித்துக் கொண்டு போய், கள்ளர்களின் தீராப்பகைமையையும் வெறுப் பையும் சம்பாதித்துக் கொண்டார்; கைக்கூலி வாங்கிக் கொண்டு மாபுஸ்கானையே குறைந்த தொகைக்குக் குத்தகை அமில்தா ராக்கினமையால், நவாபின் அவநம்பிக்கையும் அப்பிரியத்தையும் அடைந்தார். கள்ளக் கணக் கெழுதி யும், கைக்கூலிகள் வாங்கியும், நவாபுக்குச் சேரவேண் டிய கப்பத்தைக் கண்டித்து வசூல் செய்வதிலும் பாளை யக்காரர் தனக்குக் கொடுக்கும் நன்கொடைகளிலே கண்ணும் கருத்துமா யிருந்தும், கம்பெனியாருக்கு நவாபு கொடுக்க வேண்டிய கடனுக்காகப் பணம் வசூலிப் பது கிடக்க, படையெடுப்புச் செலவுக்குமே வசூலித்த தொகை போதாதபடி செய்து விட்டதால், தன் யஜமான ர்கும் கம்பெனியாரின் வெறுப்பையும் அடைந்தார். ஹெரா னது நடவடிக்கைகளைக் கண்டறிந்த கம்பெனியார், உடனே மதராஸ் மீளும்படி அவருக்குக் கட்டளை யனுப்பினர்.

அவர் மீண்டு வரும் வழியில், காடுகளிலே மறைவிற் பதுங்கி யிருந்த கள்ள வீரர்கள் தக்கவாறு பழிவாங்கிச் செய்த போரில், அவர் சைநியங்கள் பெருஞ் சேதமுற, அவர் அரிதில் உயிர்தப்பி மீண்டனர். அவர் செய்த குற்றங்களை விசாரித்துக் கம்பெனியார் அவரை வேலையினின்றும் தள்ளிச் சிறையில் வைத்திருக்கையில், அவர் தப்பியோடி, சதுரங்கபட்டணம், புதுசேரி மார்க்கமாக ஐரோப்பா போய்ச சேர்ந்தார்; அவர் தென்னாடு சென்ற காரியம கை கூடாமற்போயிற்று. இந்த விஷயத்திலே, கம்மந்தானுக்கு எவ்வித அபக்கியாதியும் இலலையென்பது மாத்திரமோ; அவர் ஒருவர்தான், அக்கிரமமாக இலஞ்சம் வாங்கிக் கொள்ளாது, யோக்கியமாய் நடந்தவர் என்பது உறுதி.

தென்னாட்டுக் குத்தகையைப பெற்ற தன் தமயன் மாபுஸ்கான் பாளையக்காரரகளிடமிருந்து கப்பங்களை வசூ லிக்க முயன்றுகொண் டிருக்கையில, தன் ஆட்சிககு உட் பட்டவரும், வல்லாண்மை யுள்ளவரும், வேலூர் பூஜ்தாரு மான முர்த்தஸா அலி என்பவர் தனக்குச செலுத்த வேண்டிய கப்பத்தை வசூலிக்கும்பொருட்டு, நவாபு முகம்மதலி, கம்பெனியாரின் உதவியை நாடினார். தென் னாட்டுப படையெடுப்பில் கைக்கூலி வாங்காதவர் கம்மந் தான் ஒருவரே என்பதை நவாபு அறிந்திருந்தமையால், கம்பெனியார் படையுடன் அனுபபிய கில்பாட்ரிக் தளகர்த் தருடன், கம்மந்தானையும் அவர் அனுப்பினார். முர்த்தஸா அலி, மகா தந்திரசாலி; அவரைச சூழ்ச்சியில் வெல்லுதல் அரிது: நவாபின் கோரிக்கையையும், அவருக்கு ஆங்கிலே யரின் உதவி யிருப்பதையும கண்டு, பிரெஞ்சுக்காரரின் சகாயத்தை அவர் நாடினார். இதற்குள், கில்பாட்ரிக்கும்

# கான்சாயபு கம்மந்தான்

கம்மந்தானும் சைநியங்களுடன் வேலூர்க் கோட்டையை வளைந்து கொண்டனர். கம்மந்தான் கோட்டைக்குள் தூது சென்று, 'கடனறிந்து காலங் கருதி, இடனறிந்து, துணிவோடு' தான நவாபுக்கு உறுதி பயப்ப கூறிய சொல்வன்மையினால், நவாபுக்கு நாலு லக்ஷம் ரூபா கொடுக்கிறேனென்று முர்த்தஸா அலியைச் சம்மதிக்கச் செய்தார்.

இதனிடையில், புதுச்சேரிப் பிரான்சியர்கள், வேலூராருக்கு உதவிசெய்ய ஒரு பெரும்படையை அனுப்பலாயினர். அதை யறிந்த சென்னைக் கம்பெனியார், அப்படை வேலூர் சென்றடையுமுன், ஒரு லக்ஷம் ரூபாவேனும் பெற்றுக்கொண்டு சமாதானஞ் செய்யுவிக்கும்படி, ஆர்ம துரையை வேலூருக்கு அனுப்பினர். கம்மந்தான் நான்கு லக்ஷம் தருவதென்று பேசி முடித்திருப்பதை அறிந்தவுடன், ஆர்ம துரை அளப்பரிய சந்தோஷத்தை யடைந்தார். தன் உத்தேசம் வேறொருவருக்கும் தெரியாதென்பது ஆர்ம துரையின் நினைப்பு, ஆனால் முர்த்தஸா அலிக்கு அது நன்கு தெரியும். சமாதானம் பேசும் தூதர்களாகி ஆர்ம துரையும் கம்மந்தானும் வேலூர்க் கோட்டைக்குள் சென்று, முர்த்தஸா அலியைக் கண்டு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஆர்ம துரை, நாலு லக்ஷம் தந்தால் போய் விடுவதாகச் சொன்னார். முர்த்தஸா உடனே வாக்குமாறி, 'நான் ஒரு லக்ஷமே கொடுக்க ஒப்புக்கொண்டேன்' என்று கூற, அந்தப் பொய்யைச் செவியுற்ற கம்மந்தான், கடுங் கோபமுற்றுத் தன் கட்டாரியை உருவிக் கொண்டு, முர்த்தஸாவின் மேல் பாயப்போனார்.

"குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

அன்றோ? அதைக் கண்ணுற்ற முர்த்தஸா, தன் மெய்காப்புப் படை வீரரைக் கூவலானார். ஆர்ம் துரை, மனஸ்தாபம் முதிர்ந்துவிடாமல் இருவரையும் கையமர்த்திச் சமாதானஞ் செய்து, மேல் விவகாரம் பேசலாயினார். முடிவில் இரண்டு லக்ஷம் ரூபா கொடுப்பதாக முர்த்தஸா சம்மதித்தனராயினும், பிரெஞ்சுப் படைகள் துணைக்கு வரும் வரை எவ்வாற்றானும் காலங் கடத்துவதே அவர் கருத்தாயிருந்தது. அவர் சூழ்ச்சியே நிறைவேறிற்று: சில தினங்களில பிரெஞ்சுக்காரர் பெரும்படையோடு உதவிக்கு வந்து சேர, ஆங்கிலேயர் வேலூர் முற்றிக்கையை விட்டுச் சென்னை மீளவேண்டியதாயிற்று. ஒரு காசுமே நவாபுக்குக் கொடாது, முர்த்தஸா அலி தப்பிக் கொண்டார்.

## II. தெற்குச் சீமையை வாழ்வித்தல்.

அமில்தார், பூஜ்தார், என்னும் இருபெரும் அதிகாரங்களையும் தானே தாங்கி நாட்டையாள முயன்ற மாபுஸ்கான், பாளையக்காரர்களை யடக்கவோ, கப்பப் பாக்கிகளை வசூலிக்கவோ, தன் கீழுள்ள படைகளின் சம்பளத்துக்கு வேண்டிய பணத்தையேனும் திரட்டவோ, ஒன்றும் முடியவில்லை. தமக்கு நவாபு முகம்மதலி கொடுத்தற் குரிய கடனில் ஒரு காசும் அடைபடாமையைக் கண்ட கம்பெனியார், மதுரை திருநெல்வேலிச் சீமைகளை நவாபிடமிருந்து மூன்றாண்டுகளுக்குத் தாமே குத்தகையாகக்கொண்டு, தம் பிரதிநிதியை அனுப்பி, அந்நாடுகளை அடக்கி யாண்டு வரிவசூலித்து, படைகளின் பராமரிப்புச் செலவுபோக மீந்த பணத்தில் ஒரு பாதியை நவாபுக்குக் கொடுத்து விட்டு, மறு பாதியைத் தமக்கு வரவேண்டிய கடனுக்கு

வரவுவைத்துக் கொள்வதாக, நவாபு முகம்மதலியோடு உடம்படிக்கை செய்து முடித்தனர். இவ் வேற்பாட்டின்படி கான்சாயபு கம்மந்தானை, அச்சீமைகளை வாழ்வித்து ஆளும்படி யனுப்பக் கம்பெனியார் தீர்மானித்தனர். இராணுவ அமுலிலும், இராஜ்ய பரிபாலனம் நிறைவேறல் முதலிய அம்சங்களிலும், அவருக்குச் சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டது. திருநெல்வேலி சீமையின் குத்தகையை மட்டும், படைகளின் பராமரிப்புச் செலவுபோக 12 லக்ஷமென்று தளவாய்தீத்தாராப்பமுதலியாரிடம்ஒப்படைத்து, படைகளின் சம்பளத்தையும் குத்தகைப் பணத்தையும் கம்மந்தானிடத்தில் செலுத்திவிடும்படி ஏற்படுத்தினர். செலவுபோக மீந்த பணத்தை, திருசிராப்பள்ளியிலே கம்பெனியாரின் பிரதிநிதியாயிருந்த காப்தன் கைலாடுக்கு அனுப்பி, பொதுவாய் அவர் மேற் பார்வையில் கம்மந்தான் வேலை பார்க்க நியமித்தனர். இவ்வண்ணமாக மதுரை திருநெல்வேலிச் சீமைகளின் அதிகாரியான கான்சாயபு கம்மந்தான், 1756ஸ்ரு மார்ச்சு மாதம் 26-ந் தேதி, படைகள் பரிவாரங்களுடன் திருச்சிராப்பள்ளி விட்டுப் புறப்பட்டு, ஏப்பிரில் 6-ம் தேதி யன்று மதுரை நகரத்தை யடைந்தார். சுதேசப் படைகள் தவிர, ஐரோப்பியப் படைவீரர்களும் இராணுவ வைத்தியர் முதலிய உத்தியோகஸ்தர்களும் அவர் கீழிருந்தனர்.

முதலில் இவ் வேற்பாட்டுக்குச் சம்மதித்த நவாபு முகம்மதலி, இதற்குள் மனம் மாறிவிட்டார். கம்மந்தானும் முகம்மதலியும், சத்தியம் வீரம் ஊக்கம் கபடமின்மை மானவுணர்ச்சி நியாயவுணர்ச்சி ஔதாரியம் முதலிய பல குணங்களிலும் நேர்விரோதிகள் என்னலாம்.

கம்மந்தானிடத்தில் நவாபுக்கு அச்சமும் அசூயையும் அதிகம்; கம்மந்தான் முகம்மதலியை அவமதித்து வெறுத்தார். இதுவுமன்றி, தன்னினும் இழிகுண முள்ள உதவாக்கட்டையான தன தமயன் மாபுஸ்கா னிடத்தில், முகம்மதலிக்குச் சகோதர வாஞ்சையும் விசுவாசமும் என்று முண்டு. இவ்விரு காரணங்களினால், கம்மந்தான் தென்னாட்டதிபதியாய்ச் செல்வதை நவாபு தடுக்க முயன்றாராயினும், கம்பெனியார் அதற் கிணங்க வில்லை.

1756-ம் ஆண்டில் கம்மந்தான் தெற்கு நோக்கிச் சென்றது முதல், 1758-ல் பிரெஞ்சுக்காரர் சென்னைக் கோட்டையையே சூழ்ந்து கொண்டபோது ஆங்கிலேய கம்பெனியாருக்கு உதவிசெய்து அவர்களை விடுதலை செய்யுமாறு சென்னையை நோக்கி அவர் திரும்பி வந்தது வரை, ஈராண்டுகளில் நிகழ்ந்த விஷயங்களையும், அவர் புரிந்த போர்களையும் விரித்துக் கூறின் இடம் பெருகுவது மன்றி, மனத்தையும் குழப்பச் செய்யும். அக்காலத்தில் அவர் அடைந்த வெற்றிகளுக்கும், நிகழ்த்திய வீரப் பிரதாபச் செயல்களுக்கும் அவரே காரணமென்றும்; அவருற்ற அபஜயங்களுக்கும், நிறைவேற்ற முடியாமற் போன வினைக்குறைகளுக்கும், நவாபு முகம்மதலியும், அவர் தமயன் மாபுஸ்கானும், நாட்டிலே ஒழுங்கும் நியாயமும் நடைபெறுவதால் விளையும் நன்மையைவிட அக்கிரமங்கள் அநியாயங்கள் சூறைகள் முதலியன நடைபெறுவதால் அதிக லாபத்தை அடையலாமென்று எதிர்பார்த்த சில பாளையக்காரர்களும், பிறரும், கம்மந்தானது கண்டிப்பான நியாய முறையை அஞ்சி வெறுத்து அவர்மீது அன்னார் குறைகூறிப் பொய்ப்பழி சாத்தியதால் அப்போ

தைக் கப்போது ஆங்கிலேய கம்பெனியார் அவர்மீது கொண்ட அவநம்பிக்கையுமே காரணங்களென்றும், சுருக்கிக் கூறுதல் பொருந்தும்; ஆகையால், அந்த விருத்தாந்தங்களிலே அதிக ருசிகரமான இரண்டொன்றை மாத்திரம் ஈண்டெடுத்துரைப்பாம்.

மூவாயிரம் படை வீரர்களுடன் எதிரிகள் மதுரைக் கோட்டைக்குள் இருந்தனர். கோட்டையைத் தாக்கித் தகர்த்துப் பிடித்தற்கு வேண்டிய பீரங்கிகள் இல்லாமையால், தந்திரத்தாற் கைப்பற்ற நினைந்து, கோட்டையின் காவல் மதிலிற் பலக் குறைவான ஓரிடமிருப்பதையறிந்து, இருட்டிலே சென்று தாக்கி, அதன் வழியே கோட்டைக்குட் செல்லலாமென்று தீர்மானித்துக் கொண்டு, கம்மந்தானும் கைலாடென்னும் ஆங்கிலேய தளகர்த்தரும், தெரிந்தெடுத்த சில வீரர்களுடன், இரவிலே பதுங்கிப் பதுங்கி அரவமின்றிச் சென்று, கோட்டையை அணுகினர். இவர்கள் சூழ்ச்சி பலிக்கும் தறுவாயில், படைகளுடன் வந்த ஒருநாய் திடீரெனக் குரைத்ததனால், கோட்டைக் காவலிலிருந்த எதிரிகள் இவர்கள் வருதலை அறிந்து கொண்டு, மற்றப் படைகளை எழுப்பிவிப் பீரங்கிகளால் இவர்களைச் சுட்டு வெருட்டிவிட, கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போயிற்று. அப்பால் கம்மந்தானையும் ரம்போல்ட் என்ற தளகர்த்தரையும் சில படைகளுடன் கோட்டையை முற்றிக்கை செய்ய விட்டுவிட்டு, கைலாடு திருச்சிராப்பள்ளி போய்விட்டார்.

மதுரைக் கோட்டைக்குள்ளிருந்த எதிரிகள், வெளியே முற்றிச் சூழ்ந்து நின்ற படைகளுக்குத் துணையாகத் திருச்சிராப்பள்ளியி லிருந்து பீரங்கியும் பாளையங்கோட்

டையி லிருந்து படைவீரரும் சீக்கிரம் வரப்போவதை யறிந்து, அதற்குமுன் தாமே வெளிப்போந்து படைகளைத் தாக்கி அழித்து விடத் தீர்மானித்தனர். இதை யறிந்த ரம்போல்ட், வைகைத் துறையைக் காக்கச் சில படைவீரருடன் கம்மந்தானை அனுப்பிவிட்டு, தன் படை வீட்டை எதிரிகள் நெருங்காவாறு நீரினால் சூழ்ந்துகொண்டார். 1757-ம் வருஷம் ஜூன் மாதம் 9-ம் தேதியன்று காலை, எதிரிகள் போரைநாடி வெளிப்பட்டு, ரம்போல்டின் பாசறை எளிதில் அணுகமுடியாத வண்ணம் வெள்ளத்தால் சூழப்பட் டிருப்பதைக் கண்டு, கம்மந்தானைத் தாக்கினர். எதிரிகளின் குண்டுச் சத்தம் கேட்ட நிமிஷமே, கம்மந்தானோ டிருந்த படைவீரர்கள் திகிலுற்று நாலாபக்கமும் புறங்காட்டி யோடிவிட்டனர். அதுவரை அவ்வாறு நிகழ்ந்ததே யில்லை யாதலால், கம்மந்தான் தம்மை வெகு கண்டிப்போடு நடத்தியதன் பொருட்டு, வேண்டுமென்றே அவரைத் தனிவிட்டு அவர்கள் ஓடிவிட்டன ரென்று சரித்திரக்காரர் ஒருவர் எழுதியிருக்கிறார். ஓடாது கம்மாந்தானுக்கு துணைநின்றவர் மொத்தம் பத்தாட்களே; தாக்கிய எதிரிகளோ, மிகச் சிறந்த வீரர்கள் நானூற்றுவருக்கு மேலாம். அங்ஙன மிருந்தும், கம்மந்தான் ஒரு சிறிதும் மனந்தளராது, பின் வாங்காது, பக்கத்திலிருந்த ஒரு சத்திரத்தில் காவல்கொண்டு, பத்தே துணைவருடன், நானூறு வீரர்களை எதிர்த்துப் போர் செய்துகொண் டிருந்தார். எதிரிகளால் அவரை அசைக்கவோ, சிறைப் பிடிக்கவோ, கொல்லவோ, புறங்காட்டி யோடும்படி துரத்தவோ, ஒன்றுமே முடியவில்லை. அதை யறிந்த ரம்போல்ட், தன் படைகளுடன் வந்து உதவி

செய்து எதிரிகளை விரட்டும்வரை, இவ்வதிசயப் போர் நிகழ்ந்தது. இத்தகைய வீரசிகாமணியான கம்மந்தானை, ஆங்கிலேய தளகர்த்தர்கள் வாயார மனதாரப் புகழ்ந்திருப்பது ஆச்சரிய மன்றே.

கம்மந்தானது பெருந்தன்மையையும் நியாயவுணர்ச்சியையும் விளக்கும் மற்றொரு நிகழ்ச்சியையும் உரைப்போம். பர்க்கதுல்லா என்பவர் மதுரையைக் கைக்கொண்டு சிலநாள் ஆண்டுவந்த காலத்தில், ஒரு முகம்மதியப் பக்கிரி, தன் குடையை மீனாக்ஷியம்மன கோயில் வாயிலில் நாட்டி, அங்கே ஒரு மசூதி கட்டத்தொடங்கினான். கோயிலாரும் ஊராரும் பர்க்கதுல்லாவிடம் எவ்வளவோ முறையிட்டும், பயன்பட வில்லை. இதுவுமன்றி, பர்க்கதுல்லா, கோயிலின் மானிப வரும்படி அனைத்தையும் தன் சொந்தச் செலவுக்கு அபகரித்துக் கொண்டுவிட்டார். அவர் அதிகாரம் நீங்கிக் கம்மந்தான் மதுரையைக் கைக்கொண்ட காலத்தில, பக்கிரியையும் அவன் குடையையும் கோயிலுக்கு வெளியே தள்ளினது மன்றி, கோயில சொத்துக்களை யெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

கம்மந்தானது வீரமும் நியாயமும் யோக்கியதையும் இவ்வாறாக, அவருடைய முக்கிய விரோதியும நவாபு முகம்மதலியின் தமயனுமான மாபுஸ்கானது வஞ்சகத்தை விளக்கும் ஒரு நிகழ்ச்சியையும், இங்கே கூறுதல் இசையும். ரம்போல்டும் கம்மந்தானும் மதுரைக் கோட்டையை முற்றிக்கொண் டிருக்கையில், மாபுஸ்கான், கேள்வி முறையின்றித் திருநெல்வேலிச் சீமையைச் சூறையாடிக் கொண்டும், மலையாளத்தரசரின் உதவியை நாடிக்கொண்டுமிருந்தார். அவர் இஷ்டப்படி நடப்பதற்குப் பாளையங்



8

கோட்டையிலிருந்த பட்டாளம் ஒன்றே தடையாயிற்று. அக் கோட்டையைப் பிடிக்க அவரால் முடியாமையால், நயவஞ்சனையால் அதைக் கைப்பற்ற வெண்ணி, தான் சமாதானத்தை விரும்புவதாக ரம்போல்டுக்குச் செய்தி யனுப்பினர். ரம்போல்டு, 50 போர்வீரரோடும், சமாதானம் பேசி முடிக்கும் அதிகாரத்தோடும், இராம நாயக்கர் என்ற தளகர்த்தரை மாபுஸ்கானிடம் தூதனுப்பினர். இராம நாயக்கர் தன்னை அணுகியவுடன், மாபுஸ்கான், தன் குதிரைப் படைகளால் திடீரென அவரைச் சூழ்ந்து கொண்டு, 'பாளையங்கோட்டையை எனக்கு விட்டுவிடும்படி அக்கோட்டை யதிகாரிக்கு ஓர் உத்திரவு எழுதி யனுப்பும்' என்று, அவரை நிர்ப்பந்தித்தார். "செத்தாலும் சரி, அப்படி நான் துரோகஞ் செய்ய மாட்டேன்" என்று கூறிவிட்டு, இராமநாயக்கர், தன்னுடன் வந்த ஐம்பது படையாட்களையும் அணிவகுத்து நின்றார். உடனே, மாபுஸ்கான், தன் குதிரைப் படைகளை அவரைத் தாக்கும்படி ஏவினார். ஆனால், யஜமானனைவிட யோக்கியனான ஒரு வேலைக்காரன், அலி சாயபு என்பவன், " தூதராக நீரே இராமநாயக்கரை வரவழைத்து விட்டு இப்படித் துரோகஞ் செய்யலாமா? இது மானக்கேடான காரியம். இதற்கு யோக்கியன் எவனும் உடம்பட மாட்டான்" என்று சொல்லிவிட்டு, தன் குதிரைவீரர்களுடன் தானே இராம நாயக்கருக்குத் துணை நின்று, அவரையும் அவர் பரிவாரத்தையும் சேமமாய்ப் பாளையங்கோட்டைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தான். இத்தனை யோக்கியர் மாபுஸ்கான்!

திருச்சிராப்பள்ளியி லிருந்து வந்த பீரங்கியைக்

கொண்டு தகர்த்துப் பார்த்தும் மதுரைக் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. அப்பால், கைலாடு, ஐரோப்பியப் படைகளுடன் திருச்சிராப்பள்ளியி லிருந்து திரும்பிவந்து கம்மந்தான் படைகளுடன் கலந்துகொண்டு, நாய் குலைத்துக் கெடுத்தபோது சென்றதுபோலவே மீண்டும் பதுங்கிச் சென்று கோட்டையை யணுகிப் பிடிக்க முயன்றார். அவரே பலத்த காயமும் அமிதமான ஆட்சேதமும் உற்றதன்றி, காரியம் கைகூடவில்லை. அப்பால் தன் காயங்களை யாற்றிக்கொள்ளுமாறு, அவர், திருவாதூர் சென்றுவிட, எஞ்சிய படைகளைக் கொண்டு கம்மந்தானை மதுரைக் கோட்டையை நெருக்கிச் சூழ்ந்து முற்றலானார். அச் காலத்தில் சென்னைக் கவர்னராயிருந்த பிகட என்பவர், கம்மந்தானுக்குப் பின்வருமாறு இதைப்பற்றி எழுதியிருக்கிறார்:—

பாளையக்காரர் தண்டுகளையும் மறறப் படைகளைபுங்கொண்டு மதுரைக்கோட்டையை நீர் நெருங்கி வளைந்து முற்றிக்கை செய்து வருவதைத் தெரிவிக்கும் உம் கடிதம் வரப் பெற்றேன். உம்முடைய ஊக்கத்தையும் வீரத்தையும் புகழ்ந்து காப்தன் கைலாடும் எழுதி யிருப்பதைக் கண்டு, மிக்க சந்தோஷமடைந்தேன். கம்பெனியாருக்கு நீர் நம்பிக்கையான உத்தியோகஸ்தர்; உம் விஷயத்தில் என் சிநேகத்தை உறுதியாய்க் கொள்ளும்.”

எதிரிகள் எதிர்பார்த்தவாறு வெளியுதவி வராமையாலும், கம்மந்தான் செய்த நிர்ப்பந்தத்தினாலும், அவர்கள் சமாதானத்துக் கொருப்பட்டு, செப்டம்பர் 8-ம் தேதி யன்று மதுரை கைக்குவரவே, இனித் தெற்குச் சீமைகளைச் சீர்ப்படுத்தி யாளுவதைப்பற்றி யோசிக்க

லாயினர். ஆர்ம், கைலாடு, முதலிய ஆங்கிலேய தளகர்த்தர்கள், கம்மந்தான் ஒருவர்தான் நாட்டை யடக்கி யாண்டு பணம் வசூலிக்க வல்லவ ரென்றும், குத்தகைப் பணம் எவ்வளவு சொற்பமாயினும் அவரிடமே நாட்டை ஒப்படைத்துவிட வேண்டு மென்றும், வற்புறுத்திக் கவர்னருக் கெழுதினர். குத்தகைத் தொகை நிச்சயப்படும் வரை கம்மந்தானே நாட்டை யாண்டுவருவ தென்றும், முன் குத்தகைதாரரான தளவாய்முதலியார் சென்னைக்கு நேரிற் சென்று கணக்குக்கொடுப்ப தென்றும், கவர்னா உத்திரவு செய்ய, அவ்வண்ணம் கம்மந்தான சில மாதகாலம் தென்னாடுகளின் பரிபாலனத்தைக கைக்கொண்டார்.

நவாபு முகமமதலி, தனக்கு மைசூரார் செய்த உதவிக்குப் பதிலாகத் திருச்சிராப்பள்ளிக் கோட்டையை அவர்களுக்கு விட்டுவிடுவதாக வாககுக்கொடுத்தபடி நிறைவேறறாமையால, மைசூ ஹைதரலி படையெடுத்து வநது, தொநதரைசெய்யலானார். ஹைதரலி நத்தம் கணவாயில பாசறைகொண்டு நாட்டைச் சூறையாடுகையில், கம்மநதான் சென்று அவரைத் தாக்கிப் பொருது செயித்துத திண்டுக்கலுக்கு மீளும்படி வெருட்டினார்

அபபால கமமநதான திருநெலவேலிச் சீமை சென்று, அந்தப் பிரதேசததிலே அழிமபுகள் செய்துகொண்டிருந்த மாபுஸ்கானை வென்றொடுக்கினார். இக்காலத்தில் தான, உமார்தீன் சிங் என்ற குதிரைப்படை ஜமேதார், பர்க்கதுல்லாவின கட்சியைச் சேர்ந்தவன், கம்மந்தானை வஞ்சிததுக் கொலைசெய்ய முயன்று, தன் கூட்டாளிகளோடு உயிரை யிழநதான்.

தெற்குச் சீமையையும், ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பக்க

முள்ள பாளையப்பட்டுக் களையும் ஒழுங்குபடுத்தி, ஹை தரலி இடித்துவிட்ட சோழன்வந்தான் கோட்டையை மீண் டும் கட்டிப் பலப்படுத்திய பின்னர், கம்மந்தான் மதுரை நகரம் திரும்பி, பர்க்கதுல்லாவின் அதிகாரத்திலே நிகழ் ந்த அக்கிரமங்களை யெல்லாம் நீக்கி, முறைசெய்தார். மேலே கூறியவாறு, மதுரைக் கோயிலிற்குள் கூடாரமடித் திருந்த பக்கிரியை அப்புறப்படுத்தி, பர்க்கதுல்லா அப கரித்த கோயிற் சொத்துக்களைத் திருப்பிக்கொடுத்தது, இக்காலத்தில்தான். இதற்குள், பிரெஞ்சு வீரரான லாலி என்பவர், ஆங்கிலேயரை வெல்லுதற்கென்றே ஒரு பெருஞ் சைநியத்துடன் பிரான்ஸிலிருந்து புறப்பட்டு வந்திறங்கி, கூடலூர், டேவிட் கோட்டை முதலிய இடங்களைப்பிடித் துக்கொண்டு, ஆங்கிலேயரின் தலைநகரான சென்னையை முற்றிக்கை செய்யப் பிரயத்தனித்ததால், தன் படைக ளுடன் உடனே புறப்பட்டு வடக்கே வந்து சென்னையைக் காக்கும்படி, கம்மந்தான் அழைக்கப்பட்டார்.

அவ்வண்ணமே 200 சிப்பாய்களுடன் சென்ற கம் மந்தான், 1758௵ ஜூன் 16உ திருச்சிராப்பள்ளியை அடைந்தார். ஸ்மித் என்ற தளகர்த்தருடன் அங்கிருந்து புறப்பட்டு, பிரெஞ்சுக்காரர் துணைவரான துறையூர் ரெட்டி யாரை எதிர்த்துச்செய்த சண்டையில், கம்மந்தானுக்குக் கையில் காயம்பட்டது. வாழ்நாளெல்லாம் போர்க்களங் களிலேயே பெரும்பாலும் கழித்த கம்மந்தான் காயமுற் றது, இந்த ஒருமுறை தான்; அவர் தேகத்திற்குள் மறைத் துப் பொதிந்து வைத்திருந்த ஓர் இரக்ஷையின் சக்தியி னால், அவரைக் காயப்படுத்த முடியாதென்பது, படை வீரர்களுக்குள் பொது நம்பிக்கை. துறையூரை விட்டு விட்

டால் பதினாயிரம் வராகன் கைக்கூலி தருகிறேனென்று ரெட்டியார் எவ்வளவோ மன்றாடிக்கேட்டும், கம்மந்தான் அதற்கு இணங்கிலர்.

## III. சென்னை முற்றிக்கை - கலியாணம் - கவர்னர்.

சென்னைப் பக்கம் சென்றடையும் வழியிலே கோட்டைகளையும் ஊர்களையும் பிடித்தும், புதுச்சேரியைச் சூழ்ந்துள்ள பிராஞ்சியர் பிரதேசங்களைச் சூறையாடி அழித்தும், கம்மந்தான இயற்றிய வீரச் செயல்களால், லாலியுமே மனங்கலங்கி விட்டார். அப்பால் சென்னையை அணுகிக் கோட்டைக்குப் புறம்பேயுள்ள ஆங்கிலப்படைகளுடன் சேர்ந்துகொண்டு, கோட்டையை முற்றிக்கை செய்துகொண்டிருந்த லாலியின் படைகளை அடிக்கடி தாக்கிப் பொருதும; அப் படைகளுக்காக வந்த உணவுப் பொருள்களையும் ஆடுமாடுகளையும் பிற பண்டங்களையும் வழி மறித்துப் பறிமுதல கொண்டும்; ஒரு கணமேனும் ஓய்வொழிவின்றி எதிரிகளைத் தொந்தரைசெய்தும்; இடையிடையே, ஆறுகாடுவரை சென்று, பல விடங்களைக் கைக்கொண்டு, எதிரிகளின கூட்டாளிகளை வெருட்டி, அவர் பலத்தைக் குறைத்தும், கம்மந்தான் செய்த சிறு போர்களாலும் இமிசைகளாலும் முற்றிக்கையை மேல் நடத்தி நிறைவேற்ற மாட்டாதவராய், லாலி தோற்றுப் போய் மீளவேண்டியதாயிற்று.

இத்தகைய போரில் நிகழ்ந்த சம்பவங்களில் இரண்டை மாத்திரம் எடுத் துரைப்போம்: முஸாபர்பெக் எனற வீரன், முதற்கண் ஆங்கிலேய கம்பெனியாரின் போர்ச் சேவகத்தி லிருந்தவன், இக்கட்டான தறுவாயில் துரோகஞ்செய்து ஆங்கிலேயர் பக்கத்தை விட்டு நீங்கிப்

பிராஞ்சியர் சேவகம் பூண்டவன், காஞ்சிபுரம் கோட்டையில் எதிரிகள் படையுடனிருந்தான். கம்மந்தான் மதிலேறிக் கோட்டையுட் புகுந்து, எதிரிகளை முறியடித்து, ஊரைக் கைக்கொண்டு, முசாபர் பெக்கை, "துரோகிகளின் கதி இதுவே!" என்று கூறுரைத்துத் தன் கை வாளால் வெட்டி வீழ்த்திஞர்.

வயது முப்பதுக்கு மேலாகியும், கம்மந்தானுக்கு இதுவரை கலியாண மாகவில்லை. இந்த யுத்த காலத்திலே தான், மாசா என்ற கட்டழகியைக் கண்டு காதல்கொண்டு, அவள் இனத்தாரிடம் ஆளனுப்பிப் பரிசம் பேசி, அவளை அவர் மணம்புரிந்து கொண்டார். இது நிகழ்ந்தது ஆறு காட்டிலே என்றும்; மாசா, போர்த்துகேய நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவச்சி என்றும்; புதுச்சேரியைச் சேர்ந்த பறைச்சி என்றும்; பறங்கிக்காரி என்றும், பலபடக் கூறுவர். இம் மணவினை காதலிருவர் கருத்தொத்து முடிந்ததொன்று என்பது மாத்திரம் தேற்றம்.

இவ்வாறு துணைநின்று போர்புரிந்து ஆபத்துக் காலத்திலே தம்மைக் காப்பாற்றியதற்காக, ஆங்கிலேய கம்பெனியார், யுத்தச் செலவுக்கென்று மூன்று லக்ஷ ரூபா கம்மந்தானுக்குக் கொடுத்ததுமன்றி, செவ்வந்திக்கல்லும் வயிரங்களுங் குயிற்றிய ஒரு மோதிரமும், முந்நூறு வராகன் பெறுமான பட்டுக்களும், துப்பாக்கிகளும், தமது நன்றியறிவின் அறிகுறிகளாக அவருக்கு வெகுமானமளித்தனர்.

சென்னைக் கோட்டை முற்றிக்கை நீங்கி எதிரிகள் தோற்றோடிய பின்னர், மாபுஸ்கானும் புலித்தேவனுங் கூடி நாசஞ் செய்துகொண்டிருந்த திருநெல்வேலிச் சீமை

யையும், மதுரைச் சீமையையும், மீண்டும் ஒழுங்கு படுத்தி யாண்டு, நவாபு முகம்மதலியின் கடனை வசூலிப்பதே முக்கிய கவலையாயிற்று. கம்பெனி உத்தியோகஸ்தர் அனைவரும், கம்மந்தான் ஒருவரே அவ் வேலையை நிறை வேற்ற வல்லவர் என்றனர்; முகம்மதலியோ, அவர் நிய மனத்தைத் தடுத்தனர். முடிவில், நாட்டை அடக்கி யாண்டு திறைதண்டுதற்கு வேண்டிய படைகளையும் சிப்பந்திகளையும் தானே அமைத்துக் கொண்டு, சகல செலவுகளும் நீங்கிய கப்பமாக ஆண்டுக்கு ஐந்து லக்ஷம் ரூபா திருசசிராபபள்ளியி லுள்ள கம்பெனியாரின் காரிய ஸ்தரிடம் கம்மந்தான் செலுத்திவிடுகிற தென்றும்; அந்த நிபந்தனையின்படி, மதுரை திருநெல்வேலிச் சீமைகளை ஆண்டுவருகிற தென்றும், நவாபின் கோரிக் கைக்கு விரோதமாகக் கம்பெனியாரிடம் ஒபபுக்கொண்டு, படைகள் பரிவாரங்களுடன் கம்மந்தான் புறப்பட்டு;

மாசாவைக் காடியின் மேலேற்றி-சேனை
மருங்கில் நெருங்கிவரக் குதிரைமேலேறி
ஆசார வாசல்வழி தாண்டி—நல்ல
அழகான சென்னைபுரிக் கோட்டைவெளி தாண்டி
திருச்சிராப் பள்ளிக் கோட்டை தாண்டி—கானு
செயமாக மங்கலம் விராலிமலை தாண்டி
வரிசையா மணப்பாறை கடந்து—தோகை
மலைதாண்டி நம்மன் குறிச்சியி லிறங்கி
துவரங் குறிச்சியது தாண்டி—உயர்
தோகைக் குறிச்சியெனும் நத்தம் வந்து சேர்ந்து
அழகர்மலைக் கொம்பையும் தாண்டி—நல்ல
அழகான தேனூர் மைதானவெளி தாண்டி
கொடிமுரசு தம்பூ ரடிக்க—நல்ல
கோட்டமிடு சதுரங்க பட்டாளம் சூழ

கும்பேனி முரசு வெள்ளைக் காரர்—தளமும்
கூட்டி மதுரா புரியில் ஒயிலாகச் சேர்ந்து,
இப்புவியி யெலாம் செவிபெடவே—பீரங்கி
இருபத்தொரு வேட்டு தீர்த்தார் ''

இவ்வண்ணம் அவர் மதுரை சென்ற மார்க்கத்தைப் பற்றி, ப்ரேற்றன் என்ற ஆங்கிலேய தளகர்த்தர், தான் கூறிய வாறன்றி வேறு மார்க்கமாகத் தன் கட்டளை மீறிச் சென்று ரென்று கம்பெனியாருக்குத் தெரியப்படுத்த, கம்பெனியார் கம்மந்தானை முகாந்தரம் கேட்டனர். அவர் எடுத்துக் காட்டிய முகாந்தரங்களால் கம்பெனியார் திருப்தியுற்று ராயினும், தன் யோக்கியதையை நன்கறிந்த பழைய ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நாளுக்குநாள் குன்றி வருவதையும், ஆங்கிலேயரின் சமுசய குணத்தையும், கம்மந்தான் உணர்ந்து சிந்திக்கலானார்.

தென்னாட்டைச் சீராக்கி ஆள மதுரை செல்லும் வழியில் தானே, கம்மந்தான், கள்ளர் தலைவர் சிலரைக் கண்டுபேசி, வழிப்பறிகளை நிறுத்தி அவர்கள் நியாயப்படி நடக்க வேண்டுமென்றும்; அதில் தவறினால் தன் கோபத்துக்கும் கடுந்தண்டனைக்கும் உள்ளாவ ரென்றும் பயமுறுத்தி எச்சரித்தார். உதாரணமாக:—

'' நத்தத்து லிங்கனை அழைத்து—கானு
நலமாக ஒரு செய்தி திடமாகச் சொல்வான் :
கள்ளர் பயம் இக்காட்டில் மெத்த—என்று
கனமாம் நவாபுதுரை சொன்னாரடா பாவி !
எள்ளளவும் இந்த வழி தனிலே—லிஙகா !
இனிமேலும் பாதையிலே கள்ளர் பயமானால்,
எட்டு நாளையில் கச்சை கட்டி – உன்னை
எலேலே தூக்கிலே போட்டிடுவேன் கள்ளா!
மட்டுள்ள வழிபாதை பதனம் ''

1759-ஆம் மே மாதம் 20-ம் தேதியன்று கம்மந்தான் மதுரையை அடைந்து, நாடெங்கும் ஒழுங்கின்றிக் குழப்பமா யிருப்பதை அறிந்தார். உடனே வம்பர் குறும்பர்களை யெல்லாம் ஒடுக்கி யடக்கி வழிப்படுத்த யத்தனித்து, முதற்கண் நாட்டுக் கள்ளரை எதிர்த்துச் சென்று வேட்டையாடி, யாவர்க்கும் முன் மாதிரியாகும்படி இரண்டொரு கடுந் தண்டனைகளால் அச்சமுறுத்தி, அதுகாறும் அவர்கள் செய்த அழிம்புகளுக்கு அபராதமாக ஆயிரம் மாடுகளையும் ஈராயிரம் ஆடுகளையும் அவர்களிடமிருந்து பறிசெய்து திருசசிராப்பளளிக்கு அனுப்பினர். அப்பால், மேலூர், வேளாளப்பட்டி என்னும் ஊர்களில் கோட்டைகள் கட்டிக் காவல்களை ஏற்படுத்தி, அது முதல் நாட்டுக்கள்ளர்கள் கப்பமிறுக்க வேண்டியதில்லை யென்றும்; ஆயின், வழிப்பறிகள் களவுகள் இன்றிக் காத்து ஜனங்களை எவ்வாற்றானும் தொந்தரை செய்யாமல் ஒழுக வேண்டு மென்றும, நியமித்தார். இக்காலத்திலதான் "கள்ளர் கருவறுத்த வீரன்" என்று கம்மநதான் பொது ஜனங்களால் புகழப் பெற்றது.

மதுரைச் சீமையை இவ்வண்ணம் சீராக்கிய பின்னர், திருநெல்வேலி சென்று, கொல்லங் கொண்டான், கொல்லர் பட்டி முதலிய கோட்டைகளைப் பிடித்து, கட்டப் பொம்ம நாயக்கனையும் புலித்தேவனையும் ஒடுக்கி, மாபுஸ்கான் தன் நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தார். தெற்குக் கோடியிலுள்ள பிரதேசங்களை நிலையாக ஒழுங்கு செய்ய நினைந்து, திருவாங்கூர் அரசருக்குக் களக்காட்டைக் கொடுத்து, அந்தப் பிரதேசத்தைப் பாதுகாத்துத் தனக்கு, எப்பொழுதும் துணைநிற்கும்படி, அவருடன் உடம்

படிக்கைசெய்துகொண்டார். இவ்வாறு திருநெல்வேலிச் சீமையையும் பாளையக்காரர்கள் அனைவரையும் அடக்கியொடுக்கி ஒழுங்குசெய்து, தான் செலுத்தற்குரிய குத்தகைப் பணத்தில் நான்கு லக்ஷம் ரூபாவை இரண்டு தவணையாகத் திருச்சிராப்பள்ளியிலுள்ள கம்பெனியார் காரியஸ்தருக்கு அனுப்பினார்.

தென்னாடுகளின் குத்தகை முதலில் ஓராண்டுக்கே கம்மந்தானுக்குக் கொடுக்கப்பட்டது; பிறகு அடுத்த வருஷத்துக்கும அவரே குததகையைப பெறறார். கம்மந்தானது போர் வீரத்தையும திறமையையும் புகழ்வது மிகையாகும். நாட்டை ஒழுங்குபடுத்தி வாழ்வித்துத் தன் அதிகாரத்துக் குள்ளாக்கிய பின்னர், அவர் இராஜ்யபரிபாலனஞ் செய்த முறையைச் சுருக்கிக கூறுதல பொருத்தமாகும்.

சந்தா சாயபு, பர்க்கதுலலா முதலியோர் காலங்களில் அவர்களால் அபகரிக்கப்பட்ட கோயில மானியங்களையும் சொத்துக்களையும் கம்மந்தான் திருபபிக் கொடுத்து, கோயிறபணிகள் செவ்வனே நடைபெறுமபடி செய்தாரென்று முன்னமே கூறினோம். மதுரை மீனாக்ஷியம்மனிடத்தில் அவருக்கு பக்தியுண்டென்றும், அம்மன் அவர் சொப்பனங்களில் வந்து தோன்றி அருள்செய்வதுண்டென்றும், புதைந்து கிடந்த ஒரு பெருநிதியை அம்மன் அருளினால் அவர் அடைந்தாரெனறும், அதைக் கொண்டே தனக்கோர் அரமனை கட்டினரென்றும் கதைகளுண்டு. வேளாளராய்ப் பிறந்து முஸ்லீமான அவர் மீது பிராமணரும் ஹிந்துக்கள் பிறரும் குறைகூறுதற்கிடமின்றி நியாயமாய் நடந்துகொண்டது மன்றி;

தேவஸ்தானச் செலவுகளுக்குப் போதிய அளவு திட்டமான மோகினிப்பணத்தை ஸர்க்காரிலிருந்து கொடுத்து, அர்ச்சகர்கள் அநுபவித்துவந்த மானியங்களை ஸர்க்கார் பாராமரிக்கும்படி, அவர் நியமித்தார்

ஏழைகளான நாட்டுக்கள்ளர்கள் வரியிறுக்க வேண்டியதில்லை யென்றும், ஊர்க்காவல் வழிக்காவல்களைச் செய்தாற் போது மென்றும் பணித்தது போலவே, ஆங்காங்குள்ள மற்றக்குடிகளுக் கெல்லாம், அவரவர் பயிரிடும் நிலபலன்களுக் கேற்றவாறு நிதானமான வரிகளையே விதித்தார். இவ்வாறு அவர் செய்த ஒப்பந்த நிபந்தனைகளை, ஓர் இம்மியும் வழுவாது தான் அநுசரித்தது போல, தத்தம் கடமைகளின்படி குடிகளும் ஒழுகும்படி செய்தார் கர்னல் புல்லற்றன் என்பவர், கம்மந்தானின் அரசியல் முறைகளைபபற்றி எழுதுவதாவது:-

"இந்நாடுகளை அவர் ஆண்டபோது, அவா ஆட்சி வெகு திடமாயும் நன்ருயும் நிகழ்ந்தது: அவா செஙகோல் ஒரு சிறிதுங் கோணின தில்லை; அவர் சொன்ன சொல் மாறின தில்லை. கால தேசஙகளுக்குப் பொருந்த நற்பயன் விளையும்படி இராஜ்ய முறைகளை ஆலோசித்து எற்படுத்தி, கண்டிப்பாய் நிறைவேற்றினர்; அவர் ஆட்சியில் குற்றஞ்செய்தவர்கள் தண்டனையின்றித் தப்ப முடியாது. ஸர்க்கார் தான் குடிகளின் தந்தை என்பதும்; ஸர்க்காருக்கு க்ஷேமலாபங்களை விளைக்கும் உழவர்களும் கைத்தொழிலாளிகளுந்தான் அத் தந்தையின் அருமைப்பிள்ளைகள் என்பதும்; பாளையக்காரர்களும் கள்ளர்களுங்கூட ஸர்க்காரின் மக்களாயினும், உண்மையும் நியாயமும் தவருது அவர்களையும் ரக்ஷிப்பது ஸர்க்காரின் கடமையாயினும், சோம்பித்திரிந்து, தம் முதலையும் பிறர் பொருளையும் பாழாக்கும் அப்படிப்பட்ட மக்கள் ஸர்க்காரின் தயவு தாக்ஷிணியங்களுக்கு அருகரல்ல ரென்பதும், அவர் கொள்கைகள். 'பாடுபட்டுழைக்கும் அயலார் சொத்தைக்

கொள்ளையடிப்பதை விட்டுவிட்டு, அவர்களும் தத்தமக் குரிய நிலங்களைத் தாமே பயிரிட்டுப் பாடுபடட்டும்: அப்படிச்செய்தால், அவர்களையும் பேணிப் போற்றுவேன்; அப்படிக் கில்லாமல் அவர்கள் சோம்பேறிகளாய்த்திரிந்து, நாட்டை நாசமாக்குவதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கும்வரை, எட்டி பிடித்த ஒவ்வொரு மறவனையும், தலைச்சாத் தணிந்த ஒவ்வொரு பாளையக்காரனையும், பொது நல விரோதியாகவே நான் மதித்து நடத்துவேன்' என்று, அவர் கூறுவதுண்டு. அவர் ஆட்சியில் நாடிருந்த நிலைமையையும், அவர் நடத்தையையும் கூற்றுக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபின், எந்தப் பிரதேசத்திலும், எந்தச் சாதியிலும் விவேகமும் ஆண்மையும் யோக்கியதையும் ஒருங்கு சிறந்து விளங்கியவர், அவரினும் மேலானவர் மற்றெவருமே இல்லை என்பது தெளிவாயிற்று.''

சென்னைக் கவர்னருக்குக் கம்மந்தான் எழுதிய கடிதமொன்றில், "கள்ளர்கள் மனிதரல்லர்; பிசாசுகளே" என்று, அவர் எழுதியிருக்கிறார்; ஆயினும், அக் கள்ளர்கள் அவரிடத்தில் அளவற்ற பக்தியும் விசுவாசமுமுள்ளவரா யிருந்தனர். ஏழை உழவர்களுக்குப் பணம் கொடுத்தும்; கால்வாய் குளங்கரைகளைப் பழுதின்றிச் செப்பனிட்டுக் காப்பாற்றியும்; மதுரைச சாலியர்களுக்கு வேண்டியவாறு முன்பண முதவியும்; இராணுவ விஷயத்தில், வெடிமருந்து துப்பாக்கி பீரங்கிகள் செய்யும்படி, கைவல்ல கம்மியரைப பழக்கியும்; உள்நாட்டு வர்த்தகம் செழித்தோங்கும்படி, வழிப்பாதைகளைப் பாதுகாத்ததுமன்றி, பிரயாணிகளின் சௌகரியத்துக்காகச் சத்திரம் சாவடிகளைக் கட்டி, அவற்றுக்கு வேண்டிய நிதிகளை ஏற்படுத்தியும், அவர் நாட்டைப் பேணிப் போஷித்தார். போர்க் குழப்பங்களின் மத்தியிலும், அவர் நாளிலே களவு கொள்ளைகள் நடவா; பாளையக்காரர் தத்தம் கப்பங்களைத்

தவணைப்படி செலுத்தத் தவறுர். அவர் காலத்து ஜமா பந்தி ஓராண்டிலே ரூ. 31,11, 325 ஆயிற்றென்றால், நாட்டின் வளமையைப்பற்றி வேறு கூறவேண்டா; அதே நாட்டின் ஜமாபந்தி, சில வாண்டுகளுக்குப் பின்னர், நவாபு முகமமதலியின் பரிபாலனத்திலே, ரூ. 18,47,587 தான் ஆயிற்றெனின், நவாபின் திறமையைப் பற்றி வேறு கூறவும் வேண்டுமோ? கம்மந்தானுக்குப் பின் நவாபு முகம்மதலி நாட்டை யாண்ட காலத்திலே, குடிகளையும் பாளையக்காரர்களையும் அவர் பலவகையில் இம்சித்ததையும்; இறுக்க முடியாத வரிகளை விதித்துப் பலவாண்டு சிறைகளில அடைத்து வைத்ததையும், நாட்டின் சீர்கேட்டையும் பற்றி லெஷிங்டன என்பவர் எழுதியிருப்பதை வாசித்தால், கம்மந்தானுக்கும் முகம்மதலிக்குமுள்ள வேற்றுமை ஒருவாறு விளங்கும்

1761-ம் ஆண்டிலே, ஆங்கிலேய கம்பெனியாரின் கவர்னர் பிகட் என்பவர், நாட்டுக்குரியவர் நவாபானதால், அவர் கொடியையே மதுரை பாளையங்கோட்டையிலுள்ள கோட்டைகளில் நாட்டி, அவருக்கே சபயப் பணத்தை அனுப்பும்படி, கமமந்தானுக்கு ஒரு கடித மனுப்பினாாயினும், அக் கடிதம், முகம்மதலியின கண்ணைத் துடைப்பதற் கன்றி மறறில்லை; கமபெனியார் கொடியையே பறக்கவிட்டு, கம்பெனியாரின் காரியஸ்தருக்கே பணமனுப்பும்படி, வேறுத்தரவு இரகசியமாய் அனுப்பப் பட்டது.

1762-ம் ஆண்டிலே கம்மந்தானுக்கு ஒரு மகன் பிறந்தான். அப்போது, இராமநாதபுரம் சேதுபதி உதயத் தேவரின் பிரதானியான தாண்டவராயப் பிள்ளை, குழந்தை

க்கு ஒரு தங்கத்தொட்டில் அனுப்ப, கம்மந்தான் பதில் மரியாதையாக, அவருக்குச் சாக்குடி என்னும் ஊரை மானிய மளித்தார்; தாண்டவராயப்பிள்ளை, தனக்குக் கிடைத்த மானியத்தை மீனாக்ஷியம்மன் கோயிலுக்குக் கொடுத்துவிட்டார்.

1762-ம் ஆண்டிலே, கம்மந்தான் செலுத்தும் குத்தகைப் பணம் ஒன்பது லக்ஷம் ரூபா ஆக்கப்பட்டது. அதன்படி, கம்மந்தான் நான்கு லக்ஷம் ரூபா முதல் தவணையாக, திருச்சிராப்பள்ளியிலுள்ள ப்யூட்டை என்ற கம்பெனிச் சம்பிரதிக் கனுப்பினார். இதற்குள் கம்பெனியாரின் மனம் மாறிவிட்டது: முகம்மதலியே நாட்டுக் குரியவராயினும், அவர் கம்பெனியாரின் கடனாளியாயும் தஞ்சமாயு மிருந்தார்; அவர் அபிப்பிராயத்தைக் கவனியாமலே, மதியாமலே, கம்மந்தானைத் தென்னாட்டுக் கவர்னராகக் கம்பெனியார் நியமித்திருந்தனர். கம்மந்தானையன்றி மற்றெவராலும் நாட்டை வாழ்வித்துச் சீர்படுத்தி நிறைதண்டியிருக்க முடியாதென்பது திண்ணம்; கம்பெனியார் தயவிலின்றி, நவாப் முகம்மதலியின் உத்தியோகஸ்தராகிச் சென்று வேலை பார்க்கக் கம்மந்தான் ஒரு நாளும் சம்மதித்திருக்க மாட்டாரென்பதும் நிச்சயம். இப்பொழுது அரும்பாடுபட்டு நாட்டை யடக்கி யொடுக்கிப் பயன்கொள்ளுந் தருணத்திலே, கம்பெனியார், "மதுரை திருநெல்வேலிச் சீமைகள் நம்மாலன்றி நவாபினால் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறபடியால், குத்தகைப் பணங்களை நவாபினிடத்திலே செலுத்தவேண்டும்" என்று, கம்மந்தானுக்கு உத்தர வனுப்பினர். முகம்மதலிக்கும் கம்மந்தானுக்குமோ, ஜன்ம விரோதம்; அவர் கீழ் இவர்

ஒரு கணமேனும் சேவிப்பது அசாத்தியமாயிருந்தது. இவ்வாறு தன்னைத் தன் எதிரி கையில் ஒப்படைத்து, நட்டாற்றிற் கைவிட்டாற்போல, கம்பெனியார் மோசஞ் செய்து விடுவார்களென்று, கம்மந்தான் கனவிலும் கருதினதில்லை. நவாபு முகம்மதலியின் தந்தை அனவருடிகான் என்பவர், தன்னைப்போலவே ஒரு சாதாரண குடும்பத்திற் பிறந்தவர்தான் என்பதும்; ஒரு சாமானியப் படைவீரனான ஹைதரலி, தன் கண்காண மைசூராதிபதியானதும்; தமக்கு நவாபிடமிருந்து வரவேண்டிய கடனை மீட்பதன்றி, நாட்டுரிமை விஷயத்தில் தலையிடும் பாத்தியதை ஆங்கிலேய கம்பெனியாருக்கில்லை யென்பதும்; ஆங்கிலேயரின் உதவியின்றி, முகம்மதலியால் மாத்திரம் தன்னை வெல்லமுடியாதென்பதும்; தன்னைக் கைவிட்ட ஆங்கிலேயர் நவாபுக்குத் துணைநிற்பின், தான் பிராஞ்சியரின் உதவியை நாடியடையலாமென்பதும்; திருவாங்கூர் தஞ்சாவூர் அரசர்களும். பாளையக்காரர்களிற் பலரும், கள்ளர்களும், தன் கட்சியிலிருப்பர் என்பதும், கம்மந்தானுக்கு நன்கு தெரியும். அன்றியும், இவ்வாறு தான் எண்ணித் துணிந்த கருமத்திலே செயித்தால் சிம்மாசனம், தோற்றால் தூக்குமரம் என்பதையும், அவர் அறிந்திருப்பர். அவருக்கு நேர்ந்த இக்கட்டிலே, அவர் செய்யக்கூடியன மூன்றேயாம்; ஒன்று, மானத்தைத் துறந்து நவாபின் கீழ்ச் சேவிப்பது; அல்லது, தன் அதிகாரத்தையும் ஆட்சியையும் இழந்து, வேறிடஞ்சென்று பிழைப்பது; அல்லது, தன்னாலன்றித் தன் காலத்தவர் வேறெவராலுமே சாதிக்கவொண்ணாத அரும்பெருங் காரியத்தைச் சாதித்து முடித்ததன் நற்பயனை அநுபவிக்கும் வழியிலேயேநின்று,

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று,"
"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

என்னும் பொய்யா மொழிகளையே மனத்தில் ஊன்றி தன்னால் இகழ்ந்து வெறுக்கப்பட்டவரும், தன் ஜன்ம விரோதியுமான நவாபை எதிர்த்துப் பொருவது. இம்மூன்று வழிகளில் முதலிரண்டையும் இகழ்ந்து துறந்து, வெற்றியும் தோல்வியும் விதிவசமாயினும், பொன்றாப் புகழ் தன்வசத்ததென்று கருதி, மூன்றாம வழியையே கம்மந்தான் தொடர்ந்து நடந்தது, அவர் உயர் குணத்தை நன்கு விளக்கும்.

## IV. கடை மூவாண்டுகள்.

காலக்கிரமத்தில் தன் அதிகாரத்தை மீறியெதிர்க்கக் கம்மந்தான் யத்தனித்துப் படைகள் திரட்டுவதையும், கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்துவதையும், துணையாளிகளை நாடுவதையும் அறிந்த முகம்மதலி, கம்பெனியாரிடம் முறையிட, கம்பெனியார், உடனே சென்னைக்கு வருமாறு கம்மந்தானுக்குக் கட்டளையனுப்பினார். அப்பொழுது, கம்மந்தானை நன்கறிந்து அவருக்கு அநுகூலஞ் செய்ய வல்ல ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள், சென்னையில் இரண்டொருவரே இருந்தனர்; கம்பெனியாரின் நிர்வாக சபையிலே நவாபின் செல்வாக்கு மேலிட்டிருந்தது; தஞ்சாவூர் அரசர், மூர்த்தஸா அலி முதலிய நண்பர்கள், கட்டளைப்படி கம்மந்தான் சென்னை சென்றால் தீங்கும் அவமானமுமே விளையுமென்று, தடுத்தனர்; இக் காரணங்களால், அவர் சென்னைக்குச் செல்லாது, அவர் கைதாழும்

தறுவா யென்று கருதித் திருநெல்வேலிச் சீமையின் மீது படை யெடுத்துவந்த திருவாங்கூர் அரசரை யெதிர்த்துத் தெற்கே சென்றார். உடம்படிக்கையை மீறிக் கேரளத்தார் தன்னைத் தாக்கியது, ஆங்கிலேய கம்பெனியாரின் தூண்டு தலாலதா னென்பது, அவருக்கு விளங்கிற்று. அந்தச் சமய த்திலே, நெருப்பொடு காற்றுஞ் சேர்ந்ததுபோல, மார்ச்சண் டென்னும் பிராஞ்சிய வீரர், ஐரோப்பிய படையாட்கள் பலருடன் வந்து, கம்மந்தானுடன் சேர்ந்துகொண்டார். அது காறும் ஆங்கிலேயரின் கொடிகளே கம்மந்தான் படைமுகங்களிலும் கோட்டை கொத்தளங்களிலும் பறந்து வந்தன. ஆங்கிலேயர் நட்பு முறித்துத் துரோகஞ் செய்து தன்னைக் கைவிட்டுப் பிராஞ்சியர் தனக்குத் துணை வராகிவிடவே, 1763-ஆம் ஜனவரி மாதம் 9-ம் தேதி யன்று, பாசறையிலே யுள்ள ஆங்கிலேயர் கொடிகள் எரிக் கப்பட்டுப் பிராஞ்சியர் கொடிகள் நாட்டப்பட்டன. போரில் முறியுண்டு தோற்ற கேரளத்தரசர், மீண்டும் கம்மந்தா னோடு நட்புகொண்டு. அவருக்குத் துணைநின்று வேண் டியவாறு உதவிசெய்யவும், அவருடைய எதிரிகளுக்கு இடங்கொடாது மறுக்கவும் ஒப்புக்கொண்டு, உடம் படிக்கை எழுதிக்கொடுத்தார். பின் நிகழ்ந்த போரில், கேரளத்தரசர் அவ்வாறே ஒழுகினமை, இப்பொழுது அவருற்ற தோல்வியின் கடுமையையும், அதனால் கம் மந்தானிடத்து அவருக்குண்டான பயபக்தியையும் நிரூபிக்கும்.

அக்காலத்தில் இந்தியாவிலுள்ள பிராஞ்சியர்களின் முக்கிய காரியஸ்தரா யிருந்தவர் மாடேவ் என்ப வர். ஐரோப்பாவிலே, ஏழாண்டுகளாக ஆங்கிலேயருக்கும்

பிரான்ஞ்சியருக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. இந்தியாவிலே ஆங்கிலேயர் கை உயர்ந்தும், பிரான்ஞ்சியர் கை மிகத் தாழ்ந்து மிருந்தன. எவ்வாறாயினும் பிரான்ஞ்சியரை மீண்டும் தலையெடுக்கச் செய்து, ஆங்கிலேயரைத் தாழச் செய்வதே மாடேவின் ஒரு கவலை: அவர், இந்தியாவிற் பலவிடங்கள் சென்று, அதற் கேற்றவாறு சூழ்சசிகள் செய்து வந்தார். மார்ச்சண்டையும் ஐரோப்பியப் படைவீரர்களையும், கம்மந்தானுக்குத் துணைநின்று அவர் கீழ்ச சேவிக்க அனுப்பியது மன்றி, மாடேவ் செய்த சூழ்சசியால், மொகலாய ராஜாங்கத்திலே தக்ஷிண சுபேதாரும், கருநாடக நவாபின் மேலதிகாரியுமான நிஜாமலி என்பவர், மதுரை திருநெல்வேலிச் சீமைகளின் கவர்னராகக் கம்மந்தானையே நியமித்து, ஓர் உத்தரவனுப்பினார். இந்த உத்தரவினால், நவாபு முகம்மதலியின் தயவின்றி, அவருக்கும் மேலதிகாரியின் அநுமதி பெற்று, கம்மந்தான் கவர்னராகிவிடவே, ஆங்கிலேய கம்பெனியாரேனும் முகம்மதலியேனும் அவரை அங்கீகரிப்பது மிகையாகி, அவர் அதிகாரம் நியாயமாகிவிட்டது. *1763-ம் ஆண்டிலே, ஷா ஆலம் டில்லியிலே மொகலாய சக்கிரவர்த்தியா யிருந்தனர்; அவர் கீழ் நிஜாமலி தக்ஷிண சுபேதார்; அவர் கீழ் முகம்மதலி கருநாடக நவாபு; மதுரை திருநெல்வேலிச சீமைகள் நவாபுக் குட்பட்டன; எனவே, சுபேதாருக் குட்பட்டனவென்பது கூற வேண்டா. சென்னையி லுள்ள ஆங்கிலேய கம்பெனியாருக்குச் சில ஊர்கள் கோட்டைகள் மாத்திரமே சொந்தமாயிருந்தன. அவர்களுக்கு நவாபு கடன்பட்டிருந்தார். சுபேதார் நிஜாமலி, கம்மந்தானைக் கவர்னராக நியமித்தார்; அரசியல் முறைப்படி, அதை மாற்றும்

உரிமை, சக்கரவர்த்திக்கே யுண்டு; தன் யஜமானரான சுபேதார் கட்டளையை மீறிக் கருநாடக நவாபு ஒழுகினால், இவர் அதிகாரத்தை மீறிச் சுபேதார் கட்டளைப்படி கம்மந்தான் நடப்பது நியாயமாகி விடும். இவ்விதமாயி னும், கம்பெனியார் இவ்விஷயத்தில் தலையிட்டு, கம்பெனியின் சேனாபதியான லாரன்ஸ் என்பவர் கம்மந்தானை ஆணை மீறினவராகப் பழித்து, அவர் மீது படையெடுத்து நசுக்கச் சென்றது, "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" எனனும் ஒரு நியாயத்தைத் தவிர, மற்றெவ்வித நியாயத்துக்கும் ஒவ்வா தென்பது தேற்றம். ஆகையால், கம்பெனியின் நிர்வாக சபையார், 1-8-1763 அன்று, 'கம்மந்தானை வென்று சிறைப் பிடித்தவுடன்) "முதல் மாதத்திலே சைநியங்கள் காலாத ஆகிவிடுவதுதான் எங்களுக்கு முழு சம்மதம்" என்று எழுதியது, அவர்கள் மனப்பான்மையையும் நியாய வுணர்ச்சியையும் நன்றியறிவையும் நன்கு விளக்கும்.

நவாபும் கம்பெனியாரும் செய்த சூழ்ச்சிகளால், பெரிய மறவர் சின்ன மறவர் என்ற இராமநாதபுரத்தாரும் சிவகங்கையாரும் கம்மந்தான் கட்சியைத் துறந்து, நவாபுக்கு உதவி செய்ய ஒப்புக் கொண்டனர். இதனால், கம்மந்தான் முதலில் உத்தேசித்தவாறு திருச்சிராப் பள்ளியைச் சென்று தாக்க முடியாமற் போயிற்று. தளகர்த்தர் பிரட்டன் (பரஸ்டன்) என்பவர், ஜூலை 14-ம் தேதி திருச்சிராப்பள்ளியை விட்டுப் படைகளுடன் புறப்பட்டு, ஆகஸ்டு 6-ம் தேதி திருப்பூவணம் வந்துசேர்ந்தார். ஆகஸ்டு 11-ம் தேதி யன்று, கம்மந்தான், அவர் படைகளில் ஒரு பகுதியைத் தாக்கி முறியடித்துப் பெருஞ்சேதம் விளைத்தார்.

இதனிடையில், ஐரோப்பாவிலே ஆங்கிலேயருக்கும் பிராஞ்சியருக்கும் நடந்து கொண்டிருந்த கலகம் ஒழிந்து சமாதானம் ஏற்பட்டுவிட்ட செய்தி, இந்தியாவை எட்டிற்று. அதனால், மாடேவ், ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கம்மந்தானுக்கு உதவிசெய்ய முடியாமற் போயிற்று; ஆயினும், மார்ச்சணடு, பிளாமிக்கோற்டு, என்ற பிராஞ்சிய தளகர்த்தர்களும், ரிக்கட் என்ற ஜர்மானிய தளகர்த்தனும், ஐரோப்பியப் படைகளும், கம்மந்தானிடம் சம்பளம் பெற்று, அவர் இராணுவத்தில் சேவித்து வந்தனர். கர்னல் மான்ஸன் என்பவர், முதலில் கம்பெனியாரின் சேனைபதியாயிருந்தார். மதுரைக் கோட்டையைக் காத்துவந்த கம்மந்தானின் தண்டுகளின் மொத்தம், 200 பிராஞ்சியரும், 1000 குதிரை வீரரும், 3000 சிப்பாய்களும், கள்ளர்கள் பலரு மென்றும்; கோட்டையை முற்றிக்கை செய்த மான்ஸனது சைநியங்கள, 1600 ஐரோப்பியரும், 4000 சிப்பாய்களும், 2000 குதிரை வீரரும், பல்லாயிரம் கள்ளர்களு மென்றும், சொலலப்பட்டிருக்கிறது. இவ்வண்ணமாக, 1763-ம ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், மதுரை முற்றிக்கை தொடங்கிற்று. அம் மதி இரண்டாந் தேதி நிகழ்ந்த ஒரு சிறு சண்டையிலே, கோட்டைக் காவலை ஒற்றி யறியச் சென்ற ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தைக் கம்மந்தான் முறியடித்துத் துரத்தினதில்; டோனல்டு காம்பெல் என்ற தளகர்த்தர் காயமுற்றுச் சிறைப்பட்டார். அவர் காயங்களைக் கண்ணுற்ற கம்மந்தான் கண்ணீர் வடித்து, அவருக்காகப் பரிதாபப்பட்டதுமன்றி, தன் கைதியாகிவிட்ட அவரை மிக்க மரியாதையோடு உபசரித்து, எதிரிகளின் பாசறைக்குத் திருப்பி யனுப்பி விட்டனர்.

இந்த முதல் முற்றிக்கை இரண்டரை மாதக் காலத்துக்கு மேலாக நடைபெற்றது; ஆங்கிலேயர், நாற்பதினாயிரம் குண்டுகள் சுட்டு, பதினெண்ணாயிரம் புதை குண்டுகளைக் கோட்டைக்குள் எறிந்து, ஐரோப்பியப் படைவீரர் எழுநூற்றுவரை இழந்து போராடிப் பார்த்தும், ஒன்றும் பலிக்கவில்லை, கோட்டைக்கு வெளியிலுள்ள தன் கட்சியாருடன் கம்மந்தான் தாராளமாய் வந்து போய் உறவாடுவதையும், அவர்கள் மூலமாய்த் தனக்கு வேண்டிய பண்டங்களைத் தருவித்துக் கொள்வதையும் கூட, அவர்களால தடுக்க முடியவில்லை. கடைசியில் மழைகாலம் வந்துவிடவே, முற்றிக்கையை நீக்கி, பிரட்டனைச் சேனாபதியாக விட்டுவிட்டு, மான்ஸன் முதலியோர் சென்னைக்குத் திரும்பிவிட்டனர். கம்மந்தானின் போர்த்திறலை யறிந்த தக்ஷிண சுபேதார் நிஜாமலி, 'முகம்மதலியின் ஸ்தானத்தில் கம்மந்தானையே கருநாடக நவாபாக்க உத்தேசிக்கிறேன்' என்று, மாடேவுக்கு எழுதினார். சுங்குராமசெட்டியா ரென்ற சென்னை வாசி, ஆங்கிலேய கம்பெனியாரின் கவர்னருக்குக் கம்மந்தானைப்பற்றி எழுதிய கடிதத்திலே, பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

" திருச்சிராப்பள்ளிக கோட்டை முற்றிக்கையின் காலத்தில், முகம்மது யூஸப்கான் கம்மந்தான் நமது படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விசுவாசமாய்க் கொண்டுவந்து உதவிக் காப்பாற்றியதும; சென்னைக் கோட்டையை லாலி முற்றிக்கை செய்த போது, திருநெல்வேலிச் சீமையிலிருந்து படைகளைக் கொண்டு வந்து பிராஞ்சியரின் பிரயத்தனங்களை யெல்லாம் பாழாக்கிக் கடும் போர் புரிந்து, அவர் பேருதவி செய்ததும், சேனாபதி லாரன்ஸ் எழுதிய சரித்திரத்திலே விளங்கும். இவற்றை யெல்லாம் மறந்து, நவாபின் பேச்சைக் கேட்டு, அவரை எதிர்த்துச் சைநி

யத்தை அனுப்பினீர்களே: கம்மந்தான் விசுவாசத்துடன் நமக்குச் செய்துள்ள பேருதவிகளுக்கெல்லாம் இதுதானே நாம் காட்டும் நன்றியும் கைம்மாறும்! இப்பொழுது அவர் நமது தண்டுகளை நன்றாய் அடித்து வெருட்டி, அநேகரைக் கொன்றுவிட்டாரென்றும், நமது சைனியங்கள் புறங்காட்டி ஆற்றுக்கிப்பால் ஓடிவந்து விட்டன வென்றும் கேள்வி.''

முதல முற்றிக்கை நீங்கிய பின்னர், கம்மந்தான், தன் படைகளுக்கும் தளகர்த்தருக்கும் பரிசுகளும் வெகுமானங்களும் அளித்து, சிதைவுண்ட மதிற்சுவர் கொத்தளங்களைச் செப்பனிட்டுப் பலப்படுத்தலானார்.

1764-ம் ஆண்டின் துவக்கத்திலே, ஏராளமான உணவுப் பொருள்களையும் துணைப் படைகளையும் பெற்ற பிரட்டன் தளகர்த்தர், மீண்டும் மதுரையை முற்றிச் சூழ்ந்து, கோட்டையைக் கைக்கொள்ள எண்ணி, அதற்கு வேண்டிய பிரயத்தனஞ் செய்யலானார். இதனிடை நிகழ்ந்த சமாதானப் பேச் சொன்றும் பலிக்க வில்லை. பெப்ரவரி மாதம் பத்தாந் தேதி, டோனல்டு காம்பெலின் தமயனை மேஜர் காம்பெல் என்பவர் மதுரை வந்தடைந்து, தண்டுகளின் தலைமையைக் கைக்கொண்டார். பம்பாயிலிருந்தும் பிறவிடங்களிலிருந்தும் அவருக்கு உதவி செய்யப் படைகள் வந்துசேர்ந்தன. மதுரைக் கோட்டையிலோ, சிப்பாய்கள் கள்ளர்களைத் தவிர, இருநூறு ஐரோப்பியரும், மூந்நூறு காபிரிகளுமே இருந்தனர். இங்ஙன மிருந்தும், எதிரிகளால் கோட்டையைப் பிடிக்கவோ, கம்மந்தானைப் போரில் வெல்லவோ, முடியவில்லை; கடைசியில், தன் சேவகத்திலிருந்த ஐரோப்பிய தளகர்த்தரின் துரோகத்தினாலேயே, அவர் மோசம்போனார்.

இந்தியாவின் சரித்திரத்திலே, போர்த்துகேயர் டச்

சுக்காரர் டேனிஷார் பிராஞ்சியர் பிரித்தானியர் முதலிய மேல்நாட்டார் பலர் வர்த்தக நிமித்தம் வந்தடைந்த கால முதல், முடிவில், மொகலாயர் மராட்டியர் சீக்கியர் ரஜபுத்திரர் சுதேசமன்னர் பிறர், அனைவரையும் பிரித்தானியர் தமக்குள்ளாக்கித் தனியாட்சியைப் பெற்ற காலம் வரையும் நிகழ்ந்த விருத்தாந்தங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒரு விஷயம் தெளிவாகும்: மேலையர் வர்த்தகப் போட்டி, அதிகார அருளைகளால அடிக்கடி தமக்குள் மாறுபட்டு, வெவ்வேறு சுதேச மன்னர்களின் கட்சிகளைத் தழுவித் துணை நின்று, ஒருவரோ டொருவர் பொருதாராயினும், உற்ற தறுவாய்களிலே, இனம் இனத்தோடே என்னும் இயற்கை நியாயபபடி, தம்மை நமபித் தமக்குச சேவகமும் கௌரவமும் பெரும்பொருளும் உதவிவநத மன்னர்களுக்குத் துரோகஞ் செய்து, தமக்குள் ஒன்று சேர்நது கொண்டு, அவர்களை ஏமாற்றி மோசஞ் செயது வநதமை, இமயமலை முதற் கன்னிமுனைவரை எலலா நாட்டு வரலாறுகளாலும் விளங்கும். கம்மந்தானும், ஆங்கிலேயர் தன்னைக் கைவிட்ட பின்பு தான் நம்பிய ஜர்மானிய பிராஞ்சிய வீரர்களினால், அவ் வண்ணமே மோசம் போனார். அவர்களை அவர் நமபாதிருப்பின், அலலது அவர்கள் துரோகஞ் செய்யாதிருபபின், தென்னாட்டுச சரிததிரம வேறு வழி திரும்பியிருக்கலாம்.

கம்மந்தான் முழு நம்பிக்கை கொண்டிருநத ஐரோப்பிய தளகர்த்தர், ரிக்கட்டும், மார்ச்சண்டுமே. இவர்களுள் ரிக்கட்டு, ஆங்கிலேயருக்கு இரகசியமாய்த தூதனுப்பி, எண்ணாயிரம் வராகனைக் கைக்கூலி பெற்றுக்கொண்டு, பெப்ரவரி 26-ம் தேதி யன்று, தன்கீழுள்ள பட்டாளத்

தோடு துரோகமாய் வெளியேறி, எதிரிகளைச் சேர்ந்து கொண்டார். இது முதல் கோட்டையிலிருந்த ஐரோப்பியப் படைகள் சிறிது சிறிதாய் வெளியேறி, எதிரிகளைச் சேரலாயின. மார்ச்சண் டென்பவரைப் பற்றி இங்கே சிறிதுரைத்தல் பொருந்தும். கம்மந்தானது குண விசேஷங்களிற் சில, அவருக்குமுண்டு; அவரும், எதற்கும் அஞ்சாத வீரர்; முற்கோபி; படபடப்புள்ளவர்; ஆனால், நயவஞ்சகர்; பண விஷயத்தில் நம்பத் தகாதவர். இதனால் அவருக்கும் கம்மந்தானுக்கும் மனஸ்தாபங்கள் நேர்ந்தன: ஒரு காலத்தில், கம்மந்தான் அவரைச் சிறையிலடைத்து வைத்திருந்தார்; மற்றொரு போது, கடுங்கோபத்தில் அவரைத் தன் சவுக்கினால் அடித்தார். இந்த அவமானங்களை மனத்தில்வைத்து வைரங்கொண்டிருந்த மார்ச்சண்டு, அற்றம் நோக்கி மோசஞ்செய்துவிட்டார். கம்மந்தான் மதுரைக் கோட்டைக்குள் அடைபட்டுவிடவே, தளகர்த்தர் பிரட்டன், சில படைகளுடன் திருநெல்வேலிச் சீமை சென்று, அங்குள்ள கோட்டைகளைக் கைவசப் படுத்திக் கொண்டார். வழக்கம்போல, முற்றி நின்றார்க்கும் முற்றப் பட்டார்க்கும் அடிக்கடி சிறு சண்டைகள் நிகழ்ந்தன. இவ்வாறு நிகழ்ந்த கலகங்களிலே, ஆங்கிலேயர் தளபதிகள் சிலர் கம்மந்தான் கையிலும், இவர் உத்தியோகஸ்தர் சிலர் எதிரிகள் கையிலும், அகப்பட்டுக் கொண்டனர். இருகட்சியினரும் சிறைப் பிடித்த கைதிகளைப் பரிவர்த்தனை செய்துகொள்ளுதல் போர்மரபு. அதன்படி, எதிரிகள் கையி லகப்பட்டுவிட்ட தன் அரிக்காரன் இராமலிங்கத்தையும் மற்றிருவரையும் தன்னிடம் அனுப்பினால், தான் சிறைப் பிடித்திருந்த தளபதி பால்ட்வின் என்ப

வரைத் தான் விடுதலை செய்வதாகக் கம்மந்தான் எழுதிய கடிதத்துக்கு, ஆங்கிலேய சேனாபதி காம்பெல் எழுதிய பதிலில், ஒரு விஷயம் கவனித்தற் குரியது: அஃதாவது, 'வெள்ளைக்காரருக்கு இணையாகக் கறுப்பு மனிதரை மாற்றிக் கொள்வது காதால் கேளாத தொன்று, ஒரு பொழுதும் ஒருப்பட முடியாதது,' என்பதே.

எதிரிகளின் சூழ்ச்சிகளால் நாளுக்கு நாள் சைநியத்தில் துரோக குணம் அதிகப்படவே, கம்மந்தான் கண்டிப்பான தண்டனைகளை விதிக்கவேண்டியதாயிற்று. கோட்டைக்குள் நடக்கும் விஷயங்களைப் பற்றித் துரோகிகளிடமிருந்து தான் கேள்வியானபடி, சேனாபதி காம்பெல் சென்னைக்கு எழுதிய ஒரு நிருபத்திலே, பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

"அவர் (கம்மந்தான்) கொடுமை நாளுக்கு நாள் அதிகப்படுகிறதாம்; அற்ப காரணங்களுக்காக, தன் கையினாலேயே குற்றவாளிகள் தலைகளை வீசிவிடுகிறாராம். அவருடனுள்ள காவற்படைகளெல்லாம் மனம்வெறுத்து வெளியேறக் காத்திருக்கின்றனராம். தன் கீழ் உத்தியோகஸ்தரிடத்தில் பொறுமையும் சமுசயமுமே காட்டி, இப்பொழுது அவர் இரத்தப் பழிகள் கொலைகளினாலேயே தன் அதிகாரத்தைச் செலுத்துகின்றனராம்; அவருக்கு எப்பொழுது முள்ள இயற்கையான விவேகம் ஒழிந்துவிட்டது போலும்; இவ்வாறு நடப்பவர் விரைவில் நாசமடைவரென்பது நிச்சயம். அவருடைய ஜனங்கள் படைகளின் அதிருப்தியை என்னாலியன்றமட்டும் நான் இடைவிடாது அதிகப்படுத்த முயலுவேன்."

இவ்வாசகங்களை ஊன்றி ஆலோசித்துப் பார்த்தால், கம்மந்தானைச் சூழ்ந்துள்ளோர் துரோகங்களும், அவர் எதிரிகளின் சதி சூழ்ச்சிகளும், அவற்றால் அவர் மனம்

புழுங்கிக் கோபாவேசமும் வீராவேசமும் மனவேக்கமும் மாறி மாறிப் பொங்கியெழ, வெறிகொண்டவர் போலச் சிலவேளைகளில் அவர் விபரீதமா யொழுகிய நடபடிக்கைகளும், ஒருவாறு துலங்கும்.

1764௵ ஜூன் 7உ அன்று நவாபு முகம்மதலி முற்றிக்கைப் பாசறை வந்தடைந்தார். முற்றிக்கையினால் நற்பயனைக் காணாத ஆங்கில சேனாபதி, மதுரைக் கோட்டையைத் தாக்கித் தகர்த்துப் பிடிக்க வெண்ணி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தனர். 11உ யன்று நவாபின் கொடியைப் பாசறையில் உயர்த்தியபின், பீரங்கிகள் கோட்டையைத் தாக்குதற்குச் சூசகமாக ஒரு குண்டு சுடவே, அதையறிந்த கம்மந்தான், சாகுமளவும் கோட்டையை விடுவதில்லை என்று தான் துணிந்துவிட்டதற்கு அறிகுறியாக, ஒரு மஞ்சட் கொடியைக் கோட்டையின் மேல் பறக்கவிட்டார். அன்று கோட்டையில் ஒரு சிறு பாகம் இடிபட்டது; அதைக் கண்டு மகிழ்ந்த முகம்மதலி, கோட்டையைப் பிடித்தால், படைகளுக்கும் தளபதிகளுக்கும் 130,000 வராகன் வெகுமதி யளிக்கிறேனென்று விளம்பரஞ் செய்தார். அன்று மாலை கோட்டையிலிருந்த ஐரோப்பிய தளபதிகள் நால்வர், கம்மந்தானை வஞ்சித்து வெளியேறி, எதிரிகளைச் சேர்ந்து கொண்டனர். அடுத்தடுத்து நிகழ்ந்த சிறு சண்டைகளில், இருகட்சியிலும் ஆட்சேதம் நேர்ந்துகொண்டிருந்தது.

ஜூன் 26-ம் தேதி யன்று காலை, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, எதிரிகள் பெருந்திரளாய்ச் சென்று கோட்டையைத் தாக்க, அன்று பெரும்போர் வெகு மும்முரமாய் நடந்து, இருதிறத்தாராலும் பல வீரச்

செயல்கள் நிகழ்த்தப்பட்டன; முடிவில், ஆங்கிலேயர் தோற்று மீளவேண்டியதாயிற்று. சேனபதி காம்பெல், சமாதானக் கொடியோடு தூதனுப்பிக் கம்மந்தானின் அநுமதி பெற்று, அன்றைச் சண்டையில் மடிந்தவர் காயமுற்றவர்களை மாலையில் தம் பாசறைக்கு எடுத்துப்போனர். சேனதிக்கு அடுத்தபடியி லுள்ளவரும், ஒரு காலத்தில் கம்மந்தானது நண்பராயிருந்தவருமான மேஜர் பிரட்டன், அன்று மரண காயங்களுற்றுச் சில நாள்களில் உயிர்துறந்தார். அவரையன்றி, தளபதிகள் பலர் உட்பட, ஐரோப்பிய வீரர் மாத்திரம் நூற்றிருபதின்மர் வரையும், சிப்பாய்கள் பலரும், அன்றைப் போரில் மாண்டனர். இத்துணைப் பெருஞ் சேதமும் முடிவில் அபஜயமு முற்று எதிரிகள் கோட்டை மதிலுக்குச செய்த ஹானியை, கம்மந்தான் விரைவில செப்பனிட்டு, மதிலைப் பலப்படுத்திக் கொண்டார்.

இவ்வாறு நெடுநாளாகப் பலமுறையாக மதுரைக் கோட்டையைத் தாக்கிப் பிடிக்கச் செய்த முயற்சிகள் பயன்படாமற் போனதை யறிந்த கம்பெனியார், வெளிப் போக்கு வரவு அசாத்திய மாகும்படி கோட்டையைச் சூழ்ந்து வளைந்து, உணவுப் பொருள்கள் உட்செல்வதை அறவே தடுத்து, பஞ்சத்தினுல் கம்மந்தானைக் கீழ்ப்படுத்திக் கைக்கொள்ளத் தீர்மானித்தனர். இந்தச் சூழ்ச்சியைச் சிலகாலம் நிறைவேற்றியதனுல், கோட்டைக்குள்ளிருந்தவர்களில, மாமிச பக்ஷணிகளாவார், தங்கள் குதிரைகளைக் கொன்று தின்ன வேண்டிய தாயிற்று; சாக மூல பல பக்ஷணிகள், வெறும்வாய்க் கிலயுமின்றித் தவிக்கலாயினர்; பலர், ஏற்ற உணவின்மையினுல் நோய்களுற்று வருந்தி,

மாண்டொழிந்தனர்; இங்ஙனமாகியும், கம்மந்தான் கீழ்ப் படிந்திலர். "வெவ்வேறு நாட்டினர்களான ஒரு பெருங் கூட்டத்தார், இவ்வளவு இன்னல்களையும் சந்தோஷமாய் மனமிசைந்து சகித்துக்கொண்டு, அவர் சொற்படி ஒழுகி வந்ததே, கம்மந்தானது திறமையை நன்கு விளக்கும்" என்று, ஒருவர் எழுதியிருக்கிறார். இவ்வாறு தன்னை நம்பி ஜனங்கள் வருந்துவதையும் மடிவதையும் காணப் பொறாதவராய், 'என் குடும்பத்தோடும், என்னைச் சேர்ந்த படை பரிவாரங்களோடும், மரியாதையாய் வெளியேறி வேறெங்காவது செல்லும்படி எனக்கு அனுமதியளித்தால், கோட்டையை விட்டுவிடுகிறேன்' என்று, கம்மந்தான் தூதனுப்பினார்; ஆனால், அதற்குக் காம்பெல் இசையவில்லை. இப்படிப்பட்ட தர்மசங்கடத்திலே கம்மந்தானின் மனம் குழம்பித் தத்தளிக்க, அவர், நம்பிக்கையற்று உற்சாகங் குன்றி எக்கமடைந்து கோபமும் தாபமும் மிதமிஞ்சிக் கொந்தளிப்பதால், நிதான அறிவில்லாதவர்கள் போலச் சில வேளைகளில் ஒழுகலாயினர். இக்காலத்தில் ஓர் சமயத்தில் தான், ஏதோ முடுக்காக மார்ச்சண்டு எதிர்த்துச் சொன்ன சொல்லைப் பொறாதவராய், கம்மந்தான் அவரைத் தன் சவுக்கால் அடிக்க நேர்ந்தது. இந்த அவமானமே மார்ச் சண்டின் மனத்திலும் துரோக எண்ணத்தை முளைக்கச் செய்தது.


பிராஞ்சியரின் உதவியை நம்பியும், மாடேவ், மார்ச் சண்டு முதலியோரின் தூண்டுதலினாலுமே, கம்மந்தான், நவாபையும் ஆங்கிலேயரையும் எதிர்க்கத் துணிந்தனர். பகிரங்கமாக ஆங்கிலேய கம்பெனியாரை எதிர்த்துச் செய்த முதற்செயல், கம்மந்தான் அநுமதி பெற்று, அவர்

பாசறையி லுள்ள ஆங்கிலேயரின் கொடிகளை மார்ச்சண் டெரிந்து, பிராஞ்சியரின் கொடியை நாட்டினனேயாம். ஐரோப்பாவிலே சமாதானம் ஏற்பட்டு, இந்தியாவிலுள்ள பிராஞ்சியர் அதனால் பகிரங்கமாய்க் கம்மந்தானுக்கு உதவி செய்வதை நிறுத்திய பின்னருங்கூட, மார்சசண்டும வேறு சிலரும கமமநதான்கீழ் இராணுவசசேவகம் பூண்டு, அவர் கட்சியில போராடி வநதனர். ஆகையால, ரிக்கட் முதலிய மற்றெலலோரையும விட, மார்ச்சண்டே விசுவாசமா யொழுக அதிகம கடமைபபட்டிருநதார்; கமமநதானுக்கு அடுத்தபடியில, அவர்தான் யுததமுறையில தேர்நதவீரர். அவரே இபபொழுது துரோகஞ்செய்யத் துணிநது; தாம் படுங்கஷ்டஙகளினாலும, கமமநதான முடிவில வெற்றி யடைவாரென்ற நமபிக்கை நாளுககுநாள குன்றி வருவத னாலும, கமமநதான் வெளியேறித தாம மாத்திரம் நவாபு கையில அகபபடடுககொண்டால தமககுப பெருங்கேடு விளையக்கூடு மென்ற பயததினாலும, அதறகு முனனரே துரோகஞ்செய்து, கமமநதானை எதிரிகள கையில காட்டிக கொடுததுவிட்டால தமககு க்ஷேமலாபஙகள் சித்திககு மென்ற துராசையினாலும தூணடபபட்டு, துரோகத் துக்குச சித்தமாயிருநத ஸ்ரீநிவாஸ ராவ, பாபா சாயபு என்ற இருவரோடுஙகூடிச சதியாலோசனை செய்து முடித் தார். ஸ்ரீநிவாஸ ராவ், தஞ்சாவூரப் பிராமணர்; கம்மந் தானின் திவான்; பாபா சாயபு, அவர முக்கிய தளகர்த்தரில் ஒருவர். இவ்விருவரும மார்ச்சண்டும் கூடி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டனர்.

அக்டோபர்மீ 13உ மாலை ஐந்து மணிக்கு, கம்மந் தான் ஒரு தனியறையிலே நமாஸ்செய்து ஆண்டவனைத்

தொழுதுகொண்டிருக்கையில், இம்மூன்று துரோகிகளும் அவர் கூட்டாளிகள் சிலரும் திடீரென உட்புகுந்து, அவர்களில் ஒரு சுபேதார், 'எங்களைக் கைவிட்டு நீர் மாத்திரம் தப்பிவிட பார்க்கிறீரோ' என்று, அவரை ஏசித் தூஷித்தான். வந்தவர்களின் கோரிக்கையை அறிந்துகொண்ட கம்மந்தான், உடனே தன் வாளையுருவி அவனை வெட்டிவீழ்த்தினர். இதற்குள் மற்றவர்கள் அவர்மேல் விழுந்தமுக்கிப் பிடித்து, அவருடைய தலைப்பாகைத்துணியைக்கொண்டே அசையமுடியாமல் அவரை இறுக்கிக் கட்டிவிட்டனர். "என்னை இப்பொழுதே வாளால் கொன்று விடுங்கள்; அந்த நவாபு கையில் காட்டிக்கொடாதேயுங்கள்" என்று, அவர் வேண்டிக்கொண்டதற் கிணங்காமல், அவரைத் தூக்கிச் சென்று, மார்சண்டு வீட்டின் பக்கத்திலுள்ள ஓர் அறையிற் சிறைவைத்துக் காவல் நியமித்தனர்; அப்பால் மந்திரிகளுக்குத் தூதனுப்பி நிபந்தனைகள் பேசலாயினர்; மிகச் சிலருக்கே இச்செய்தி தெரியும். கம்மந்தானின் வீரர்களில் இளஞ்சிங்கமொருவன், 'முதலி' என்ற பெயரினன், தன் எஜமானனுக்கு நேர்ந்த ஆபத்தை யறிந்து, அந்தப் புரத்திலுள்ள கம்மந்தானது மனைவி மாசாவுக்குச் செய்தியனுப்பிவிட்டு, ஐந்து-ஆறு நூறு வீரர்களைத் திரட்டிக்கொண்டு, கம்மந்தானைச் சிறையினின்றும் விடுவிக்க முயன்றான். மார்சண்டு உடனேவந்து முதலியை மட்டும் கொன்றுவிடவே, மேல்நடத்தும் தலைவனின்றிப் படைவீரர் தத்தளிக்க, கலகம் ஒடுங்கிவிட்டது. மார்சண்டு ஒரு பீரங்கியைத் தன் வீட்டு வாயிலில்வைத்து, மேற் கலகம் நேராமல் தடுத்துக்கொண்டார். நிகழ்ந்தவற்றையெல்லாம் அறிந்த மாசா, தன்கணவரை மட்டும் விட்டு

விட்டால், கோட்டையையும் தன்னிடத்துள்ள அளவிறந்த திரவியங்களையும் கொடுத்துவிடுவதாக, மார்ச்சண்டுக்குக் கடிதமெழுதி யனுப்பினான்; ஆனால், அவர் அதற்கிணங்கவில்லை.



கான்சாயபு பள்ளிவாசல்

துக்கத்தையும் வெட்கத்தையுமே விளைக்கத் தக்க கதையை வளர்ப்பதில் பயனில்லை: 14-ம் தேதியன்று, எதிரிகள் கோட்டையையும் கமமந்தானையும் கைக்கொண்டனர். மறுநாள், 1764 ஆம் அக்டோபர் 15உ திங்கட்கிழமை மாலை ஐந்து மணிக்கு, நவாபின் கட்டளைப்படி, எதிரிகளின் பாசறைக்கப்பால் திண்டுக்கல் செல்லும் பாதைக்கருகே நின்ற ஒரு மாமரத்தில், கம்மந்தான் தூக்கிலிடப்பட்டார். அவர் பிடிபட்ட நாள்முதல் கொலையுண்டதுவரை உணவுகொள்ளவில்லை யென்றும்; திங்கட்கிழமை யன்று நவாபின் உத்தரவுப்படி கொடுத்த ஊண் தாம்பாளத்தை

இடதுகாலால் உதைத்துத் தள்ளிவிட்டாரென்றும்; அவரைத் தூக்கிலிட்டபோது, இருமுறை உயிர்போகாமற் கயிறறுந்து கீழே விழுந்தாரென்றும்; அப்பால், அவர் தேகத்தில் பொதிந்திருந்த ஓர் இரட்சையை எடுத்துவிடும்படி அவரே கூற, அவ்வண்ணஞ் செய்தபிறகு, மூன்றாவதுமுறை தூக்கிலிட்டபோதுதான் அவர் உயிர்துறந்தனரென்றும், கூறுவர். போர்க்களத்திலே காயமுற்றுக் கிடந்தவரையும் பார்த்துத் தான் கண்ணீர் பெருக்கிய டோனல்டு காம்பெலின் தமயனை ஆங்கிலேய சேனாபதி காம்பெலே யெனும், நவாபு முகம்மதலியையே யெனும், தனக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி அவர் வேண்டிலர். 'தோற்றால் தூக்குமரம், செயித்தால் சிம்மாசனம்' என்பதை முதலிலே தான் நன்குணர்ந்து துணிந்த வண்ணமே, சிறந்த ஆண்மைத்தனத்துடன், அவர் கடைசிவரை ஒழுகினர். அவர் பிரேதத்தைப் பல துண்டங்கள் செய்து, தலையைத் திருசிராப்பள்ளிக்கும், அவயவங்களைத் தஞ்சாவூர், பாளையங்கோட்டை, திருவாங்கூர்களுக்கும் அனுப்பிவிட்டு, உடலைமட்டும், மதுரையை ஆண்டகாலத்தில் அவர் வசித்துவந்த சம்மட்டிபுரத்தில்தானே புதைத்தனர் என்பர்; அவர் தலையே அங்கு புதைக்கப்பட்டது என்பார் சிலர். 1808-ம் ஆண்டிலே, அஃதாவது 44 ஆண்டுகளுக்குப்பின்னர், ஷேக் காதர் குமாரர் ஷேக்இமாம் என்பவர், அவர் உடலைப் புதைத்த இடத்தின் மீது ஒரு சிறு மசூதியைக் கட்டினர். மதுரை நகரத்துக்கு இரண்டுமைல் தொலைக்கு மேற்கே, திண்டுக்கல் ரஸ்தாவின் சமீபத்திலே, "கான்சாயபு பள்ளிவாசல்" என்று வழங்கும் அந்த மசூதியை, இன்றுங் காணலாம்.

"இந்தியா பெருமைபாராட்டக்கூடிய கறுப்பு மனிதர் யாவரினும் மிகச் சிறந்த யூஸப்கான்!" என்று ஆங்கிலேய தளகர்த்தர் ஒருவரே புகழ்ந்துள்ள, "முகம்மது யூஸப்கான் சாயபு பகதூர், கம்மந்தான்" என்ற மருதநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறிது.

இலக்கணக்குறிப்பு.—பிறவிடங்களிற் போல இந்நூலிலும், உண்மைப்பன்மையையும் மரியாதைபற்றிவரும் ஒருமைப் பன்மையையும், (இலக்கணவழுப்போலத் தோன்றும்) ஒரு வழியில் வேற்றுமைப்படுத்திக் காட்டியிருக்கிறேன். பின் வரும் உதாரணங்கள் இதை விளக்கும்:—

உண்மைப்பன்மை.—அரசர் தம் குடிகளை ஓம்பிவந்தனர்.

மரியாதை ஒருமைப்பன்மை அரசர் தன் குடிகளை ஓம்பிவந்தனர்.

சில விடங்களில் நேரும் பொருண்மயக்கத்தை நீக்க வெண்ணி இப்படி எழுதி வருகிறேன். அ. மா.

# முக்கிய பிழை திருத்தங்கள்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 14 | 5 | சூழப்பட்ட | சூழப்பட்டிருந்த |
| 14 | 8 | குழவி | குளவி |
| 25 | 20–21 | ஒப்புவித்து | ஒப்பித்து |
| 32 | 19 | ஆசுகவிகாளமேகப் புலவரின் | ஆண்டான்கவிராயரின் |
| 50 | கடைசி | வீரன், ஒருவன்- | வீரன் ஒருவன், |
| 53 | 3 | ஒப்புவித்ததை | ஒப்பித்ததை |
| 53 | 12 | பூவைசியர் | உழவர் |
| 62 | 4 | கண்டம | கண்ட |
| 91 | 26 | 1852 | 17[illegible]2 |
| 94 | 2 | தமக்கும் | தமக்குத் |
| 132 | 5 | தம் | தன் |

The first 88 pages were printed at the Authors' Press, Mylapore and the rest at the Sri Rama Press, 15, Broadway Madras.

# ஸ்ரீ. அ. மாதவையர் புஸ்தகங்கள்

1. பத்மாவதி சரித்திரம்—1-2 பாகங்கள் சேர்ந்தது. 416 பக்கங்கள்—பல சித்திரப் படங்கள் உள்ளது. 5-ம் பதிப்பு—இதுவே தமிழ் நாவல்களி லெல்லாம் முதன்மையானது—விலை ரூபா 2; "பஞ்சாமிர்தம்" சந்தாதார்க்கு ரூ. 1-12-0)

2. விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து, கற்புப்பத்து, 20 அதிகாரங்களும், 280பக்கங்களும அடங்கியது. பழமொழிக ளஞ்சியம்-ஜமீன்தார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டிகள் முதலியோரின் நடபடிக்கைகளை அழகாய் எடுத்துக் காட்டுவது—போ. சுப்பையர் விஷயம் வெகு ரஸமாயிருக்கும் 2-ம பதிப்பு ரூ 1-4-0; ("பஞ்சாமிர்தம்" சந்தாதாரக்கு ரூ 1—0—0)

3. முத்துமீனாக்ஷி -ஒரு பிராமணப் பெண்ணின் சுயசரிதை —வெகு உருக்கமான கதை. 2-ம பதிப்பு விலை--0-8-0 ("பஞசாமிர்தம்' சந்தாதாரக்கு 5 அணா.)

4. உதயலன்—ஷேக்ஸபியா கவீந்திரரின அதபுதமான நாடகம்—உலகததிலே யுள்ள காவியஙகளி லெல்லாம மிகச சிறந்த தொன்று—படித்தால் தெரியவரும. 2-ம பதிப்பு—0 12-0 ("பஞ்சாமிர்தம" சந்தாதாரக்கு—0—8 -0)

5. குசிகர் குட்டிக்கதைகள் - நமது பழகக வழககஙகளில் கெட்டவற்றை வேடிக்கையாய எடுத்துக் காட்டிக் கண்டிக்கும் 22 கதைகள்—டெமி 240 பக்கஙகள். படிக்கப் படிக்கத் தெவிட்டாதன—3 பாகஙகள—ஒவவொருபாகமும 10 அணா ("பஞசாமிர்தம" சநதாதாரக்கு ரூ 1—0—0)

டிெ சோதது பைண்டு செயதது 1—8—0, டக்ஸின் (1—12—0)

6. சித்தார்த்தன் -புதத பகவானது திவய சரிததிரம—தனித் தமிழ் நடையில எழுதப்பெறறது. "புததசரிதை" என்ற இனிமை யான செய்யுட்பகுதியும சேர்ககபபெறறது. —விலை 0—12—0.

7. பாலராமாயணம்—இராமாயண கதையை அழகாய் விரிவாய, கமபராமாயண கவிகளும் இடையிடையே விரவி, அதிக ரஸமாய்க் கூறுவது. மாக்மிலன் கமபெனியார் பிரசுரம்—விலை 0—12—0.

8. பாரிஸ்டர் பஞ்சநதம்—ஒரு சிறிய நாடகம்-வேடிக்கையா யிருக்கும், வீட்டில் சிறுவர் ஆடிப் பார்க்கலாம்—விலை 0—6—0 ("பஞ்சாமிர்தம்" சந்தாதாரர்க்கு 0—3—0.)

9. பொது தர்ம சத்கீத மஞ்சரி—தேசிய கீதங்களும் சிறந்த மொழி பெயர்ப்புக்களும் அடங்கியது. ஸ்ரீ. டி.வி. சேஷகிரி ஐயர் (ஹைகோர்ட் ஜட்ஜ்) முகவுரையுடன்—விலை 0—4—0.

10. பால விநோதக் கதைகள்—படங்களுடன் —0—4—0.

11. புதுமாதிரிக் கலியாணப் பாட்டு—பெண்கள் பாடக் கூடியது. வேடிக்கை விநோதமானது. 2-ம் பதிப்பு 0—2—0 ("பஞ்சாமிர்தம்" சந்தாதாரர்க்கு) 0—1—0.

12. குறள் நானூறு—திருக்குறளிலிருந்து, 12 தமிழறி மேதையர் வோட்டுக்களின்படி, பொறுக்கி யெடுத்த 400 சிறந்த குறள்களின் மூலமும், கருத்துரை அரும்பதவுரைகளும், இங்கி லீஷ் கருத்துரையும் சேர்ந்தது. மிகச் சிறந்த புஸ்தகம்-பாக்கெட் ஸைஸ், விலை 4 அணா; ("பஞ்சாமிர்தம்" சந்தாதாரர்க்கு 3 அணா.)

ஷை உயர்ந்த காகிதம், டக்லின் பைண்டிங்—விலை 0—6—0.

13. தக்ஷிண சரித்திர வீரர்—தேச பக்தியையும் சரித்திர ஞானத்தையும் புகட்டும் சிறந்த புஸ்தகம்-140-பக்கம்; 11 சிறந்த படங்கள்-10 அணா.

14. பஞ்சாமிர்தம்-முதல் மாலை (1924-25)—நவரசக் களஞ் சியம்—மிகப் பல கவிகள், வியாசங்கள், கதைகள், வேடிக்கை விநோதங்கள் விகடப்பாக்கள், சாஸ்திரக் குறிப்புக்கள் அடங்கியது. சிறந்த மேதாவிகள் பலர் எழுதியவை. 1076 பக்கங்கள்; 130 படங் கள்—கில்டு பைண்டிங்—5—8—0 (சந்தாதாரர்க்கு 5—0—0.)

குறிப்பு:—தபால் கூலி வேறு.

மானேஜர்—"பஞ்சாமிர்தம்" ஆபீசு,

மயிலாப்பூர், சென்னை

## Mr. A. MADHAVIAH'S ENGLISH WORKS:—

I. **Thillai Govindan**—With an Introduction by Frederic Harrison—English edition on F. W. paper by Fisher Unwin—Price 2/6—Reduced to *One Rupee.*

*Some Opinions*—(1) *F. H.*—"This remarkable little book—It is beautifully written—fascinating picture" (2) *Sir F. A. Nicholson, K C.S.I.*—"The book is most interesting" (3) *R. E. Holland, I.C.S.*—"It is the only book I have come across which gives one a real insight into Native life" (4) *M. C. C. Mag* —Whoever wrote this had genius—It is the most life-like picture of Modern Indian Life...Repeatedly recalls Thackeray to one's mind" (5) *I.S.R.*—"One of the most scathing exposures of much which passes for religion and morality among us " (6) *The Englishman,* "The memoir is certainly worth reading."

IV. **Lieut. Panju: A Modern Indian.**

A most fascinating Novel-Revised 2nd edn. 1 Re.

*Some opinions*—(1) *The Daily Express* · "...... what is wanted is not mere imitation novels of the Western type, but real, original productions of the indigenous variety, with Indian characters faithfully drawn and fully developed and with orginal plots scientifically and artistically constructed, and bearing reference to Indian Society as it ought to be. We have before us now a book of this description by one who may not be unfamiliar to our readers, Mr. A. Madhaviah. A striking feature of the book to us is the extraordinary extent to which it has succeeded in being true to life... ..The price of one rupee is by no means high." (2) *United Indian and Native States:* "The language is pure and simple, with a pleasant idiomatic flow showing literary perfection The hero's chaste life and scrupulous adherence to ideals and subsequent sacrifice are of absorbing interest." (3) *The Indian Review*: " a Kusika's story on a bigger canvass ; no better book on domestic reform could be placed in the hands of our ladies."

VI. **Kusika's Short Stories**

*Revised Second Edition*

| | | | |
|---|---|---|---|
| Part I 15 Stories ... ... ... | 0 | 12 | 0 |
| Part II 12 ,, ... ... ... | 0 | 8 | 0 |
| Both Parts together—27 Stories ... . | 1 | 0 | 0 |

*The Indian Review*: Kusika's stories are among the classics of their kind, full of graphic and amusing pictures of South Indian life, as vivid and instructive as anything yet attempted in this side of India." (2) *The Indian Bookman*: "......Incisive descriptions of modern South Indian life and customs, recognised for many years as of unusual merit. Mr. Madhaviah has the gift of vivid characterisation" ..." (3) *The late Mr. S. Kasturiranga Iyengar*, Editor of the *Hindu*: " graphic and amusing pictures .. The pictures of life which are drawn are vivid, interesting and written in the attractive style characterestic of the author. .most of them true to life in the main incident " (4) *The late Mr. Dewan) Bahadur V. Nagamayya*· "I am reading .. ...with admiration. I have translated them to my wife and daughters and we talked and enjoyed the stories like anything. They are magnificent ' (5) *Sir P. S Sivaswamy Aiyer*—Enjoyed it immensely. It is capitally written, full of humour and is a very graphic description of the woes of parents of girls." (6) *United India and Native States*: "The descriptions given are vivid and life-like and reveal the author's powers of intellect and analysis "

*Note*—Tamil translation by the Author of 22 of these stories—
Wrapper Rs 1 8 0 Duxeen binding Rs. 1 12 0.

## VII. THE BALLAD OF THE PENNILESS BRIDE

Price, As. 4 only

VIII. MANIMEKALAI—(*Tamil Classics for English Readers Series.*)—One Rupee.

IX. NANDA—The Pariah who overcame Caste—*Illustrated*—9 Annas.

X. MARKANDEYA—The Youth who conquered Fate—*Illustrated*—5 Annas,

XI. **The Story of the Ramayana**—Retold in a simple, straight manner with map and Glossary—Revised 2nd Edn., Re. 1, Abridged Edn. for III + IV Forms-10 As.

*Sir P. S. Sivasawmi Aiyer K. C. S. I., C. I. E.*,

The moral education of the young is a problem which has come to the front in this century and has been engaging the

attention of the educational world and the public. Opinion is divided to some extent as to the possibility and advantage of direct moral instruction. A good story well told is of greater value especially to the young than a dry statement or discussion of moral maxims. And ideals drawn from the national literature of a civilised people necessarily have a greater educative effect than those borrowed from foreign sources. No apology is therefore needed for this book which Mr. Madhaviah has written for the benefit of the school-going youth of this country. He is no novice as an author. By his fine culture and his previous essays in the field of literature Mr. Madhaviah is well equipped for the task he has undertaken. The book is written in a pleasant, flowing and attractive style specially suited to the young reader. He has succeeded in producing an eminently readable and delightful story which will serve to implant in youthful minds a love of the lofty ideals portrayed in the immortal epic."

*Dr. Sir S. Subramania Iyer*:—"No Indian youth loving his land and its ancient tradition and greatness should fail to read and profit by this most pleasant book."

*The Rt. Hon'ble Mr. V. S. Srinivasa Sastri, P. C.*,—"Teachers throughout India will find in it an effective means not only of teaching English composition, but of training the emotions and inculcating high ideals of duty."

*The Hon'ble Mr. Justice T. V. Seshagiri Iyer*:—"The English garb in which Mr. Madhaviah has clothed his tale should enable Indian Managers of aided institutions to prescribe its study as part of the course of instruction in their schools. The English of the book is excellent and there is absolutely no trace of sectarianism in it. Mr. Madhaviah has done excellent service to the cause of religious education in this country by bringing out this book."

*The Rev. Dr. William Miller, C. I. E.*:—"..Such acquaintance as I have thus made with the volume enables me to say that I think you have written in a style very suitable for the purpose in view, and that I am satisfied that the book as a whole will prove interesting and useful.

*The Rev. Dr. William Skinner*:—"........I should be glad to see it recognised by the Educational authorities."

*The Hon'ble the Rev. Dr. G. Pittendrigh, M.A.*—"...... seems to me peculiarly fitted to create in young people an interest in one of the great poems of the lands."

*Rao Bahadur Prof. K. B. Ramanathan, M.A., B. E.T.*"......It is bound to take its place among the perm... literary possessions of our boys of the High School cl... I shall not be surprised if it gets prescribed as one o... non-detailed books of the English Department o... students qualifying for the school-leaving certificate...... good an English classic in its way as Lamb's Tales ... Shakespeare.. ......"

*Principal K. Ganapathi Iyer of the Kalli... College* :—"......in every way a very suitable book fo... detailed study by pupils of our 5th and 6th forms......"

*Principal I. Srinivasa Iyer of the Tinnevelly H... College* :—"......I should like to see the work in the han... of every High School boy."

*Dewan Bahadur The Hon'ble Mr. L. D. Swamikan... Pillai, I.S.O., M.A., B. L.* :—"...I read it through and must say its spirit is as good as its English."

*The Rev. G. H. Lamb* :—"..........This is certainly a book to be read by all Western lovers of India."

*The Madras Mail* :—"..........The story is told in a simple and straightforward manner, and in easy, flowing English, being mainly intended for students.

*The Modern Review* :—" It is just the book for boys to read..........The book fills a real gap and should prove highly useful to students all over India.........

*The New India* :—"......The free and easy manner of narration adds clearness to the simple chaste expression of language......"

*The Progress*.—" These books are not mere dry compendiums, and though meant for schools, they can be read with enjoyment by those who have passed the school going age. The Ramayana is given in considerable de... and the reader of either book has the whole story."

**"Panchamritam" Office—Mylapore, Madras**